# தமிழரசு

ஜூன் 16 – 30, 2000 ரூ. 5





ஈரோடு மாவட்டம் - பவானி



கன்னியாகுமரி மாவட்டம் - காந்திபுரம்



பெரம்பலூர் மாவட்டம் - இலம்பாலூர்



திருவள்ளூர் மாவட்டம் - சோழவரம்



விருதுநகர் மாவட்டம் - தயிலப்பட்டி



தென்னம்பட்டி



மதுரை மாவட்டம் - அலங்காநல்லூர்



தஞ்சை மாவட்டம் - சுந்தரபெருமாள்கோயில்



நீலகிரி மாவட்டம் - உபதலை



கோவை மாவட்டம் - காரமடை



திருவள்ளூர் மாவட்டம்



நாகப்பட்டினம் மாவட்டம் - கோனேரிராஜபுரம்

# கலைஞர் அரசில்

## கிராமங்கள்தோறும் கான்கிரீட் சாலைகள்

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2031
ஆனி
ஜூன் 16–30, 2000
மலர் : 31 இதழ் : 24
விலை ரூ.5

முதல் பக்க அட்டையில்

**கி.ஆ.பெ. விசுவநாதம் அரசு மருத்துவக் கல்லூரி, திருச்சி**

இரண்டு மற்றும் மூன்றாம் அட்டையில்

**கிராமங்கள்தோறும் கான்கிரீட் சாலைகள்**

நான்காம் அட்டையில்

**மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கரூர் மற்றும் நாமக்கல்**

## இந்த இதழில்...


- திருச்சியில் கி.ஆ.பெ. விசுவநாதம் அரசு மருத்துவக் கல்லூரி ---------- 2
- ஊரக வளர்ச்சிப் பணிகள் ---------- 5
- தாய்மொழியில் கல்வி ஏன் வேண்டும்? ---------- 15
- கிராமங்கள்தோறும் கான்கிரீட் சாலைகள் ---------- 17
- கல்கத்தா - மும்பையில் தமிழ் மையம் ---------- 18
- நான்காண்டு காலத்தில் 10 மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் ---------- 19
- சுற்றுச் சுவர்களுடன் கல்நார் கூரை வீடு ---------- 20
- முதுகு வலியைப் போக்க... ---------- 21
- மனித யந்திரம் ---------- 23
- ஓசூரில் ஒரு சாதனை ---------- 30
- திருப்பெரும்புதூர் களிமண் படிவங்கள் ---------- 31
- டேனிடா குடிநீர் மற்றும் சுகாதாரத் திட்டம் ---------- 36
- கதவைத் தட்டும் வாய்ப்பு ---------- 38


---

### திருக்குறள்

*நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்*
*வாய்நாடி வாய்ப்பச் செயல்.*

**நோய் என்ன? நோய்க்கான காரணம் என்ன? நோய் தீர்க்கும் வழி என்ன? இவற்றை முறையாக ஆராய்ந்து சிகிச்சை செய்ய வேண்டும். (உடல் நோய்க்கு மட்டுமின்றிச் சமுதாய நோய்க்கும் இது பொருந்தும்).**

***– கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து...***

# திருச்சியில்
# கி. ஆ. பெ. விசுவநாதம்
# அரசு மருத்துவக் கல்லூரி

**– விழாவில் முதலமைச்சர் கலைஞர்**

கி.ஆ.பெ.விசுவநாதம் என்பது ஒரு தனி மனிதருடைய பெயரல்ல. இந்தத் தென்னகத்தில் வளர்ந்த தமிழ் இயக்கத்தினுடைய வரலாற்றுக் கூறு. அதனுடைய மொத்தப் பதிப்பு தான் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்கள்.

சின்னஞ்சிறு வயது முதல் நான் அவர்களை அறிவேன். மாணவப் பருவத்திலே, நான் மொழிப் போராட்டத்தில் ஈடுபட்ட அந்தக் காலக் கட்டத்தில் அத்தகைய தூண்டுதல் எனக்கு ஏற்படுத்தியவர்களுள் அண்ணன் கி.ஆ.பெ. அவர்களும் ஒருவராவார். தந்தை பெரியார் அவர்களோடும், பேரறிஞர் அண்ணா அவர்களோடும் கலந்து திராவிட இயக்கத்தை தமிழகத்திலே வளர்ப்பதற்கு அடிகோலியவர். அதன் பிறகு அவர்கள் அந்த இயக்கத்திலே நிலைத்து நிற்காமல் வேறு வழி சென்றாலும் அவ்வழியும் தமிழை வாழ வைக்கின்ற வழியாக, தமிழுக்கு ஏற்றம் தருகிற வழியாக அமைந்து தமிழகத்தில் எல்லா துறைகளிலும் தமிழ் மணம் கமழ வேண்டுமென்று விரும்பியவர் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள்.

சுயமரியாதை இயக்கத்தை வளர்த்த பெருமை பலருக்கு உண்டென்றாலும், அதில் சிறப்பான பெருமைக்குரியவர் முத்தமிழ்க் காவலர் அவர்கள். நீதிக் கட்சியில் சுயமரியாதை இயக்கத்தில் அடியெடுத்து வைத்து தொண்டாற்றிய அந்தக் காலத்தில், திருச்சியிலே விசுவநாதம் என்று ஒருவர் இருக்கிறார் என்று சொல்வார்கள். அவரைப் பற்றி திருச்சியில் வந்து விசாரித்தால், "விசுவநாதம் பிள்ளை வீடா?" என்று கேட்பார்கள், இப்போது என்னவோ முதலியார் என்று சொல்லிக் கொள்கிறார்கள். அப்போது விசுவநாதன் பிள்ளை என்று தான் சொல்வார்கள். அந்த 'பிள்ளை' என்ற பட்டப்பெயரை விட்டுவிட்டு வெறும் விசுவநாதம் ஆக – கி.ஆ.பெ.விசுவநாதம் ஆக மாறி– பிறகு தமிழ் மக்களால் 'முத்தமிழ்க் காவலர்' என்று மகுடம் சூட்டப்பட்டு எனக்கு அண்ணனாகத் திகழ்ந்தார். மறைந்தும் மறையாத அந்த மாணிக்கம் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்கள்.

இங்கே ஒரு மருத்துவக் கல்லூரி வேண்டும் என்பதற்காக அவர் பட்ட பாடு கொஞ்ச நஞ்சமல்ல. எத்தனையோ முறை என்னைச் சந்திருக்கிறார். என்னை மாத்திரமல்ல, யார் தமிழகத்தின் முதலமைச்சராக பதவி ஏற்கிறார்களோ அவர்களையெல்லாம் சந்தித்து, "திருச்சியில் மருத்துவக் கல்லூரியை தொடங்க நான் இவ்வளவு முயற்சிகளை எடுத்திருக்கிறேன். அந்த முயற்சி முற்றுப்பெற நீங்கள் உடனடியாக ஆவன செய்யுங்கள்" என்று எல்லா முதல் அமைச்சர்களிடமும் படையெடுத்து – அவைகள் எல்லாம் பயனற்றுப் போயின. எனினும் அவருடைய கனவை நிறைவேற்ற வேண்டும் என்கிற உணர்வோடு – இந்த அரசு இந்த மருத்துவக் கல்லூரியை இங்கே உருவாக்கியிருக்கிறது.

இந்த மருத்துவக் கல்லூரி இங்கே உருவாக நான் தான் காரணம் என்று சொன்னார்கள். கி.ஆ.பெ.விசுவநாதம் பெயரால் உருவாவதற்கு நான் காரணமாக இருக்கலாம். ஆனால் கல்லூரி உருவாக வேண்டும் என்று விரும்பிய என்னுடைய எண்ணத்தை ஈடேற்றிய அந்தப் பெருமை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஆர்க்காடு வீராசாமி அவர்களுக்கும், ஒரு அருமையான கட்டடத்தை மருத்துவக் கல்லூரியாகக் கூட அல்ல, ஒரு பல்கலைக்கழகம் போலவே இங்கே கட்டி, எனக்கு காட்சி தருகிற வகையில் அதை உருவாக்கியிருக்கின்ற பொதுப்பணித் துறை அமைச்சர் தம்பி துரைமுருகனுக்கும், இதற்கான முயற்சிகளில் அரும்பாடு பட்டு, தினந்தோறும் ஓயாதுழைத்த தம்பி நேருவிற்கும், கண்ணும் கருத்துமாக இந்தப் பணியிலே ஈடுபட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் மூர்த்தி அவர்களுக்கும் பொதுப்பணித் துறை பொறியாளர்களுக்கும் என்னுடைய பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் இந்த நல்ல நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுக்கெல்லாம் என்னுடைய பாராட்டுக்கள், வாழ்த்துக்கள்.

ஏனென்றால், திருச்சியில் மாத்திரமல்ல, தென்னகத்திலேயே எந்தவொரு நகரத்திலும், எந்தவொரு மாவட்டத் தலைநகரத்திலும் ஏன் மாநில தலைநகரத்திலும் கூட இப்படியொரு கல்லூரி இவ்வளவு அழகாக, எழிலார்ந்த முறையில் கட்டடக்கலையின் எல்லா சிறப்புக்களையும் பெற்று அமையவில்லை என்பதை நெஞ்சை நிமிர்த்தி என்னால் சொல்ல முடியும். அந்தப் பெருமையை திருச்சிக்கு தந்துள்ள அமைச்சர்களுக்கும், அதிகாரிகளுக்கும் நான் மீண்டும் மீண்டும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**திட்டங்களை நிறைவேற்றுவதில் முதலிடம் வகிக்கும் திருச்சி மாவட்டம்**

திருச்சியைப் பொறுத்து என்னிடத்தில் ஒரு பட்டியல் வழங்கப்பட்டுள்ளது. அது முழுக்க முழுக்க உண்மையான சரியான பட்டியல்.

திருச்சி மாவட்டம் மூர்த்தி அவர்களுடைய நிர்வாகத்தில் சிறுசேமிப்பு இயக்கத்தில் தமிழகத்தில் முதல் இடத்தைப் பெற்றுள்ள மாவட்டம். கொடி நாள் வசூலில் தமிழகத்தில் முதல் இடத்தைப் பெற்றுள்ள மாவட்டம் திருச்சி மாவட்டம். அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திலும் முதல் இடத்தைப் பெற்றுள்ள மாவட்டம் திருச்சி மாவட்டம். பொது விநியோக முறையில் முதல் இடத்தைப்


பெற்றுள்ள மாவட்டம். குழந்தை தொழிலாளர் சீரமைப்பில் இந்தியாவிலேயே பிற மாநிலங்களுக்கு முன் மாதிரி மாவட்டமாகத் திகழ்வது திருச்சி மாவட்டம்.

ஒருங்கிணைந்த ஊட்டச்சத் துணவு திட்டத்தில் முதல் இடம் பெற்றுள்ள மாவட்டம் திருச்சி மாவட்டம். கட்டட மையத்தில் இந்தியாவில் இரண்டாவது இடம் – தமிழகத்தில் முதல் இடம் பெற்றுள்ள மாவட்டம்; ஊனமுற்றோர் மறுவாழ்வில் முதலிடம் பெற்றுள்ள மாவட்டம்; வீட்டுமனைப் பட்டா வழங்குவதில் முதல் இடத்தைப் பெற்றுள்ள மாவட்டம், பட்டா மாறுதல் செய்யும் பணியில் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ள மாவட்டம். ஊரக இளைஞர் விளையாட்டு மையங்களை நிறுவுவதிலும், முதல் இடம் பெற்றுள்ள மாவட்டம், நல்ல கலெக்டரைப் பெற்றுள்ள மாவட்டங்களிலும் திருச்சியும் ஒரு மாவட்டம் என்று குறிப்பிட்டு நான் அவரைப் பாராட்ட கடமைப் பட்டிருகிறேன்.

**எதிர்கால ஒளிவிளக்குகளாக மாணவர்கள் திகழவேண்டும்**

திருச்சி மாநகருக்கு எழிலார்ந்த ஒரு கட்டடத்தைத் தந்தது மாத்திரமல்ல. அதிலே பயிலுகின்ற மாணவர்கள் எதிர்கால ஒளிவிளக்குகளாகத் திகழ வேண்டும் என்கிற எதிர்பார்ப்போடு இந்தக் கட்டடம் இங்கே திறந்து வைக்கப்பட்டிருக்கின்றது. அப்படி அந்த மாணவர்கள் திகழ்ந்தால் தான் இந்த மருத்துவக் கல்லூரிக்கு எந்த முத்தமிழ்க் காவலர் பெயர் சூட்டப்பட்டிருக்கிறதோ அவருக்குப் பெருமை யார் இதைத் திறந்து வைத்திருக்கிறோமோ அந்த அமைச்சர்களுக்குப் பெருமை. முதல் அமைச்சராக இருக்கிற எனக்குப் பெருமை. அந்த மாணவர்களை தமிழகத்திற்கு ஈன்றளித்த பெற்றோர் களுக்குப் பெருமை. அவர்களுக்கு பயிற்சி தந்த ஆசிரியர்களுக்குப் பெருமை. அந்த வகையிலே மாணவர்கள் ஒத்துழைக்க வேண்டும். நல்ல பெயரைத் தேடித்தர வேண்டும். இந்த மருத்துவக் கல்லூரிக்கு என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மருத்துவத் துறையில் இந்த ஆட்சியைப் பொறுத்த வரையில் முன்னேற்றமான – விஞ்ஞான ரீதியான பல திட்டங்களையெல்லாம் இன்றைக்குப் பயன்படுத்தி வருகிறது என்பதை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் இங்கே கோடிட்டுக் காட்டினார். அந்தத் திட்டங்களை நாட்டு மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பயன்படுத்திக் கொள்ளத் தெரியாத, இன்னும் அதைப் பற்றி அறியாத மக்கள், நகர்ப்புறத்திலே அதிகமாக இல்லாவிட்டாலும் கூட, நாட்டுப்புறங்களில், கிராமப்புறங்களில் ஏராளமாக இருக்கிறார்கள்.





“ தமிழகத்தில் எல்லா துறைகளிலும் தமிழ் மணம் கமழ வேண்டுமென்று விரும்பியவர் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம். ”

**வருமுன்காப்போம் திட்டத்தில் 3,667 முகாம்கள்**

அவர்களுக்கெல்லாம் வழி காட்டத் தக்க வகையிலே தான் கடந்த ஆண்டு வருமுன் காப்போம் என்கிற ஒரு திட்டத்தை இந்த அரசு அறிமுகப்படுத்தி அந்தத் திட்டத்தின்படி இன்றைக்கு பல இடங்களில் முகாம்களை ஏற்படுத்தி அந்த 3,667 முகாம்களுக்கு 33 இலட்சத்து 3,021 பேர் வருகை தந்து பரிசோதனை செய்து கொண்டிருக்கிறார்கள். இதிலே தொடர் சிகிச்சைக்காக பக்கத்திலே உள்ள பெரிய மருத்துவமனைகளுக்கு அனுப்பப்பட்டவர்கள் ஒரு இலட்சத்து 97 ஆயிரத்து 452 பேர்.

இவர்கள் எல்லாம் தங்களுக்கு என்ன வியாதி வரக்கூடும் என்று அறியாமல் இருந்தவர்கள். அல்லது வந்த பிறகு கூட என்ன வியாதி வந்திருக்கிறது என்று தெரியாமல் கிராமப்புறத்திலே சுருண்டு கிடந்தவர்கள். அவர்களையெல்லாம் நேரிலேயே சென்று அரசுத்துறை மருத்துவர்கள் சந்தித்து – பரிசோதித்து சிகிச்சை அளித்திருக்கிறார்கள். முகாம்களிலே சிகிச்சை போதாது – பெரிய மருத்துவமனையிலே தான் சிகிச்சை பெற வேண்டுமென்ற நிலை இருக்குமேயானால் அந்த இடங்களுக்கு அவர்களை அனுப்பி வைக்கும் வழி வகைகளைச் செய்து இன்றளவும் அந்தத் தொண்டினை செய்து வருகின்ற அரசு தான் உங்கள் அரசு.

நான் இரண்டு நாட்களுக்கு முன்பு நாமக்கல் சென்றிருந்தேன். நாமக்கல்லில், இந்த திட்டத்தை எப்படி செயல்படுத்துகிறோம் என்பதை அந்த மாவட்ட ஆட்சித்தலைவர் என்னிடத்திலே விவரித்து அதற்கான விளக்க கையேட்டை என்னிடத்திலே தந்தார்.

அதிலே உள்ள புகைப்படங்களைப் பார்த்தேன். நாமக்கல் வருமுன் காப்போம் முகாமிற்கு வந்த ஒரு பெண்மணிக்கு வயிற்றிலே கட்டி இருக்கிறது. அந்த அம்மையாரால் வயிற்றை வலிக்கிறது என்று தான் சொல்ல முடிந்தது. அதுகூட நாம் நேராகச் சென்று அவரை முகாமிற்கு அழைத்து வந்து பரிசோதித்த பிறகு தான் தெரிந்தது. அங்கே எக்ஸ்ரே எடுத்தார்கள். வயிற்றுக்குள் பெரிய கட்டி இருப்பதைத் தெரிந்து கொண்டார்கள். உடனடியாக நாமக்கல் மருத்துவமனைக்கு அவரை முகாமிலிருந்து அழைத்துச் சென்றார்கள். அங்கே அறுவை சிகிச்சை நடைபெற்றது. அவருடைய தலையைவிட பெரிய கட்டி கர்ப்பப் பையிலே இருந்ததை அறுவை சிகிச்சை மூலம் எடுத்திருக்கிறார்கள். அதையெல்லாம் புகைப்படம் எடுத்து என்னிடம் காட்டினார்கள். நான் எண்ணிக் கொண்டேன். எவ்வளவு பயனுள்ள ஒரு காரியத்தை இந்த வருமுன் காப்போம் திட்டத்தின் மூலம் நாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம் என்பதை எண்ணி எனக்கு நானே மகிழ்ச்சியடைந்தேன். ஆறுதல் பெற்றேன்.

இப்படி பல தாய்மார்களுடைய நலன் காக்க– அவர்களுக்கு வந்துள்ள நோய் என்ன என்பதை அறிந்து கொள்ள– அறிந்த பிறகு அதைத் தீர்த்து வைக்க – வருவதற்கு முன்பே வராமல் தடுக்க இருக்கக்கூடிய திட்டம் தான் வருமுன் காப்போம் திட்டமாகும். அந்தத் திட்டமும் இந்த ஆட்சியிலே மருத்துவத் துறையிலே ஒரு பிரிவாக இன்றைய தினம் உங்களிடத்திலே கடைப்பிடிக்கப்படுகிறது. அதையும் தமிழ்நாட்டு மக்கள் நல்ல முறையிலே ஆதரித்து வருகிறார்கள். அவர்களுடைய ஆதரவு இன்று போல் என்றென்றும் எங்களுக்கு இருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

அந்த ஆதரவின் அடிப்படையிலே தான் திருச்சி மாநகரத்தில் இந்த அளப்பரிய பெருமை வாய்ந்த அழகான அரண்மனை போன்ற கட்டடத்தை மருத்துவக் கல்லூரிக்காக நாம் கட்டியிருக்கிறோம். இந்த கட்டடத்திலே பயிலுகின்ற மாணவர்கள் எதிர்கால ஒளிவிளக்காக தமிழகத்திலே திகழ வேண்டுமென்று அவர்களையெல்லாம் வாழ்த்தி இந்த நல்ல விழாவிலே கலந்து கொண்டு அண்ணன் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் பெயரால் ஒரு கல்லூரியை திறந்து வைத்ததிலே நான் மிகுந்த மகிழ்ச்சியடைந்து விடைபெற்றுக் கொள்கிறேன்.

– திருச்சியில்
கி.ஆ.பெ. விசுவநாதம் மருத்துவக்
கல்லூரிக் கட்டடத்தை
திறந்துவைத்து
26–6–2000 அன்று ஆற்றிய
உரையிலிருந்து...

★ ★ ★

தமிழகத்திலுள்ள மொத்த மக்கள் தொகையில் 65 சதவிகிதம் கிராமப்புறங்களில் உள்ளனர். கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதையும், ஊரகப் பகுதிகளில் கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துவதையும் குறிக்கோளாகக் கொண்டு கிராமப்புற வளர்ச்சிக்காக ஊரக வளர்ச்சித் துறையின் நிதி ஒதுக்கீட்டை, இந்த அரசு ஆண்டுதோறும் கணிசமாக உயர்த்தியுள்ளது. 1995–96–இல் ரூ.373.02 கோடியாக இருந்த ஊரக வளர்ச்சித்துறையின் ஒதுக்கீட்டை, 1996–97–இல் ரூ.494.76 கோடியாகவும், 1997–98–இல் ரூ.787.90 கோடியாகவும், 1998–99–இல் ரூ.1,185.63 கோடியாகவும், 1999–2000–இல் ரூ.1,225.73 கோடியாகவும், 2000–2001–ஆம் ஆண்டிற்கு ரூ.1,317.94 கோடியாகவும் உயர்த்தியுள்ளது.

கிராமப்புற வளர்ச்சியை கருத்தில் கொண்டு, மாநில அரசு தனது நிதியிலேயே முழுமையான, கிராம வளர்ச்சிக்கான "அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்", மக்களை நேரடியாக திட்ட செயலாக்கத்தில் ஈடுபடுத்த வழிவகுக்கும் "நமக்கு நாமே திட்டம்" தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை முன்னுரிமைப்படி தெரிவு செய்து செயல்படுத்த சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், சமத்துவம், சகோதரத்துவத்தை மக்களிடையே ஏற்படுத்த ஏதுவாக "சமத்துவபுரம்" போன்ற முன்னோடித் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

### கடந்த நான்கு ஆண்டுகளில், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல்

ஊரகப் பகுதிகளில், 1,75,965 கைப்பம்புகளும், 37,956 விசைப்பம்புகளும், 461 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களும் உள்ளன. ஊரகப் பகுதிகளில், குழாய் மூலம் குடி தண்ணீர் வழங்குவதற்கான திட்டங்கள் வழக்கமாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் விரைவுபடுத்தப்பட்ட குடிநீர் வழங்கல் திட்டம், மற்றும் குறைந்தபட்ச தேவைகள் திட்டம், ஆகியவற்றின் கீழ் செயல்படுத்தப்படுகின்றன. இருந்தபோதிலும், குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்குவதை விரிவாக்கம் செய்வது மற்றும் கைப்பம்புகள் பொருத்துவது முதலானவை கிராம ஊராட்சிகளால் மேற்கொள்ளப்படுகின்றன. 28 மாவட்டங்களில் உள்ள 5,642 குடியிருப்புகளை உள்ளடக்கிய வகையில் செயல்படுத்தப்படும், 461 கூட்டுக் குடியிருப்புத் திட்டங்கள் நீங்கலாக, விசைப்பம்புகள் உள்ளிட்ட எஞ்சிய அனைத்து குடிநீர் விநியோகத் திட்டங்களும் உள்ளாட்சி அமைப்புகள் மூலமே பராமரிக்கப்பட்டு வருகின்றன. போதுமான குடிநீர் ஆதாரம் இல்லாத குடியிருப்புகள், ஆகியவற்றில் போதுமான குடிநீர் ஆதாரங்களை ஏற்படுத்தும் நோக்கத்துடன், கடந்த 4 ஆண்டுகளில் பல்வேறு திட்டங்கள், தமிழ்நாடு வடிகால் வாரியத்தின் மூலம் ஊரகப்பகுதிகளில் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதுதவிர, உள்ளாட்சிகளில் கீழ்க்கண்டுள்ளவாறு புதிய கைப்பம்புகள் நிறுவப்பட்டுள்ளன.

| வருடம் | எண்ணிக்கை |
|---|---|
| 1996–97 | 4,765 |
| 1997–98 | 8,349 |
| 1998–99 | 7,733 |
| 1999–2000 | 11,084 |




# ஊரக வளர்ச்சிப் பணிகள்

இரமேஷ் சந்திரபண்டா, இ.ஆ.ப.,
செயலர், ஊரக வளர்ச்சித்துறை

கிராமங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட பெரிய அளவிலான முயற்சிகளை அரசு மேற்கொண்டுள்ளது. மேலும் நகரப்பகுதிகளில் உள்ள வசதிகளைப் போன்றே, கிராம ஊராட்சிப் பகுதிகளிலும் குடிநீர் வழங்கல் வசதிகளை ஏற்படுத்த அரசு முனைப்பாக நடவடிக்கைககளை மேற்கொண்டுள்ளது. அதன் அடிப்படையில் தான், ஊரகப் பகுதிகளில் வாய்ப்புள்ள இடங்களில் வீடுகளுக்குக் குடிநீர் இணைப்பு வழங்கிட அனுமதித்து, முதன் முறையாக **9–12–98**இல் அரசாணை வழங்கியுள்ளது. ஊரகப் பகுதிகளில், **8,49,446** வீடுகளுக்குக் குடிநீர் இணைப்பு வழங்கிட வாய்ப்புள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, விதிமுறைக்குப் புறம்பான முறையில் உள்ள குடிநீர் இணைப்புகளில் **2,19,639** குடிநீர் இணைப்புகளை முறைப்படுத்திடவும், எஞ்சியுள்ள **1,04,887** இணைப்புகளைத் துண்டித்திடவும், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் இணைப்பு ஒன்றுக்கு ரூ.**1,000** வீதம் மொத்தம் ரூ.**84.90** கோடி திரும்பச் செலுத்தப்படாத வைப்புத் தொகையாக, உள்ளாட்சி நிறுவனங்களுக்கு நிதி ஆதாரம் கிடைக்கப்பெறும். அத்துடன், குடிநீர் இணைப்பு பெற்றுள்ள வீடு ஒன்றுக்கு ரூ.**30** வீதம், மாதாந்திர குடிநீர் கட்டணமாக, நிதி ஆதாரம் திரட்டவும் வழிவகை உள்ளது. பயனுள்ள பணிகளின் வாயிலாக, உள்ளாட்சி நிறுவனங்களின் நிதி ஆதாரத்தை அதிகரிக்கச் செய்யும் அளவில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் இது முதன்முறையான நடவடிக்கையாகும்.





எனினும் அ) மிகக் குறைந்த நிலத்தடி நீர் ஆதாரத்தைக் கொண்ட கடின கற்பாறைகள் நிறைந்த பகுதிகளிலும் ஆ) உப்பு நீரால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும் இ) புளோரைடினால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும், குடிநீர் ஆதாரத்தை மேம்படுத்துவதில் அரசுக்கு அதிக இடர்ப்பாடுகள் இருந்து வருகிறது. குடிநீர் பற்றாக்குறையுள்ள பகுதிகள் பெரும்பாலும் மேற்கூறப்பட்ட மூன்று இனங்களுக்குள் அடங்கியுள்ளமையால், அவ்விடங்களில் குடிநீர் வசதி ஏற்படுத்த அதிக அளவிலான முதலீடு செய்து மிகப் பெரிய அளவிலான திட்டங்களை நிறைவேற்ற வேண்டியுள்ளது. எனினும், அவ்வாறு தேவைப்படும் மிகப் பெரிய அளவிலான திட்டங்களை நிறைவேற்றி, குடிநீர் பற்றாக்குறையை அகற்றிட, தேவையான நிதிஆதாரத்தைத் திரட்டிட, அரசு தொடர்ந்து முயற்சி மேற்கொண்டு வருகிறது.

## தெரு விளக்குகள்

குடிநீருக்கு அடுத்த படியாக, மக்களுக்கு மிக இன்றியமையாதது தெரு விளக்குகள் அமைப்பது. எனவே, போதுமான தெருவிளக்குகள் இல்லாத குடியிருப்புகளில், தெருவிளக்குகளை அமைத்திட அரசு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. அத்துடன் பெரிய ஊராட்சிகள் ஒரு சிலவற்றில், சோடியம் ஆவி விளக்குகளை அமைத்து, விளக்கு வசதியினை மேம்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது.

**1996–97**–ஆம் ஆண்டில் மேற் கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி, **50,000** புதிய தெரு விளக்குகள் அமைக்க

வேண்டியிருந்தது. எனவே, 1997–98–ஆம் ஆண்டில் 27,907 தெருவிளக்குகள் அமைக்க ரூ.7.28 கோடி சிறப்பு நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டது. 1998–99–ஆம் ஆண்டில் 35,284 தெருவிளக்குகள் அமைக்க, சமன்பாடு மற்றும் ஊக்க நிதி மானியத்தில் இருந்து ரூ.12.60 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. பல்வேறு பிற திட்டங்களின் நிதியை ஒருங்கிணைத்து, 1996–97–ஆம் ஆண்டு முதல் 1999–2000–ஆம் ஆண்டு வரை 34,583 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டன. ஆக மொத்தம் 90,097 தெருவிளக்குகள் கடந்த நான்காண்டுகளில் அமைக்கப்பட்டன. 1998–99–ஆம் ஆண்டில் 10,000 தெருவிளக்குகளும்,1999–2000–ஆம் ஆண்டில் 2,000 தெருவிளக்குகளும், சோடியம் ஆவி விளக்குகளாக மாற்றப்பட்டுள்ளன. பத்தாவது நிதிக்குழு மானியம், பொதுநிதி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களின் கீழ் உள்ள நிதி ஆதாரத்தைப் பயன்படுத்தி, கூடுதலான தெருவிளக்குகளை அமைத்திட உள்ளாட்சி நிறுவனங்கள் முயற்சி மேற்கொண்டுள்ளன.


## சாலைகள் மற்றும் தெருக்கள்

கிராமப் பொருளாதார வளர்ச்சிக்கு ஊரகச் சாலைகள் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. தென் மாநிலங்களுக்கிடையே கேரள மாநிலத்திற்கு அடுத்தபடியாக, அதிக சாலை நெருக்கம் உடைய பெருமை தமிழ்நாட்டுக்கு உள்ளது. ஊரகப் பகுதிகளில் அனைத்துக் காலங்களிலும் பயன்படுத்தக்கூடிய நல்ல தளமுள்ள சாலை வசதிகளைக் கொண்ட தென் மாநிலங்களில் தமிழ்நாடு முதலாவதாக உள்ளது. கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்பில் உள்ள ஊரகச்சாலைகளின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, அவற்றை படிப்படியாக தார்ச்சாலைகளாக மாற்றுவது என 1989–ஆம் ஆண்டில் தமிழக அரசால் மிக முக்கியமான கொள்கை முடிவெடுக்கப்பட்டது. முதன் முறையாக, தமிழ்நாட்டில் கிராமங்களில் அதிக அளவில் சாலைகளை தார்ச்சாலைகளாக, மாற்ற நடவடிக்கைகள் துவக்கப்பட்டன. இந்த நடவடிக்கைகள் 1990–91–ஆம் ஆண்டிற்குப் பின்னர் நிறுத்தப்பட்டிருந்தது. இதனை, 1996–97–ஆம் ஆண்டில் மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. கடந்த நான்கு ஆண்டுகளில் கீழ்க் கண்டுள்ளவாறு கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களால் பராமரிக்கப்படும் சாலைகளை தார்ச்சாலைகளாக மாற்றிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

| வருடம் | கி.மீ. |
|---|---|
| 1996–97 | 5,713.80 |
| 1997–98 | 4,888.48 |
| 1998–99 | 6,314.69 |
| 1999–2000 | 3,982.97 |
| மொத்தம் | 20,899.94 |


சாலைகள் அமைப்பதில் உள்ளாட்சி நிறுவனங்களால் பின்பற்றப்பட்டு வந்த இளகிய கனத்திற்குப் பதிலாக, ஊரகச் சாலைகள் திட்டத்தின் கீழ், நெடுஞ்சாலைத்துறையில் அனுசரிக்கப்பட்டு வருவது போன்ற இறுகிய கனத்துடனேயே ஊராட்சி / ஊராட்சி ஒன்றிய சாலைகளை அமைப்பதென 1999–2000–இல் தமிழக அரசால் மிக முக்கியமான மற்றொரு கொள்கை முடிவு எடுக்கப்பட்டு, ஊரக வளர்ச்சித்துறையில் சாலைகள் இறுகிய கனத்துடனேயே அமைக்கப்படுகின்றன. 1989–90–ஆம் ஆண்டில் 4,418 கி.மீ. ஆக இருந்த ஊரகப் பகுதி தார்ச்சாலைகளின் நீளம் மேற்கூறப்பட்ட முயற்சி மற்றும் நடவடிக்கைகளின் காரணமாக 1999–2000–ஆம் ஆண்டில் 22,866 கி.மீ. ஆக உயர்ந்துள்ளது. வேளாண் விளைபொருட்களை சந்தைக்கு விரைவாக எடுத்துச்





செல்வதற்கு ஏதுவாக, முக்கிய மாவட்ட சாலைகள் மற்றும் இதர மாவட்ட சாலைகளுடன், கிராமங்களை இணைக்கும் வகையில், சாலைப் பணிகளுடன், சிறு பாலங்கள் மற்றும் கல்வெர்ட் பணிகளும் மேற்கொள்ளப் படுகின்றன. தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சி மற்றும் நபார்டு திட்டத்தின் கீழ், நெடுஞ்சாலைத் துறையின் ஊரகச் சாலைகள் பிரிவின் வாயிலாக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள், ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை தார்ச் சாலைகளாக மாற்றுவதற்கும் விரிவுபடுத்தப் பட்டுள்ளது. இதுவரை தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டம் மற்றும் நபார்டு திட்டத்தின் கீழ் **6,101.88** கி.மீ சாலைகளை தார்ச் சாலைகளாக மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**1999–2000** மற்றும் **2000–2001**–ஆம் ஆண்டுகளில் உள்ளாட்சி அமைப்புகளின் பொறுப்பில் உள்ள சாலைகளில் **11,651** கி.மீ. நீளத்திற்குரிய சாலைகளை தார்ச்சாலைகளாக மாற்றுவதென தமிழக அரசால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. **1999–2000**–ஆம் ஆண்டில் **3,982** கி.மீ. நீளத்திற்குரிய சாலைகள் தார்ச்சாலைகளாக மேம்படுத்த எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள **7,669** கி.மீ. நீளத்திற்குரிய சாலைகள் **2000–2001**–ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படும். நடைமுறையில் உள்ள பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின் கீழ், இப்பணிகள் மேம்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படுவதுடன், நபார்டு திட்டத்தின் ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.120 கோடி மற்றும் அரசுக் கடன் பத்திர வெளியீட்டின் மூலம் ரூ.100 கோடி திரட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இம்முயற்சிகளின் காரணமாக ஊரகச் சாலைகள் மேம்பாட்டிற்கென கணிசமான நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெறும்.



கிராமத்தில் உள்ள தெருக்களையும், சந்துகளையும் கான்கிரீட் தளத்துடன் கூடியதாக மேம்படுத்த **1999–2000**–ஆம் ஆண்டில் தமிழக அரசால் முக்கிய கொள்கை முடிவெடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டது. **1999–2000** மற்றும் **2000–2001** ஆகிய இரண்டு ஆண்டுகளில் **5,000** கி.மீ. நீளத்திற்குரிய கிராமத் தெருக்கள் மற்றும் சந்துகளை கான்கிரீட் தளமுடையதாக மேம்பாடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு மேம்பாடு செய்யப்பட்ட கான்கிரீட் தளமுடைய தெருக்கள் பலவகையான தேவைகளுக்கு பயன் அளிக்கக்கூடிய சொத்துக்களாக அமைவதால், மேற்கண்டவாறு கான்கிரீட் தளமுடைய தெருக்களாக மாற்றும் நடவடிக்கைகளுக்கு பொதுமக்களிடையே மிகுந்த வரவேற்பு உள்ளது. **1999–2000**–ஆம் ஆண்டில் **2,000** கி.மீ. வரையிலான தெருக்கள் மட்டுமே மேம்பாடு செய்ய



உத்தேசிக்கப்பட்டிருந்தாலும், 2,905 கி.மீ. நீளத்திற்குரிய தெருக்கள் மேம்பாடு செய்ய எடுத்துக் கொள்ளப்பட்டன. 2000–2001 – ஆம் ஆண்டில் 3,000 கி.மீ. நீளத்திற்குரிய தெருக்கள் எடுத்துக் கொள்ளப்படும். பொது மக்களின் ஒத்துழைப்பின் காரணமாக, நிர்ணயிக்கப்பட்ட 5,000 கி.மீ விட கூடுதலான சாதனையை அடைந்துவிடலாம் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

**ஊரக வீட்டு வசதி**

ஊரகப் பகுதி மக்களுக்கு எல்லா காலங்களிலும், குடியிருப்புக்கு உகந்த தரமான வீடுகளை அமைத்துத் தருவது அரசின் பிரதான நோக்கம். ஊரகப்பகுதி ஏழை மக்களுக்கு கான்க்ரீட் கூரையுடன் கூடிய இலவச வீடுகளை, முதலில் தமிழக அரசுதான் அறிமுகப்படுத்தியது. பல்வேறு திட்டங்களின் கீழ், 1988–89 வரை மாநில அரசே ஆதிதிராவிட மக்களுக்கு 1,00,658 வீடுகளை கட்டித்தந்துள்ளது. இந்த நடவடிக்கை மத்திய அரசால் எடுத்துக் கொள்ளப்பட்டு, இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் என்ற பெயரில் புதிய ஊரகக் குடியிருப்புத் திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டது. முந்தைய ஆண்டுகளில், இத்திட்டம் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், ஒரு துணைத் திட்டமாக செயலாக்கப்பட்டு வந்திருப்பினும் 1.4.1996–ஆம் தேதி முதல் தனியானதொரு திட்டமாக அறிமுகப்படுத்தப் பட்டது. இத்திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட வீடுகள் :

| வருடம் | வீடுகள் எண்ணிக்கை |
|---|---|
| 1996–97 | 71,615 |
| 1997–98 | 56,618 |
| 1998–99 | 46,018 * |
| 1999–2000 | 38,841 ** |

* குறைந்த பட்ச அடிப்படை வசதிகள் திட்டத்தின் கீழ் 4,688 வீடுகள் உட்பட

** 15,589 கச்சா வீடுகள் மேம்படுத்துதல் உள்பட

1999–2000 முதல் மத்திய அரசு இத்திட்டத்தின் கீழ் (அ) குடியிருக்க இயலாத கச்சா வீடுகளை, வீடு ஒன்றுக்கு ரூ.10,000 செலவினத்தில் மேம்படுத்துதல் மற்றும் (ஆ) வறுமைக் கோட்டிற்குச் சற்று மேல் உள்ள குடும்பங்களுக்கு மானியம் ரூ.10,000–த்துடன் மற்றும் ரூ.40,000 வரை கடனுதவியுடன் கூடிய, மானியத்துடன் கூடிய கடனுதவித் திட்டம் என இரு பகுதித் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. குடியிருக்க இயலாத கச்சா வீடுகள் திட்டத்தின் கீழ், மத்திய அரசால் அனுமதிக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டிற்கு மேல் தேவைப்பட்ட எஞ்சிய செலவினம் அனைத்தையும், மாநில அரசு நிதியில் இருந்து மேற்கொண்டு, குடியிருக்க இயலாத கச்சா வீடுகள் மேம்படுத்தல் திட்டத்தின் கீழான வீடுகளையும் புதிய வீடுகளாகவே கட்டித் தருவது என


மாநில அரசால் முடிவு மேற்கொள்ளப்பட்டு, நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 15,589 வீடுகளுமே புதிய கான்க்ரீட் வீடுகளாகவே கட்டப்பட எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. ஊரக வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், மாநில அரசால் போதுமான அளவில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாநில அரசின் 25 சதவிகித பங்குத் தொகையுடன் கான்கீரீட் கூரைக்கான கூடுதல் செலவினத்தையும், மாநில வரவு செலவுத் திட்டத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, இத்திட்டத்தின் கீழ் உள்ள செலவினத்தில் மாநில அரசின் சுமை மிக அதிகமானதாகும். தற்போதைய நிதி ஒதுக்கீடு பின்வருமாறு:


| | இனம் | செலவினம் ரூ. |
|---|---|---|
| 1. | மத்திய அரசு பங்கு | 15,000 |
| 2. | மாநில அரசு பங்கு | 5,000 |
| 3. | கான்க்ரீட் கூரை செலவினம் | 12,000 |
| | மொத்தம் | 32,000 |

மேற்கூறப்பட்ட முயற்சிகளோடு மட்டுமல்லாமல் 1997–98 மற்றும் 1998–99–ஆம் ஆண்டுகளில் ரூ.15 கோடி செலவில் 29,889 வீடுகள் பழுது பார்க்கப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளன. மேலும் ரூ.15 கோடி செலவில், 5,148 வீடுகள் புதுப்பித்து கட்டப்பட்டுள்ளன. 1998–99–ஆம் ஆண்டில் குறைந்தபட்ச அடிப்படை வசதிகள் திட்டத்தின் கீழ், 4,688 வீடுகள் புதியதாக கட்டப்பட்டுள்ளன. எனவே இந்த அரசின் இப்படிப்பட்ட சீரிய முயற்சிகளால், 7,30,550 வீடுகள் ஊரகப் பகுதிகளில் கட்டப்பட்டுள்ளன. அதுமட்டுமின்றி, வறுமைக் கோட்டிற்கு சற்றே மேற்பட்ட குடும்பங்கள் பயன்பெறும்அளவில், மானியத்துடன் கூடிய கடனுதவி திட்டத்தின் கீழ், 2,339 வீடுகளுக்கு நிதியுதவி 1999–2000–இல் அளிக்கப்பட்டுள்ளது.

**ஊரக சுகாதாரம்**

ஊரக சுகாதாரம் என்பது, கழிவறை வசதிகளை ஏற்படுத்துதல், கழிவுநீர் அகற்றல், திடப்பொருள் கழிவினை அகற்றுதல், கிராம சுற்றுப்புற சுகாதாரம் முதலான அம்சங்களைக் கொண்டது. கழிவறை வசதிகளை ஏற்படுத்துதல் தொடர்பாக தனிப்பட்ட நபர்களின் வீடுகளில் கழிவறைகள் அமைப்பதை ஊக்குவித்தல், சமுதாய கழிவறைகளைக் கட்டி பராமரித்தல், பள்ளிகள் மற்றும் சத்துணவு மையங்களில் கழிவறைகளை அமைத்தல் முதலானவற்றில், உள்ளாட்சி அமைப்புகளால் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கிராமங்களில், ஊரக சுகாதார வசதிகளை மேம்படுத்தும் அளவில் செயல்படுத்தும் திட்டங்களின் மத்திய அரசின் ஊரக சுகாதாரத் திட்டமானது மிகவும் முக்கியமானதாகும். இந்தத் திட்டமானது, 1986–ஆம்





ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. 1999–2000 – ஆம் ஆண்டில் இத்திட்டமானது திருத்தியமைக்கப்பட்டு, திருத்தியமைக்கப்பட்ட ஊரக சுகாதாரத் திட்டம் என பெயரிடப்பட்டுள்ளது. மாற்றியமைக்கப்பட்ட இத்திட்டத்தில் பெரிய அளவிலான மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளது. (அ) தனி நபர் வீட்டு கழிவறைக்கான மானியம் கழிவறை ஒன்றுக்கு ரூ.2,000 – த்திலிருந்து ரூ.500 ஆக கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளது. மற்றும் நிறுவனங்களுக்கான கழிவறைகளுக்கு மானியம் ரூ.18,000 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (ஆ) இலக்கீட்டின் அடிப்படையிலான ஒதுக்கீட்டிலிருந்து, மூன்று ஆண்டு காலத்தில் படிப்படியாக திட்ட அடிப்படையிலான ஒட்டு மொத்த சுகாதார இயக்கத்திற்கு மாறுதல் செய்யப்படும்.

திட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து மத்திய ஊரக சுகாதாரத் திட்டத்தின் கீழ் 3,49,591 தனிநபர் வீட்டுக் கழிவறைகள் கட்ட எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. கடந்த நான்கு ஆண்டுகளில் எடுத்துக் கொள்ளப்பட்ட கழிவறைகளின் விவரம் பின்வருமாறு:

| வருடம் | தனிநபர் கழிவறைகள் எண்ணிக்கை |
|---|---|
| 1996–97 | 26,136 |
| 1997–98 | 55,854 |
| 1998–99 | 47,827 |
| 1999–2000 | 1,36,130 |

1986–87–ஆம் ஆண்டிலேயே, தமிழக அரசு ஊரகப் பகுதிகளில் சமுதாயக் கழிவறைகளை கட்டுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த போதிலும், போதிய நீர் ஆதார வசதிகள் இன்மையால், மேற்படி நடவடிக்கைகள் பயனளிப்பதாக இல்லை. மேற்படி சமுதாய கழிவறைகள் முறையாகப் பயன்படுத்தப்படவில்லை. எனவே, அண்மைக் காலத்தில், உரிய தண்ணீர் வசதிகளுடன் கூடிய சமுதாயக் கழிவறைகளை கட்டுவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது.

**சாதனைகள்**

- ★ இந்த அரசு பொறுப்பேற்ற 13.5.96–ஆம் நாள் வரையில் முடிக்கப் பெறாமல் நிலுவையில் இருந்த 1,14,141 பணிகளை முடிக்க வேண்டிய கூடுதல் சுமை இந்த அரசுக்கு ஏற்பட்டது. நீதிமன்ற வழக்குகள் சம்பந்தப்பட்ட 171 பணிகளைத் தவிர, இதர பணிகள் அனைத்தும் தற்போது முடிக்கப் பெற்றுள்ளன.
- ★ வளர்ச்சிப் பணிகளில் புதிய தன் முயற்சியாக அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் போன்ற வளர்ச்சித் திட்டங்களை இந்த அரசு 1997–1998 முதல் அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது.
- ★ மாநில திட்டப்பணிகளுக்கான ஒதுக்கீடு 1993–94–ஆம் ஆண்டில் ரூ.50 கோடியாக இருந்தது, பல்வேறு மடங்காக அதிகரிக்கப்பட்டு 1999–2000–ஆம் ஆண்டு ரூ.475.60 கோடியாக ஒதுக்கப்பட்டுள்ளது.

★ கூடுதலாக ஒதுக்கீடு மற்றும் அதிக எண்ணிக்கையிலான நிலுவைப் பணிகள், இருந்த பொழுதிலும் 1996–97–ஆம் ஆண்டு முதல் 1999–2000–ஆம் ஆண்டு வரை 13.5.96–இல் அதற்கு முந்தைய ஆண்டு பணிகளில் நிலுவையாக இருந்த 1,14,141 பணிகளுடன் கடந்த நான்கு ஆண்டுகளில் புதியதாக எடுக்கப்பட்ட பணிகளையும் சேர்த்து 9,86,601 பணிகளில், 50,394 தவிர இதர பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

★ முழுமையான கிராம வளர்ச்சிக்கு வழிகோலும் புதுமையான திட்டமான அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், 1999–2000–ஆம் ஆண்டு வரை 634 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு ரூ.519.00 கோடி செலவில், 74,810 பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

★ 1997–98–ஆம் ஆண்டு புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட நமக்கு நாமே திட்டமானது, தேவைகளின் அடிப்படையில் மக்கள் பங்கேற்புடன் செயல்படுத்தப்படும் ஊரக வளர்ச்சித் திட்டமாகும். இத்திட்டம் மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ.107.96 கோடி மதிப்பீட்டில் ரூ.40.96 கோடி மக்கள் பங்களிப்புடன் பல்வேறு சமுதாயப் பணிகள் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ 1997–98–ஆம் ஆண்டு புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் ரூ.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த ஒதுக்கீடானது 1998–99–ஆம் ஆண்டில் ரூ.35 இலட்சமாகவும், 999–2000–ஆம் ஆண்டு ரூ.50 இலட்சமாகவும் உயர்த்தப்பட்டது. கடந்த மூன்று ஆண்டுகளில், இத்திட்டத்தின் கீழ் ரூ.257.97 கோடி மதிப்பீட்டில் 18,656 பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

★ கிராமப்புறங்களில் வாழும் ஏழைகளுக்கு, தீப்பிடிக்காத வீடுகள் கட்டித்தருவது என்பது மாநில அரசின் இலட்சியக் கொள்கையாகும். கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் அதாவது 1996–97–ஆம் ஆண்டு முதல் 1999–2000–ஆம் ஆண்டு வரை சுமார் 2,13,092 தீப்பிடிக்காத கான்க்ரீட் வீடுகள் கிராமப்புறங்களில் வாழும் ஏழைகளுக்காக கட்டித்தரப்பட்டுள்ளன.

★ இவ்வீடுகளுக்கு கான்க்ரீட் கூரை போடுவதற்காக வீடு ஒன்றிற்கு மாநில அரசால் வழங்கப்பட்ட ரூ.7,000ம், 1998–99 முதல் ரூ.12,000 ஆக உயர்த்தப்பட்டது.

★ தொடக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு கட்டடங்கள் கட்டித்தருவது தொடர்ந்து மாநில அரசின் முதன்மைப் பணியாக உள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில் 5,326 பள்ளிக் கட்டடங்கள் கட்டித்தரப்பட்டுள்ளன. 1999–2000–ஆம் ஆண்டில் மட்டும், 937 தொடக்க/நடுநிலைப்பள்ளிக் கட்டடங்கள் கட்டித்தரப்பட்டுள்ளன. மேலும், உயர்நிலை/மேல்நிலைப்பள்ளிகளுக்கு 737 புதிய வகுப்பறை கட்டிடங்கள் மற்றும் கணினி மையத்திற்கு உள் கட்டமைப்பு வசதியாக 552 கட்டடங்கள் ஆக மொத்தம் 1,290 கட்டடங்கள் ரூ.22.08 கோடியில் கட்டித்தரப்பட்டுள்ளன.

★ கடந்த நான்காண்டுகளில், 701 கிராம ஊராட்சிகளுக்கு, சொந்தக் கட்டடங்கள் கட்டித் தரப்பட்டுள்ளளன.

★ கடந்த நான்கு ஆண்டுகளில் 6,652 நியாய விலைக் கடைகளுக்கு சொந்தக்கட்டடங்கள் கட்டித் தரப்பட்டுள்ளன. 1999–2000–ஆம் ஆண்டில் மட்டும் 1,707 கட்டடங்கள் கட்டித் தரப்பட்டுள்ளன.

★ கடந்த நான்கு ஆண்டுகளில், அங்கன்வாடி மற்றும் சத்துணவு மையங்களுக்குத் தேவையான வசதிகளை அளிக்கும் பொருட்டு 1,406 மையங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டித்தரப்பட்டுள்ளன. 1999–2000–ஆம் ஆண்டில் மட்டும் 247 கட்டடங்கள் கட்டித்தரப்பட்டுள்ளன.

★ புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட சிறப்பு வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், தஞ்சாவூர், கடலூர், திண்டுக்கல், மதுரை, ஈரோடு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் தலா ஒரு கிராமத்தில் புதுமையான தொழில் நுட்ப யுக்திகளைப் பயன்படுத்தி மொத்தம் 556 வீடுகள் கட்டித்தரப்படவுள்ளன.

★ ஊரக சுகாதாரம் என்பது, மக்களுடைய வாழ்க்கைத் தரத்தின் முக்கியஅளவு கோலாகும். எனவே, இத்திட்டம் குறித்து தகவல், கல்வி மற்றும் தொடர்பு குறித்த முனைப்பு இயக்கங்களை இராமநாதபுரம், ஈரோடு, தருமபுரி மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் மாநில அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

★ திருத்தியமைக்கப்பட்ட மத்திய ஊரக சுகாதாரத் திட்டத்தின் கீழ், 1999–2000–ஆம் ஆண்டில் குறைக்கப்பட்ட மானியத்துடன் கடலூர், வேலூர், கோவை மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் ரூ.51.02 கோடி செலவில் செயல்படுத்தப்படுகிறது.

★ இத்திட்டம் ஆரம்பமானது முதல் 3,49,591 தனிநபர் கழிப்பிடங்களும், 404 சமுதாய கழிப்பிடங்களும், 3,209 நிறுவன கழிப்பிடங்களும் கட்டப்பட்டுள்ளன.

★ கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் டேனிடா (Danida) திட்ட நிதியுதவியுடன் சிறப்பு ஊரக சுகாதாரத் திட்டம், தேவை மற்றும் பங்கேற்பு அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை 4,749 தனிநபர்

கழிவறைகளும், குடிநீர் மற்றும் பொது கழிவறைகளும் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கீரப்பாளையம் கிராமம் 100 விழுக்காடு மாதிரி சுகாதார கிராமமாக திகழ்கிறது.

★ கிராம அடிப்படை வசதிகளை முறையாகப் பராமரிப்பதிலும் அடிப்படை விவரங்களைப் பயன்படுத்தி, பல்வேறு திட்டங்களை சிறப்பான முறையில் செயல்படுத்தவும், மாவட்ட அளவில் மற்றும் மாநில அளவில் கண்காணிக்கவும் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சி



ஒன்றியங்களிலும் கணிப்பொறி மயமாக்கும் பணி ரூ.19.50 இலட்சத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

★ கடந்த நான்காண்டுகளில் 35,596 நீர் ஆதாரப் பணிகள் (மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவுரையின்படி, 16.1.2000 அன்று மாநிலத்தில் உள்ள 12,619 கிராமங்களில் ரூ.6.31 கோடி நிதியுதவி வழங்கப்பட்டு (கிராமத்திற்கு ரூ.5,000 வீதம்) அய்யன் திருவள்ளுவர் நூலகங்கள் மற்றும் படிப்பகங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

★ பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டத்தின் கீழ் 66 சமத்துவபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளவை போக, மீதமுள்ள 84 சமத்துவபுரங்கள் நடப்பு நிதியாண்டில் அமைக்கப்படவுள்ளன.

● ● ●

# "தீண்டாமை"

**– முகவை சிவ இரவீந்திரன்**

தீண்டாமை பாவம், பெருங்குற்றம், தன்மையற்ற
செயலாகும்!
தீயவர்கள் தீயெரித்தல் சம்பவங்கள்
தெளிவாக்கும்!
தூண்டாமை நன்மையென சொன்னவர்கள்
துயர்நீக்க,
தொன்றுதொட்டுவந்தவர்கள் சொன்ன
சொல்லின் நிலையேற்று,
வேண்டாமேயென வேற்றுமையில் ஒற்றுமையை
நிலைநாட்டி,
வையகமும் வானகமும் உள்ளளவும்
நினைவூட்டி,
சான்றோர்கள் நந்தனையும் தில்லையிலே
உயர்வாக்கி,
தெய்வமக்கள் நாமம்தனை செல்லமாகச்
செயலேற்றார்!
ஆண்டோர்கள் அமலாக்க அண்ணல்காந்தி
தந்துவிட்டார்!
அம்பேத்கர் பட்ட அல்லல் அனுபவத்தில்
கண்டுவிட்டார்!

"கடையனுக்கும் கடைத்தேற்றம்" கண்டவர்கள்
போற்ற,
கலப்புமணமக்களுமே தங்கஇழை ஏற்றார்!
தடைகள்பல கடந்துவந்து சரித்திரங்கள்
படைத்தோர்,
தடைக்கல்லாய் முடங்கவைத்த சாத்திரங்கள்
உடைத்தார்!
உடையுண்டி உறையுள் மொழிபலவுள்
ஒருமைப்பாட்டை,
உலகமே வியந்துநோக்கும்(நம) தருமைநாட்டை!
குடைப்பிடித்து செருப்பணிந்து தலைநிமிர்ந்து
செல்லவிட்டார்!
குளம்கிணறுபயன்படுத்த நிலையுணர்ந்து
சொல்லிவிட்டார்!
நடைமுறைக்கு ஒவ்வாத நச்சரவாம் தீண்டாமை!
நலங்குலைக்கும் இழிசெயலாம், நம்மவர்க்கு
வேண்டாமே!

சத்துணவு பகலுணவு சீருடையும் சமத்துவமே!
சருக்காரின் பணியகங்கள், (கல்வி)கூடங்களில்
சமத்துவமே!
சொத்துரிமை அனைத்துரிமை தக்கபடி
தந்தாலும்,
சாதி அடிப்படையில் சலுகைபல தந்துவிட்டார்!
வித்தானசாதி விவரப் பட்டியலும்,
வருங்காலத்தலைமுறைகள் வருந்தாமல்
செய்திடுமோ?
வைக்கம் வீரரென்ற விருதாவின் பெரியாரும்,
வாரீசாம் அண்ணாவும் வெறுத்தார்கள்
அறியாமை!
முத்தான மணித்திட்டம் முதலமைச்சர்
கொண்டுவந்தார்,
முனைப்போடு செயலாற்றி முதலிடத்தை
வென்றிடுவோம்!●

சிறுவனாகப்
பென்சில் சீவும்போது
கசிந்த ரத்தம்
உண்மையாக இருந்தது.
இப்போது ஜாக்கிரதை உணர்வு
வந்துவிட்டது வயதுடன்
எஞ்சியது என்ன?
காயம்படாத கைவிரல்.
நிஜம் கசியாத கவிதை.

– கல்யாண்ஜி
"அந்நியமற்ற நதி" தொகுப்பிலிருந்து...



# தாய்மொழியில் கல்வி ஏன் வேண்டும்?

– முனைவர் க. முத்தையா

"மொழியென்பது ஒரு கருத்துப் புலப்படுத்தக் கருவி" என்ற கூற்று, மொழி குறித்துச் சொல்லப்படும் மேலோட்டமான விளக்கமாகும். 'ஒருவனின் தாய்மொழியென்பது அவன் பிறந்த மண்ணோடும், வாழும் சமூகத்தோடும் தொடர்பு கொண்டது. அவனது நிழலைப் போல அவனின் ஆளுமையிலிருந்து பிரிக்க முடியாதது. அவன்அச்சமூகத்தின், அவ்வினத்தின் உறுப்பினன். அவன் அவ்வினத்தின் ஆற்றலை, உணர்வுகளை, நினைவுகளை, வரலாறுகளை அவ்வினத்தின்மொழி வழியாகச் சொந்தம் கொண்டாடுகின்றான். எனவே தான், அவன் வாழும் சமுதாயத்தில் அவனின் பங்கு சமுதாயப் பங்காகிறது. இங்கு தான் மொழி என்பது அவனின் சமூகப் பண்பாட்டை வளர்த்தெடுக்கும் கருவியாகச் செயல்படுகிறது. சமூகத்தில் அம்மொழியின் பயன்பாட்டுத் தளங்கள் சுருங்கும்போது, அவ்வினத்தின் பண்பாட்டுத் தொடர்ச்சி சுருங்குகிறது, அல்லது அறுபடுகிறது. ஆகவே, தாய்மொழி வழிக் கல்வி என்பது ஒரு கல்வித் தத்துவம் என்பதோடு, சமூகப் பண்பாட்டு வளர்ச்சியையும், மன நிறைவையும் நோக்கமாகக் கொண்ட ஒன்று என்பது பெறப் படுகிறது.

வி.ஐ.இலெனின் தேசிய இன எழுச்சியின் வடிவமாக மொழியைப் பின் வருமாறு விளக்குகிறார். "மனித சமுதாயம் கூடிவாழ மொழி மிகவும் இன்றியமை யாத தாகும். பல்வேறு வகுப்புகளாகப் பிரிந்து உரிமையுடன் வாழ மொழி வளர்ச்சி தவிர்க்க இயலாதது. தேசிய மாநிலங்கள் அமைவதற்குப் பாடுபடும் ஒவ்வொரு தேசிய இயக்கமும் இந்த அடிப்படை மூலமே இன்றைய முதலாளித்துவச் சூழலில் பாடுபட வேண்டியுள்ளது. மொழி வளர்ச்சி பெறாத நிலையில் அந்த இலக்குகளைத் தேசிய இயக்கங்கள்அடைந்திட இயலாது.

இலெனின் குறிப்பிடும் மொழி வளர்ச்சி என்பது, சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும், அச்சமூகத்தின் மொழி இடம் பெறுதலைக் குறிப்பதாகும். ஒவ்வொரு இனமும், தனது மொழியின் வழியாகத் தான் தன் பரம்பரைக்கு வழிவழியாகப் பண்பாட்டு எண்ணத் தொடர்பை அடைகிறது. வேற்றுமொழி கல்வி மொழியாக அமைவது, "கருத்துப் புலப்படுத்தக் கருவி" என்ற அளவில் மட்டுமன்று, அம்மொழி பேசும் இனத்தின் பண்பாட்டுச் சாயலையும் அது வழங்குகிறது. இதனால், வேற்று மொழியோடு, வேற்று இனப்பண்பாட்டுக் கலப்பும் மேலோங்குகிறது. எதிர் நிலையில் தாய் மொழியும், அம்மொழி பேசும் இனத்தின் பண்பாடும் பின்னுக்குத் தள்ளப்பட்டுக் காலப் போக்கில் அழிந்து மறையும். இப்படி மறைந்த மொழிகளும், இனங்களும் உலகில் பலவுண்டு. எனவே, தாய்மொழிக் கல்வி என்பது, ஓர் இனத்தின் சமூகப் பண்பாட்டை நிலை நிறுவத்துவதற்கான இன்றியமையாத தேவையாக அமைகிறது.

கல்வியைச் சமூகப் படுத்தலின் முதற்கட்டப்பணி என்பது, தாய்மொழியில் கல்வி அளிப்பதாகும். கல்வியும், வாழ்வும் இணைந்தே இருத்தல் வேண்டும். இரண்டிற்கும் இடையே இடைவெளி இருந்தால், கல்வியினால் மக்களுக்குப் பயன் இல்லை என்பது பொருள். அத்தகைய கல்வித் திட்டம் தன் குறிக்கோளை நிறைவேற்றுவதில் தவறியதாகும். கற்கும் கல்வியும், கல்வியைப் பெறுவோரும் அவர்கள் வாழும் சமுதாயத்திற்கு ஒத்ததாகும், ஒத்துடையவர்களாகவும் இருக்க வேண்டுமாயின், அவர்களின் தாய் மொழியில் கல்வி அமைதல் வேண்டும். கல்வியைச் சமூகப்படுத்தலில் அச்சமூகத்தின் மொழி சிறப்பான பங்காற்றுகிறது.

ஆங்கிலேயர்கள் பெரும்பான்மையினராக வாழும், அவர்களே ஆட்சி செலுத்தும் அமெரிக்க ஐக்கிய நாடுகளில், ஆங்கிலம் பேசாத மக்களுக்கு அவர்களின் தாய்மொழியிலே கல்வி அளிக்க வேண்டும் என்று 1967இல் சட்டம் இயற்றப்பட்டது. இந்த சட்டம் வந்தபின் கல்வி கற்பவரின் தரத்தை ஆராய்ந்து கண்ட உண்மைகள் பின்வருமாறு:

1. தாய்மொழியில் கற்பவர்கள் விரைந்து கற்கின்றனர்.
2. அவர்தம் அறிவு தெளிவு பெற்றதாக உள்ளது.

கற்பிக்கப்படும் கல்விக்கும், கற்கும் சமூகத்திற்கும் தொடர்பு இருக்க வேண்டும் என்பதற்காக, ஆங்கிலேயர் பெரும்பான்மையினராக இருந்தும், ஆட்சியாளர்களாக இருந்தும், ஆங்கிலத்தை தாய்மொழியாகக் கொள்ளாதவர்களுக்கு அவரவர்களின் தாய்மொழியில் கல்வி அளிக்கப் பெறுகிறது. இங்கு நம் நாட்டு நிலைமையை எண்ணிப் பார்க்க வேண்டும்.

கவிஞர் தாகூர் பின்வரும் காரணத்திற்காகக் காந்தியடிகளுக்கு வணக்கம் செலுத்துகிறேன் என்றாராம். "நீங்கள் அரசியலுக்கு வருவதற்கு முன்னால் பல பெரியவர்கள் விடுதலைப்பற்றிப் பேசினார்கள். ஆனால்

அங்கு கூடியிருக்கும் கூட்டமோ பெரும்பகுதி, அவர்கள் பேசியதோ கோடிக்கணக்கான மக்களின் உரிமையைப்பற்றி அவர்களுக்கு ஆங்கிலத்தில் பேசினால் மக்களுக்குப் புரியுமா? ஆனால் நீங்கள் வந்தவுடன் அவர்களுடைய மொழியிலேயே அவருடன் உறவாடி பேசினீர்கள். மக்களும் புரிந்து கொண்டார்கள். அதனால் தான் வணக்கம் செலுத்துகிறேன்". இம்மேற்கோள், கல்வித் தத்துவத்திற்கு மட்டுமின்றி எவ்விதக் கருத்துத் தத்துவமாக இருப்பினும், புரிதலுக்கும், கருத்துப் பரவலுக்கும் சமூகத்தின் மொழியே உகந்தது என்பதைச் சுட்டி நிற்கிறது. எனவே, கல்வியின் பயன் சமூகத்தை எட்ட வேண்டுமாயின், அச்சமூகத்தின் மொழியில் கல்வி வழங்கப் பெறுதல் வேண்டும் என்பது பெறப்படுகிறது.

தாய்மொழி வழிக் கல்வியின் முதன்மையான செயற்பாடுகளில் ஒன்று கல்வியைப் பரவலாக்குதலாகும். குறிப்பிட்ட ஒரு சிலரோ, குறிப்பிட்ட சில இனங்களோ, கல்வி கற்க வேண்டும் என்று, இருந்தால் ஆங்கிலம் பயிற்று மொழியாக இருப்பதில் தடையில்லை. ஆனால், கல்வியை எல்லா மக்களும் பரவலாக்க விரும்பினால், அவர்களின் தாய் மொழியைப் பயிற்று மொழியாக்குவதன் மூலம் மட்டுமே அது இயலும். கல்வியைப் பரவலாக்குவதோடு, கல்வி வாயிலாகப் பெறும் வேலைவாய்ப்பைப் பரவலாக்குவதற்கும் தாய்மொழி வழிக்கல்வி பயன்படும்.

குறிப்பிட்ட சிலரிடமும், குறிப்பிட்ட சில, இன மக்களிடமும் மட்டுமே தங்கிவிடும் கல்வியைச் சமூகத்தின் எல்லா நிலை மக்களும், குறிப்பாக கீழ் நிலையிலுள்ள மக்களுக்கும் உரிய ஒன்றாக ஆக்குவதில் தாய்மொழி வழிக் கல்வி முக்கிய பங்காற்றும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். ஆகவே கல்வி, கல்விப்பயன் இவைகளைப் பரவலாக்குவதற்காகத் தாய்மொழி வழிக் கல்வி வேண்டப்படுகிறது.

அந்தந்த மாநிலத்தில் அந்தந்த மாநில மொழியில் கல்வி வழங்கப்படும் பொழுதுதான் கல்விக்காகச் செலவிடப்படும் செலவினங்கள் அந்த மாநில மக்களுக்குப் பயன்படுவதாக அமையும். மனிதவள மேம்பாடு குறித்துச் சிந்திக்கும் இற்றை நாளில் அந்தந்த மாநில மக்களுக்கு மனவலிமையும், அறிவுத் தெளிவும் ஏற்படுவதற்கு மாநில மொழிவழி கல்வி அல்லது தாய்மொழி வழிக் கல்வி என்பது கட்டாயத் தேவையாகிறது. தமிழுக்குரிய இடத்தை ஆங்கிலத்திற்கு மட்டுமின்றி வேறு எந்த மொழிக்கும் கொடுத்துவிட முடியாது.

தமிழகத்தே எங்கும் எல்லா நிலைகளிலும் தமிழ்வழிக் கல்வியே அமையவேண்டும். அந்தச் சூழல் உருவாகும் போது தான் தமிழ்நாட்டில் தமிழ் மக்களுக்கு வலிமை ஏற்படும். உயர் கல்வியைப் பொறுத்தவரை தங்களுக்கு உரிய இடத்தைப் பெறுவதற்காக மாநில மொழிகள் இன்னும் காத்துக் கொண்டிருப்பதால் ஆங்கிலம் பேசுபவர்களின் குத்தகையாகக் கல்வி மாறிவிட்டது. இப்போக்கு மாறவும் மாநிலமக்கள் முழு உரிமையுடன் வாழவும் தாய்மொழி வழிக் கல்வி இன்றியமையாத தேவையாகிறது.

நாட்டின் பெரும்பாலான மக்கள் தொழில்நுட்பம், பொருளுற்பத்தி, விற்பனை முதலியவற்றில் ஈடுபட்டுள்ளனர். நாட்டில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கும் பொருட்களின் உற்பத்தி, மற்றும் தரம் இவைகளைப் பெருக்குவதற்கும் மக்களிடம் மிகுதியான திறமை இருக்க வேண்டும். இப்பணிகளைச் சிறப்பாக செய்வதற்கு இவற்றில் சிறந்த அறிவுள்ளவர்கள் தேவை. இப்படிப்பட்ட அறிவுள்ளவர்களைத் தாய்மொழி வழிக் கல்வி மூலமாகத்தான் உருவாக்க முடியும். அதன் மூலமாகத்தான் தகுந்த வாய்ப்புக்களையும் நேரடி வாய்ப்புகளையும் ஒரு மாணவர் பெற முடியும். இன்று உலகில் முன்னேறிய நாடுகளாகக் கருதப்படும் பல நாடுகளின் உற்பத்தி முன்னேற்றத்திற்கு அங்கு நிலவும் தாய்மொழி வழிக் கல்வியை முதன்மையான ஏதுவாகப் பலரும் சுட்டியுள்ளனர். இவ்வாறு தாய்மொழி வழிக் கல்வி என்பது நாட்டு முன்னேற்றம் மற்றும் உற்பத்தி முன்னேற்றம் பற்றியதாக அமைகிறது.

மேற்குறித்தவாறு தாய்மொழி வழிக் கல்விக்கான ஏதுக்களை மேலும் விரித்துச் சொல்ல இயலும். தாய்மொழி வழிக் கல்விக்கான வலியுறுத்தல்களில் கல்வியியல் ஏதுக்களும் உளவியல் ஏதுக்களும் முதன்மைப்படுத்தப்பட்ட அளவு சமூகவியல் ஏதுக்கள் முன்மொழியப்படவில்லை. உளவியல், கல்வியியல் ஏதுக்களைவிடச் சமூகவியல் ஏதுக்களே தாய்மொழி வழிக் கல்வியின் உயிராக உள்ளது. ஏனெனில் மொழியென்பது சமூகத்தின் ஆணிவேர். இதைக்கல்வி வல்லுனர்கள் உணர்ந்து ஆக்க வழியில் தமிழைக் கல்வி மொழியாக்க முன் வரவேண்டும். இது தமிழர்களின் மொழி உரிமை மட்டுமன்று, சமூக உரிமை பண்பாட்டு உரிமையுமாகும். ●

## உண்மைக்கு உதாரணம்

ஒரு நாள் முல்லா, தம்மிடம் அறிவுரை கேட்பதற்காக வந்தவர்களிடம் உண்மையைப் பற்றி உபதேசம் செய்து கொண்டிருந்த போது, ''உண்மையின் மதிப்பு மிகவும் அதிகம்'' என்று சொன்னார்.

அதைக் கேட்ட சீடர்களில் ஒருவன், ''எப்படி அவ்வாறு சொல்கிறீர்கள்?'' என்று வினவினான்.

அதற்கு முல்லா, ''எப்படி என்றா கேட்கிறாய்? கூறுகிறேன். உலகில் அதிகமாகக் கிடைக்கும் பொருளுக்கு மதிப்பு குறைவாகவும், அதிகமாகக் கிடைக்காத பொருளுக்கு மதிப்பு அதிகமாகவும் உள்ளது. இதற்கு உதாரணம் இரும்பும், தங்கமும் ஆகும். உண்மையை இந்த உலகில் அதிகமாகக் காணமுடியாது. அரிதாகவே காண முடியுமாதலால், அதன் மதிப்பு அதிகம்'' என்று விளக்கம் சொன்னார்.

கிராமத்தில் உள்ள தெருக்களையும், சந்துகளையும் கான்கிரீட் தளத்துடன் கூடியதாக மேம்படுத்த 1999–2000–ஆம் ஆண்டில் தமிழக அரசால் முக்கிய கொள்கை முடிவெடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டது. அவ்வாறு கான்கிரீட் தளமுடையதாக மேம்பாடு செய்யப்பட்ட தெருக்கள், கதிரடிக்கும் தளம் போன்ற பலவகையான தேவைகளுக்கு பயன் அளிக்கக் கூடிய சொத்துக்களாக அமைவதாலும் மற்றும் மழைக் காலங்களில், மழைநீர் தேங்கி, சுகாதார சீர்கேடு ஏற்படுவதை தவிர்த்து, சுற்றுப்புற சூழ்நிலை சீர்கெடாமல் இருக்க உறுதுணையாக இருப்பதாலும், கான்கிரீட் தளம் உடைய தெருக்களாக மேம்படுத்தும் பணிகளுக்கு பொது மக்களிடையே மிகுந்த வரவேற்பு உள்ளது. எனவே, 1999–2000 மற்றும் 2000–2001 ஆண்டுகளில் சுமார் 5,000 கி.மீ நீளத்திற்குரிய தெருக்களை மேம்பாடு செய்ய முடிவெடுக்கப்பட்டு, 1999–2000–ஆம் ஆண்டில் 2000 கி.மீ., 2000–2001–ஆம் ஆண்டில் 3000 கி.மீ. தெருக்கள் மேம்பாடு செய்ய அறிவிக்கப்பட்டது. ஆனால் பொது மக்களிடையே இருந்த வரவேற்பு காரணமாக 1999–2000–ஆம் ஆண்டில் மட்டும், 2905 கி.மீ. நீளத்திற்குரிய தெருக்கள் சுமார் ரூ.203.35 கோடி மதிப்பீட்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம், வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டம், நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டம் போன்ற திட்டடங்களின் கீழ் சிமெண்ட் கான்கிரீட் தளமுடையதாக மேம்பாடு செய்ய எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

# கிராமங்கள் தோறும் கான்கிரீட் சாலைகள்



அத்துடன் நடப்பு (2000–2001–ஆம்) ஆண்டில் மேலும் 3000 கி.மீ. வரையிலான தெருக்களை சுமார் ரூ.232.50 கோடி மதிப்பீட்டில் மேற்கூறப்பட்டுள்ள பல்வேறு திட்டங்களின் கீழ் சிமெண்ட் கான்கிரீட் தெருக்களாக மேம்பாடு செய்ய அறிவிக்கப்பட்டு இதுவரை 1711.03 கி.மீ. கான்கிரீட் தெருவாக மாற்ற அனுமதிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.



★ ★ ★

# கல்கத்தா - மும்பையில் தமிழ் மையம்

தமிழ்நாடு அரசின் தமிழ் மையத்தைக் கல்கத்தா தேசிய உயர்நிலைப்பள்ளியில் தமிழ் ஆட்சிமொழி, பண்பாடு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் 1-2-2000 அன்று தொடங்கிவைத்தார். கல்கத்தாவில் தமிழ்ச்சங்க நிகழ்ச்சிகளுக்கு இதுவரை இவ்வளவு பேர் கூடியதே இல்லை என்று கல்கத்தா தமிழர்களே வியக்கும் வண்ணம் ஆயிரக்கணக்கில் மக்கள் குடும்பம் குடும்பமாக வந்திருந்தனர்.

விழாவில் சுப்பிரமணியம் கிருட்டிணமூர்த்தியின் வங்க மொழியாக்கத் திருக்குறள் நூலை அமைச்சர் முனைவர் தமிழ்க்குடிமகன் வெளியிட இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் துணைப் பொதுமேலாளர் திரு.கோமதிநாயகம் பெற்றுக் கொண்டார்.

விழாவில், கல்கத்தாத் தமிழர்களின் நீண்ட நாள் கனவு நிறைவேறுகிறது என்றும் தமிழர்கள் இருக்கும் இடம் தேடி வந்து தமிழ் வளர்க்கும் தமிழ்நாடு அரசின் பணி தாயன்புக்கு நிகரானது என்றும் பலரும் பாராட்டையும் நன்றியையும் தமிழ்நாடு அரசுக்கும் தமிழ் வளர்ச்சித் துறைக்கும் தெரிவித்தனர்.

அமைச்சர் தமிழ்க்குடிமகன் அவர்கள் தமது உரையில், தமிழ் கற்க விரும்புகிறவர்களுக்குத் தமிழைக் கற்றுத்தர அனைத்து வசதிகளையும் வழங்குவதோடு வாரம் தோறும் திருக்குறள் வகுப்பும் மாதந்தோறும் தமிழ் இலக்கியச் சொற்பொழிவுகளும் ஆண்டுக்கு ஒருமுறை கலை நிகழ்ச்சிகளும் வழங்கிடும் வகையிலும், தமிழ் மையத்தின் பணிகள் அமையும் என்றும், இசைப்பள்ளி ஏற்படுத்தப்படும் என்றும் தற்காலத் தகவல்தொடர்பு வசதிகளுக்கு ஏற்பத் தமிழ் பற்றிய அனைத்துத் தகவல்களையும் பெறும் மையமாக இது அமையும் என்றும் மேலும் சிறந்த வங்க மொழி நூல்களையும் தமிழ் மொழி நூல்களையும் மொழி பெயர்க்கப்படும் என்றும் தெரிவித்தார்கள்.

**மும்பையில்**

31.1.2000 அன்று தமிழ்நாடு அரசின் தமிழ் மையத்தைத் தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப்பண்பாடு, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் நவி மும்பைத் தமிழ்ச் சங்கத்தில் தொடங்கி வைத்தார்.

மும்பை மாநகராட்சி 46 பள்ளிக்கூடங்களில் ஏழாம் வகுப்பு வரை, தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி வழங்கி வருகிறது. இப்பள்ளிகளில் ஏறத்தாழ 18,000 மாணவர்கள் படிக்கின்றனர். இவர்கள் பெரும்பாலும் ஏழை எளிய தமிழ்க் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். இவர்கள் தமிழ் வழியில் கல்வி கற்பதற்குப் பாட நூல்கள் தமிழ்நாட்டிலிருந்து செல்ல வேண்டியுள்ளன. மற்ற மாணவர்களுக்கு மாநகராட்சி இலவசமாகப் புத்தகங்களை வழங்கத் தமிழ் வழி மாணவர்கள் நூல்கள் கிடைக்காமல் திண்டாடுகின்றனர். ஆசிரியர் மட்டும் ஒரு நூலை வைத்துக் கொண்டு பாடம் நடத்துகிறார். பாடநூல் கிடைக்காமலும் வாங்க இயலாமலும் திண்டாடும் மாணவர்களுக்குக் கடந்த காலத்தில் ஒருமுறை வழங்கப்பட்டதைப் போன்று தமிழ்நாட்டுப் பாட நூல்களை அன்பளிப்பாகக் கேட்டுள்ள மும்பை வாழ் தமிழ் மக்களின் கோரிக்கையை தமிழக முதல்வரிடம் தக்கவாறு எடுத்துரைத்து, முயற்சி செய்வதாக அமைச்சர் முனைவர் தமிழ்க்குடிமகன் தெரிவித்தார்.

மேலும் மும்பை வாழ் தமிழ் மக்களின் கோரிக்கையை ஏற்றுத் தமிழ்நாட்டிலிருந்து ஆண்டுக்கொரு முறை கலைக்குழுவினர் மும்பை வந்து நிகழ்ச்சிகளை நடத்தித் தரும் வகையில் அரசு ஏற்பாடு செய்ய முன்வரும் என்றும் வாரம் தோறும் திருக்குறள் வகுப்பும், மாதம் தோறும் இலக்கியச் சொற் பொழிவுகளுமாக மும்பையில் உள்ள பல்வேறு தமிழ் அமைப்புகளோடு ஒருங் கிணைப்பினை ஏற்படுத்திக் கொண்டு தமிழ் மையம் செயற்படும் என்றும் தெரிவித்தார்.

விழாவிற்கு ஆயிரக்கணக்கானோர் குடும்பத்தோடு வந்திருந்தனர். தமிழிசைப் பாடல்களும் வயலின் இசை நிகழ்ச்சியும் சிறுமியரின் 'தமிழுக்கும் அமுதென்று பேர்' பாட்டிற்கான நாட்டிய நிகழ்ச்சியுமாக தமிழ் மையத் தொடக்கவிழா முத்தமிழ் விழாவாக நடந்தேறியது. முன்னதாக அமைச்சர் அவர்கள் அய்யன் வள்ளுவர் நூலகத்தைத் திறந்து வைத்துத் திருக்குறள் வகுப்பைத் தொடங்கி வைத்தார். இவ்விரு நிகழ்ச்சியிலும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் ம.இராசேந்திரன் வரவேற்புரையாற்றினார். ●

## நேசக் காற்று ....

**– குடந்தை டி.எஸ்.பாலு**

*நண்பர்களே ....*
*மனத்தின் ஒட்டடைகளைத்*
*துடைத்தெறியுங்கள் ....*
*ஒரு நேசக் காற்றைக்*
*குடி அமர்த்துங்கள் ....*

*சாதிக்கத்தானே பிறந்தீர்கள்....*
*ஏன் சாதியின் சதியில் விழுந்தீர்கள்... !*
*குண்டு மல்லிகையாய்க்*
*குதூகலிக்க வேண்டிய நாட்டில்*
*குண்டு கலாச்சாரமா ...?*
*செருப்பே காலைக் கடிப்பதும்*
*கரையே நீரைக் குடிப்பதும்*
*இனி எத்தனை நாள்களுக்கு ....?*

*மத நல்லிணக்கம் என்பது*
*மன நல்லிணக்கமாய் மலரட்டும்...*
*மனித நேயம் என்பது*
*சோழன் பிசிராந்தையாரின்*
*நட்பாய் வளரட்டும்....*

*சமத்துவப் புறாக்கள்*
*வானவீதியில் அல்ல ...*
*உங்கள் நெஞ்சவீதியில் பறக்கட்டும் ...!*
*நண்பர்களே ...*
*நாட்டைவிட்டுக்*
*காட்டை நோக்கியேனும்*
*பயணம் செய்வோம்...*
*ஆனால்,*
*சாதி மதத்தின் பெயர் சொல்லி*
*சுடுகாட்டை நோக்கி வேண்டாம்...!*

# நான்காண்டு காலத்தில் 10 மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள்

நாமக்கல் மாவட்டத்தை புதிய மாவட்டமாக 25.7.1996 அன்று நான் அறிவித்தேன். அந்த புதிய மாவட்டத்திற்கு ஓராண்டு காலத்திற்குள்ளாக ஒரு புதிய மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அமைந்து, காண்பதற்குக் கவர்ச்சியாக மாத்திரமல்ல, வசதி மிக்க ஒரு கட்டடமாகவும் அமைந்து அதைத் திறந்து வைக்கின்ற வாய்ப்பினையும் நான் பெற்றிருக்கிறேன்.

இந்த நான்காண்டு காலத்தில் மாத்திரம் உங்களுக்கு நான் நினைவூட்ட விரும்புகிறேன். இதுபோன்ற மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகங்களுக்குப் பத்துக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டும் – திறந்து வைக்கப்பட்டும் – முடியும் தறுவாயிலும் இருக்கின்ற நல்ல செய்தியினை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

16.9.1998 அன்று தூத்துக்குடியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் நான்கு கோடி ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. சென்னையில் 11.12.1996 அன்று ஒன்பது கோடி ரூபாய் செலவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.



8.6.1998 அன்று விழுப்புரத்தில் ஏறத்தாழ 4 கோடி ரூபாய் செலவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. 8.6.2000 அன்று திருவண்ணாமலையில் 5.77 கோடி ரூபாய் செலவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

இன்று நாமக்கல்லில் ஆறு கோடியே 14 இலட்சம் ரூபாய் செலவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்படுகிறது. தொடர்ந்து நாளைக்கு ஆறு கோடியே பதினாறு இலட்ச ரூபாய் செலவில் கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்படவிருக்கின்றது.

இதைத் தவிர நாகப்பட்டினம், திருவாரூர், திருவள்ளூர், தேனி ஆகிய மாவட்டங்களுடைய மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகக் கட்டடங்கள் திறப்பு விழாவிற்கு என்னுடைய தேதிக்காக காத்துக் கொண்டிருக்கின்றன.

**– நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை 24-6-2000 அன்று திறந்துவைத்து முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரையிலிருந்து...**

• • •

# சுற்றுச் சுவர்களுடன் கல்நார் தகடுகளிலான கூரைகள் கொண்ட வீட்டு வசதி



சென்னை நகருக்கு குடிபெயரும் குடிசைப்பகுதி வாழ்மக்கள் அவர்களது ஏழ்மை நிலையின் பொருட்டு தங்களுக்கென ஒரு நல்ல வீட்டினை அமைத்துக் கொள்ள இயலாததன் காரணமாக, அவர்கள் பணிபுரியும் இடங்களுக்கு அருகாமையில் அடிக்கடி தீ விபத்துக்குள்ளாகக் கூடிய குறைந்த செலவிலான கட்டுமானப் பொருட்களைக் கொண்டு அபாயகரமான இடங்களில் நிரந்தரமற்ற வீடுகளை அமைத்தும் மாறுபட்ட தட்பவெப்ப சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்டும் வாழ்ந்து வருகின்றனர். இதுபோன்ற குடிசை வீடுகள் அடிக்கடி தீவிபத்துக்குள்ளாவதுடன் அதன் காரணமாக மிகுந்த பொருட்சேதமும் உயிர்ச்சேதமும் ஏற்படுகிறது.

அடிக்கடி தீ விபத்துக்குள்ளாகும் குடிசைப் ப்குதிகளில் அமைந்துள்ள குடிசைகளின் ஓலை கூரைகளை மாற்றி கல்நார் ஓட்டுக் கூரைகள் அமைக்கும் செலவினை அரசு ஏற்கும் என **1998–99–**ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட அறிக்கையில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. அதற்கிணங்க, தமிழகத்திலுள்ள **6** மாநகரங்களில் குடிசைப் பகுதிகளில் வாழும் **50,025** குடும்பங்களுக்கு கல்நார் ஓட்டுக் கூரைகள் ரூ.**31.52** கோடி செலவில் அமைக்கத் திட்டமிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் **1998–99–**ஆம் ஆண்டு முதல் **1999–2000** ஆண்டு வரை **20,611** குடும்பங்களுக்கு ரூ.**26.5** கோடி செலவில் சுற்றுச் சுவர்களுடன் கல்நார் தகடுகளிலான கூரைகள் கொண்ட வீடுகள் முழு அரசு மானிய உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் **2000–2001–**ஆம் ஆண்டில் சென்னை, மதுரை, திருச்சி, கோவை, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாநகரங்களில் வாழும் **26,000** குடிசைப்பகுதி வாழ் குடும்பங்களுக்கு குடும்பம் ஒன்றுக்கு ரூ.**15,000** வீதம் மொத்த செலவினம் ரூ.**39** கோடி செலவில் சுற்றுச் சுவர்களுடன் கல்நார் ஓட்டுக் கூரைகளிலான வீடுகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:-

| வ எண். | நகரத்தின் பெயர் | பயனடையும் குடும்பங்கள் | செலவினம் (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| 1. | சென்னை | 21,500 | 32.25 |
| 2. | மதுரை | 1,600 | 2.40 |
| 3. | திருச்சி | 1,000 | 1.50 |
| 4. | சேலம் | 1,100 | 1.65 |
| 5. | கோவை | 500 | 0.75 |
| 6. | திருநெல்வேலி | 300 | 0.45 |
| | மொத்தம் | 26,000 | 39.00 |

இத்திட்டத்தின் கீழ் சென்னை மாநகரத்தில் வாழும் **21,500** குடிசைவாழ் குடும்பங்களுக்கு ரூ.**3.25** கோடி செலவில் சுற்றுச் சுவர்களுடன் கூடிய கல்நார் ஓட்டுக் கூரை வீடுகள் அமைக்கப்படும். இத்திட்டச் செலவினத்தில் ரூ.**16.125** கோடி ஹட்கோ நிறுவனத்திடமும் மீதமுள்ள தொகையான ரூ.**16.125** கோடி தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதிக் கழகத்திடமும் (Tufidco) இருந்தும் கடனாகப் பெறப்படும். மேலும், மதுரை, கோவை, சேலம், திருச்சி, திருநெல்வேலி ஆகிய நகரங்களில் குடிசைப் பகுதிகளில் வாழும் **4,500** குடும்பங்களுக்கு ரூ.**6.75** கோடி செலவில் கல்நார் ஓட்டுக் கூரை வீடுகள் அமைக்கப்படும்.

இத்திட்டப் பணிகளுக்கான நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் **2000–**ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் வாரத்தில் துவங்கப்பட்டுள்ளது. இப்பணிகள் டிசம்பர் மாதத்திற்குள் முடிவுறும். ●

இத்திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படும் பணிகள் குடிசைப்பகுதி வாழ் மக்களுக்கு இலவசமாக அமைக்கப்படும். இத்திட்டப் பணிகளுக்காக, பெறப்படும் கடனுதவி மாநில அரசால் திருப்பிச் செலுத்தப்படும். ●

# முதுகு வலியைப் போக்க...

இன்று அதிகரித்து வரும் நோய்களின் எண்ணிக்கையில் முதலிடத்தை பிடித்து வருவது முதுகுவலி என்று கூறினால் அது மிகையான கூற்றல்ல.

முதுகுவலி என்பது என்ன? அதில் எத்தனை வகையுண்டு என்று உங்கள் எண்ணங்களில் நினைக்கலாம்.


முதுகுவலி என்பது புறமுதுகுப் பகுதியில் உண்டாகும் வலி. இது குறைந்த நாட்கள் இருந்தாலும், அதிக நாட்கள் இருந்தாலும் இதைப்பற்றி மிகுந்த கவனம் எடுக்க வேண்டும். முதுகுவலி ஏற்பட என்ன காரணம் என்பதைக் கண்டறிந்து அதனை நீக்கி அல்லது சரி செய்து நிவாரணம் பெறலாம்.

முதுகுவலியின் வகைகளைப் பார்த்தோமானால் 1. முழு முதுகுவலி 2. கீழ் முதுகுவலி 3. நடு முதுகுவலி என வகைப்படுத்தலாம். இவற்றில் கீழ் முதுகுவலி தான் நம்மில் அனைவருக்கும் தொல்லைக் கொடுப்பதாகும். கீழ் முதுகுவலி ஏற்படின் என்ன காரணங்கள் என்பதை சிந்தித்து ஆராய்ந்தோமானால் அக்காரணங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. அதிக தூரம் பயணம் செய்வது அல்லது அடிக்கடி உட்கார்ந்த நிலையில் பயணம் செய்வது.
2. அதிக அளவு பாரம் தூக்குவது
3. அதிக வேலைப் பளு
4. அளவுக்கு அதிகமான உடற்பயிற்சி
5. வயது முதிர்தல்
6. எலும்பின் தேய்மானம்
7. உட்காரும் முறை சரி இல்லாமை
8. நடக்கும் முறை சரியில்லாதவை

கடைசியாக குறிப்பிட்ட காரணம் தான் பெண்கள் முதுகுவலியினால் அவதிப்படுவதற்குப் பிரதானமானதாகும்.


கீழ்முதுகுவலி ஏற்படுவதற்கு, எலும்பின் தேய்மானமும் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கின்றது. அதிக அளவு எலும்புகளின் உராய்வினால், இதில் தேய்மானம் ஏற்படுகின்றது. உட்காரும் பழக்கம் சரியில்லாவிடில் இவ்வலி ஏற்பட ஏதுவாகும். சிலருக்கு முதுகுத் தண்டின் பிதுக்கத்தின் காரணத்தினாலும் இவ்வலி ஏற்படுகின்றது.



**முதுகுவலியின் அறிகுறிகள்**

கீழ்முதுகுவலி இரு இடுப்பு எலும்புகளிலும் இணைந்து உண்டாகும். குனிந்து நிமிர்ந்தால் வலி ஏற்படுதல், படுத்து ஓய்விலிருந்தால் வலி குறைதல். முதுகுவலி ஆரம்ப நிலையில் இருந்தால் அதாவது சாதாரண வலியானால் நாமே வீட்டில் சரிசெய்து கொள்ளலாம். ஆரம்ப நிலையானால், கற்பூர தைல வகை சார்ந்த சித்தா அல்லது ஹோமியோபதி மருந்துகளை வலியுள்ள இடங்களில் தடவி பின்னர் இதமான வெந்நீர் ஒத்தடம் கொடுக்கலாம்.

உட்காரும் இருக்கையில் ஓர் தலையணையை வைத்து உட்காரலாம்.




நாற்காலியில் உட்காரும்போது எப்பொழுதும் கால்களைச் சற்று உயர்த்தி நிமிர்த்தி உட்கார வேண்டும்.

தரையில் உட்காரும் போது நிமிர்ந்து உட்கார வேண்டும்.

மெத்தையில் உறங்குவதைத் தவிர்த்துக் கொண்டு தரை விரிப்புகளில் தடித்த துணிகளை விரித்து அதன் மேல் படுத்து உறங்குவதே சிறந்தது.

வயதானவர்கள் மாடிப்படிகளில் ஏறும் போது கைப்பிடியைப் பிடித்து ஊன்றியபடி செல்ல வேண்டும். படிகள் அதிக உயரமாக இருந்தால் முழங்கால்களில் கை வைத்து ஊன்றி மெல்ல ஏறுங்கள்.

தாழ்வாக சோபாவிலிருந்து எழும்போதும், அப்படியே செய்ய வேண்டும். எனவே, மாடிப்படிகளில் ஓடவோ, இரண்டிரண்டு படிகளாகத் தாவி ஏறவோ வேண்டாம். உடல் நலமுடைய சிறுவர்கள், இளைஞர்கள் பெரியோர் விஷயத்தில் இப்படி செய்யலாம். முதியோர்களிடம் இந்தப் பேச்சு கூடாது.



மாடிப்படிகளில் ஏறுவதையும், இறங்குவதையும் கூடுமான அளவில் தவிர்க்க வேண்டும். இந்த ஆலோசனைகள் எல்லாம் ஆரம்பநிலை சாதாரண முதுகுவலிக்கு மட்டுமே பொருந்தும். நடு முதுகுவலியாக இருக்கும் பட்சத்தில் அவசியமாக மருத்துவரை அணுகி முதுகுத் தண்டில் பிதுக்கம் உள்ளதா என உறுதி மேற்கொண்டு தகுந்த சிகிச்சை எடுக்க வேண்டும்.

### வருமுன் தடுப்பது சிறப்பு

முதுகுவலியால் துன்புறுகிறவர்கள் முதுகுவலிக்குக் காரணமான பின்வரும் விஷயங்களையும் நிலைமைகளையும் தவிர்க்க எப்போதும் விழிப்புடனும் கவனமாகவும் இருக்க வேண்டும். இன்னும் குறிப்பாக பின்வருமாறு செய்யலாம் அல்லது செய்யக்கூடாது போன்றவற்றை பின்பற்றுவது துணை நிற்கும்.

வசதியற்ற நிலையில் அதிக நேரம் உட்கார்ந்திருக்கக் கூடாது.

செரிமானம் இன்மை, வாயுத்தொல்லைகளை வளரவிட வேண்டாம்.

கழிவறைக்குச் செல்லவேண்டி இருந்தால் அடக்கியபடி இருக்க வேண்டாம்.

தேவையற்ற தாமதமானது எதுவும் முதுகுத் தண்டு தசைத்தனைகள், சிறுநீரகக் கற்கள், சிறுநீர்ப்பை, பெருங்குடல் ஆகியவற்றின் மீது தேவையற்ற அழுத்தத்தை உண்டாக்கும்.

வயதானவர்கள் தும்மல் வரும் நேரங்களில் நிமிர்ந்து இருக்க வேண்டும். உட்கார்ந்த நிலையிலோ அல்லது குனிந்த நிலையிலோ தும்மும் போது முதுகுத்தண்டு, பெருங்குடல் இவைகளுக்கு வலி ஏற்படக் கூடும்.

நாள்தோறும் சுமார் இரண்டு லிட்டர் சிறுநீர் கழியும் அளவு நிறைய தண்ணீர் குடியுங்கள். அதனால் உள்ளுறுப்புகள் நன்கு கழுவப்படும். பெரும்பாலானவர்களுக்குச் சிறுநீர்க் கற்கள் தோன்றா. கோடையில் வியர்வையால் இழக்கப்படும் தண்ணீரை ஈடுசெய்ய நீங்கள் அதிக தண்ணீரை குடிக்க வேண்டும். வடிகட்டிய சுத்தமான தண்ணீரை அல்லது கொதிக்க வைத்த நீரை குடித்து வருவது நல்லது. சுத்தமான நீர் கிடைக்காத நிலையில் மட்டுமே பானங்கள் குடியுங்கள்.

இறுதியில் உங்கள் முன்னேற்றம் குறித்து பிறருக்கு எடுத்துரையுங்கள். ●

## தெரியாதது எது?

வழக்கம் போல் பலர் முல்லாவைச் சுற்றி நின்று கேள்விகள் கேட்டனர். அவற்றுக்கெல்லாம் முல்லா தயக்கம் இல்லாமல் பதில் சொல்லிக் கொண்டிருந்தார்.

அதைப் பார்த்த ஊர்ப் பெரியவர் ஒருவர், ''எங்கள் முல்லாவுக்குத் தெரியாதது எதுவுமே இல்லை'' என்று பெருமையுடன் சொன்னார்.

உடனே அக்கூட்டத்தில் ஒருவன், ''முல்லா, குர்தீஷ் மொழியைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா?'' என்று வினவினான்.

குர்தீஷ் மொழியில், ஒரே ஒரு வார்த்தை தான் முல்லாவுக்குத் தெரியும். ஆதலால், நியாயமாக ''எனக்குத் தெரியாது'' என்று பதில் கூறியிருக்க வேண்டும்.

சற்று முன்னர் தானே ஊர்ப் பெரியவர், ''எங்கள் முல்லாவுக்குத் தெரியாதது எதுவும் இல்லை'' என்று முல்லாவைப் புகழ்ந்தார்.

எனவே ''குர்தீஷ் மொழியைப் பற்றி எனக்குத் தெரியாது' என்று பதில் சொல்ல, முல்லாவின் தன்மானம் இடம் கொடுக்கவில்லை.

எனவே, ''எனக்கு குர்தீஷ் மொழியைப் பற்றித் தெரியும்'' என்று பதில் கூறிய முல்லா, மேலும் ''குர்தீஷ் மொழியில் 'ஆஷ்' என்றால் 'சூடான சூப்பு' என்று பொருள்'' என்று தாம் அறிந்த ஒரே ஒரு வார்த்தையையும் சொல்லித் தம்முடைய குர்தீஷ் மொழியறிவை நிலை நிறுத்தினார்.

உடனே ஒரு சிறுவன், ''முல்லா, ஆறிப்போன சூப்பைக் குர்தீஷ் மொழியில் என்ன கூறுவார்கள்'' என்று வினவினான்.

ஒரு கணம்திகைத்த முல்லா, மறுகணம் ''தம்பி, குர்தீஷ் மொழியினருக்கு ஆறிப்போன சூப்பே பிடிக்காது, ஆதலால், அதைக் குறிப்பிடும் சொல் இல்லை'' என்று சொல்லிச் சமாளித்தார்.

● ● ●

# மனித யந்திரம்

ஸ்ரீ மீனாட்சி சுந்தரம்பிள்ளை ஒரு ஸ்டோர் குமாஸ்தா. அவர், உப்புப் புளி பற்று — வரவுக் கணக்கின் மூலமாகவும், படிக்கல்லின் மூலமாகவும் மனித வர்க்கத்தின் சோக நாடகங்களையும், மனித சித்தத்தின் விசித்திர ஓட்டங்களையும் அளந்தவர்.

அவருக்குச் சென்ற நாற்பத்தைந்து வருஷங்களாக, அதே பாதை, அதே வீடு, அதே பலசரக்குக் கடையின் கமறல்தான் விதி. அதுவும் அந்தக் காலத்தில் அடக்கமான வெறும் மூலைத்தெரு ராமு கடையாகத்தான் இருந்தது. கடையும் பிள்ளையவர்களுடன் வளர்ந்தது.

ஆனால் அதில் சுவாரஸ்ய மென்னவெனில், வெறும் மீனாட்சி, ஸ்ரீமீனாட்சி சுந்தரம் பிள்ளையாகப் பரிணமித்தாலும், அவருக்கு அந்தப் பழையதுதான். அந்தக் காவியேறிய கம்பிக்கரை வேஷ்டிதான். கடைக்கு முன்னால் இருந்த காறையும், கூரையும் போய், 'ரீ—இன்ஃபோர் ஸ்ட்' காங்க்ரீட், எலெக்ட்ரிக் லைட், கௌண்டர் முதலிய அந்தஸ்துகள் எல்லாம் வந்து விட்டன. கடையும் பிள்ளையும் ஒன்றாக வளர்ந்தார்கள்; ஆனால் ஒட்டி வளரவில்லை. கடையில் வரவு செலவு வளர்ந்தது; பிள்ளையவர்களுக்குக் கவலையும் வளர்ந்தது.

ஸ்ரீமீனாட்சி சுந்தரம் பிள்ளை பற்று வரவுக் கணக்குகளில் உள்ள சிக்கல்களையெல்லாம் அற்புதமாகத் தீர்த்து வைப்பார். அந்தக் காலத்தில் புன்னை எண்ணெய்க் குத்து விளக்கடியில் இரவு பன்னிரெண்டு மணி வரை மல்லாடுவார். இப்பொழுதும் அந்த மல்லாட்டத்திற்கெல்லாம் குறைச்சல் இல்லை; ஆனால் இப்பொழுது, மின்சார விளக்கும் விசிறியும் உடன் விழித்திருக்கும்.

அவரது சம்பளமும் ஆமை வேகத்தில் 'ஓடி' மாதத்துக்கு ரூ.20 என்ற எல்லையை எட்டிவிட்டது. பற்று வரவுக் கணக்கு நிபுணர் ஸ்ரீமீனாட்சி சுந்தரம் பிள்ளையின் திறமையெல்லாம் அந்த ஸ்டோர் கடையுடன் தான். வீட்டு வரவு செலவுக் கணக்கு மட்டும், அவருடைய இந்திர ஜால வித்தைகளுக்கெல்லாம் மீறி, உலகளந்த பெருமாளாக, சென்ற நாற்பத்தைந்து வருஷங்களாகப் பரந்து கிடக்கிறது; பரந்து கொண்டு வருகிறது.

காலை ஐந்து மணிக்கு, ஈர ஆற்று மணல் ஒட்டிய அவர் பாதங்கள், வெகு வேகமாக ஆற்றில் இறங்கும் சந்திலிருந்து ராஜபாட்டையில் திரும்பி, மறுபடியும் ஒற்றைத் தெரு என்ற சந்தில் நுழைவதைக் காணலாம்.

மழையானாலும், பனியானாலும் ஈர வேஷ்டியைச் சற்று உயர்த்திய கைகளால் பின்புறம் பறக்க விட்டுக் கொண்டு, உலர்ந்தும் உலராத நெற்றியில் சுப்பிரமணிய சுவாமி கோயில் விபூதி, குங்குமம், சந்தனம் விகசிக்க அவர் செல்லும் காட்சியைச் சென்ற நாற்பத்தைந்து வருஷங்களாகக் கண்டவர்களுக்கு, அவர் பக்தியைப்பற்றி அவ்வளவாகக் கவலை ஏற்படாவிட்டாலும், நன்றாக முடுக்கிவிடப்பட்ட பழுதுபடாத யந்திரம் ஒன்று நினைவிற்கு வரும்.

ஆறு மணியாகிவிட்டால், நேற்றுத் துவைத்து உலர்த்திய வேஷ்டியும் துண்டுமாக, ஈரத் தலையைச் சிக்கெடுத்த வண்ணம் ஸ்டோர் கடையை நோக்கி நடப்பார். மறுபடியும் அவர் இரவு பத்து அல்லது பன்னிரண்டு மணிக்குக் கடையைப் பூட்டிக் கொண்டு திரும்புவதைப் பார்க்கலாம்.

'மீனாட்சி' கணக்குப் பிள்ளை அந்தஸ்தை எட்டுவதற்கு முன்பே, நாலைந்து குழந்தை — மீனாட்சிகள் தெருவில் புழுதி ரக ஆராய்ச்சியில் ஈடுபடுவது சர்வ சாதாரணமாகிவிட்டது.

பிள்ளையவர்கள் பொறுமை சாலி — ஆதிசேஷன் ஒரு பூமியின் பாரத்தைத் தான் தாங்குகிறானாம்; ஆனால் பொறுப்பு, ஏமாற்று, சுயமரியாதை, நம்பிக்கை என்ற நியதியற்றுச் சுழலும் ஒரு பெரிய கிரக மண்டலத்தையே தூக்கிச் சுமக்கிறார் அவர். ஏறு நெற்றி, வழுக்கைத்தலை, கூன் முதுகு, பெட்டியடியில் உட்கார்ந்து உட்கார்ந்து குடமான வயிறு — இவைதான் இச்சுமைதாங்கி உத்தியோகத்தால் ஏற்பட்ட பலன்கள்.

பிள்ளையவர்கள் மிகவும் சாது; அதாவது, படாடோபம், மிடுக்கு, செல்வம், அகம்பாவம்

☐ **புதுமைப் பித்தன்**


முதலியவற்றின் உதைகளையும் குத்துக்களையும் ஏற்று ஏற்று, மனமும், செயலும், எதிர்க்கும் சக்தியையும், தன்னம்பிக்கையையும் அறவே இழந்து விட்டன. தாம் கீழ்ப்பட்டவர், விநயமாக இருக்க வேண்டும், தம்மைப் பாதுகாத்துக் கொள்ள உண்மை, நாணயம் முதலிய பழக்கங்களைக் கைக்கொள்ள வேண்டும் என்று உறுதிப்பட்டவர்.

**"மீனாட்சி சுந்தரம்பிள்ளை ஒரு ஸ்டோர் குமாஸ்தா. அவர், உப்புப் புளி பற்று – வரவுக் கணக்கின் மூலமாகவும், படிக்கல்லின் மூலமாகவும் மனித வர்க்கத்தின் சோக நாடகங்களையும், மனித சித்தத்தின் விசித்திர ஓட்டங்களையும் அளந்தவர்.**

**அவருக்குச் சென்ற நாற்பத்தைந்து வருஷங்களாக, அதே பாதை, அதே வீடு, அதே பலசரக்குக் கடையின் கமறல்தான் விதி. அதுவும் அந்தக் காலத்தில் அடக்கமான வெறும் மூலைத்தெரு ராமு கடையாகத்தான் இருந்தது. கடையும் பிள்ளையவர்களுடன் வளர்ந்தது."**

ஆனால் அவர் உள்ளத்தில், அந்தப் பெட்டிப்பாம்பாக அடங்கிக் கிடக்கும் உள்ளத்தில், அலாவுத்தீன் ஜீனியைப்போல், ஆசை பூதாகாரமாய் விரிந்து, அவரது சித்தப் பிரபஞ்சத்தையே கவித்து ஆக்கிரமித்துக் கொண்டது. தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகச் செயல் திறமையிழந்தவன் செய்வது போல், ஆசைப் பேய்க்குப் பூசையும் பலியும் கொடுத்து மகா யக்ஞம் செய்ய எந்தப் பக்தனாலும் முடியாது.

இந்த மனம் இருக்கிறதே, அப்பா! ஸ்ரீமீனாட்சி சுந்தரம் பிள்ளைக்கும் அது உண்டு. நீறு பூத்த நெருப்பை வேதாந்திகள் பெரிய விஷயங்களுக்கு உபமானம் சொல்லுவார்கள். ஆசையைப் பொறுத்தவரை அந்த உபமானத்தால் பிள்ளை பெரிய மனுஷர் தான். "மீனாட்சியா! அந்த அப்பாவிப் பயல்!" என்று பலர் துச்சமாகக் கருதுவார்கள். முகத்திற்கெதிரேயும் சொல்லுவார்கள். அப்படிப்பட்ட 'அப்பாவிப் பிராணி'யின் மனத்தில் புகைந்து கவிகிறது ஆசை.




வீட்டில் குழந்தைக்குப் பால் தட்டாமலிருக்க – ஏன், பால் விற்று நாலு காசும் சம்பாதிக்க – மாடும் கன்றும் வாங்க வேண்டும்! தெற்குத் தெரு மாவன்னாவுக்கு 'மேடோவர்' செய்த நிலத்தைத் திருப்ப வேண்டும். இது மட்டுமா? கால்மேல் கால் போட்டு, 'ஏ மீனாட்சி!' என்று தாம் அழைக்கப்படுவதுபோல், தம் இஷ்டப்படி ஆட ஒரு மீனாட்சியும் ஸ்டோர் கடையும் கைக்குள் வரவேண்டும்.

ஒரு முறை கொழும்புக்குப் போய்விட்டுத் தங்க அரைஞாண், கடிகாரச் சங்கிலி, வாட்ட சாட்டமான உடம்பு, கையில் நல்ல ரொக்கம், கொழும்புப் பிள்ளை என்ற பட்டம் முதலிய சகல வைபவங்களுடனும் திரும்ப வேண்டும். தெருவில் எதிரே வருகிறவர் எல்லோரும், துண்டை இடுப்பில் கட்டிக்கொண்டு, பல்லை இளித்த வண்ணம், 'அண்ணாச்சி சௌக்கியமா?' என்று கேட்க வேண்டும்! ஊரில் நடைபெறும் கலியாணமும், சம்பவிக்கும் இழவும் இவர் வருகையை எதிர்பார்த்துத் தான் தம் பாதையில் செல்ல வேண்டும்!...

இன்னும் எத்தனையோ எண்ணங்கள்! தினசரிப் பணப் புழக்கம் எல்லாம் அவர் கையில் தான், கடைசியாய், தனியாகக் கடையைப் பூட்டிச் சாவியை எடுத்துக் கொண்டு போகிறவரும் அவர்தான். அதே சமயத்தில் தான், கடைக்குக் கூப்பிடுகிற தூரத்தில் இருக்கும் ரயில்வே ஸ்டேஷனில் ஐந்து நிமிஷம் நின்று விட்டுத் தூத்துக்குடி ஷட்டில் வண்டி புறப்படுகிறது. டிக்கட் வாங்கிக் கொண்டு ராத்திரியோடு ராத்திரியாகக் கம்பி நீட்டிவிடலாம். டிக்கட்டுக்கு மட்டிலும் பணம் எடுக்கத் தினசரி கடையில் பணம் புரளும்.

ஆனால், அந்தப் போலீஸ்காரப்பயல் இருக்கிறானே! நினைக்கும் பொழுதே பிள்ளையவர்களுக்கு அவன் கை தோளில் விழுவது போலப் பயம் தட்டிவிடும். திடுக்கிட்டுத் திரும்பிக் கூடப் பார்த்து விடுவார்.

சிலர் நேரத்தைத் தெரிந்து கொள்ளக் கைக்கடிகாரம் கட்டிக் கொள்ளுவார்கள். வேறு சிலர் நிழலின் குறியை உபயோகப்படுத்திக் கொள்ளுவார்கள். கடிகாரத்தின் மெயின் ஸ்பிரிங் ஒடிவதற்கு ஹேது உண்டு. சூரியனை மேகம் மறைத்தால் நிழலின் குறியெல்லாம் அந்தரடித்துக் கொண்டு போக வேண்டியதுதான். அதனால்தானோ என்னவோ, சென்ற நாற்பத்தைந்து வருஷங்களாகக்



கொக்கிரகுளத்திலுள்ள பலருக்கும் ஸ்ரீமான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை சாவி கொடுக்காத கடிகாரமாய், மேகத்தால் மறையாத சூரியனாய், என்றும் பழுதுபடாத நித்திய வஸ்துவாய் இருந்து வருகிறார்.

பிள்ளைக்கு எதிலும் நிதானம். இயற்கையின் நியதியைப் போல் இருக்கும் அவர் நடவடிக்கையெல்லாம்— நேற்று இருந்த மாதிரி தான் இன்றும், நாளையும், இனியும். ஒன்று மட்டும் சொல்லுகிறேன், கொக்கிரகுளத்தில் உள்ள மிகவும் முதிர்ந்த கிழவருக்கும், அவர் தம் சன்னக் கம்பிக் கறுப்புக்கரை நாட்டு வேஷ்டியுடன் தான் காட்சியளித்து வருகிறார். இந்த ஒழுங்கிலிருந்து அவர் விலகியதும் கிடையாது. விலக முயன்றதும், விரும்பியதும் கிடையாது.

ஸ்ரீபிள்ளையவர்களின் முகம் தேஜஸ் கீஜஸ் என்ற தொந்தரவெல்லாம் பெறாவிட்டாலும், அவர் ஒரு சித்தாந்தி. பற்று வரவுக் கணக்கு அவருக்கு வாழ்க்கையின் இரகசியங்களை எடுத்துக் காண்பித்து, புகையூடு தெரியும் விளக்கைப் போன்ற ஒரு மங்கிய சித்தாந்தத்தை உபதேசித்தது.

மூலைத் தெரு லாந்தல் கம்பங்கூடச் சோர்ந்துவிட்டது. கொக்கிரகுளத்திலுள்ள லாந்தல் கம்பங்களுக்கு இரவு பத்து மணிக்குள்ளாகவே சர்வசாதாரணமாக ஏற்படும் வியாதி இது.

மூலைத் தெருவில் மற்ற இடங்களெல்லாம் ஒடுங்கிவிட்டன. ஸ்டோரில் பெட்டியடி மேல் ஒற்றை மின்சார விளக்குப் பிரகாசிக்கிறது. பிள்ளையவர்கள் ஓலைப் பாயில் உட்கார்ந்து கொண்டு மேஜையின் மேலுள்ள சிட்டைப் புத்தகத்தில் ஏதோ பதிந்து கொண்டு இருக்கிறார்.

"சுப்புப் பிள்ளையா? நாலு, நாலரை, நாலரையே மாகாணி, நாலரையே மாகாணியும் ஒரு சல்லியும், நாலரையே மாகாணி

ஒரு சலலி, ஒரு துட்டு, நாலு, ஒம்பது, அஞ்சு சல்லி! சவத்துப பயலுக்குக் குடுத்துக் குடுத்துக் கட்டுமா? நாளைக்கு வரட்டும் சொல்லறேன். கோவாலய்யனா? சொல்லவும் முடியாது. மெல்லவும் முடியாது! என்ன செய்யறது? பிள்ளைவாள் பாடு அவன்பாடு..." ஏடுகளைப் புரட்டுகிறார். நெற்றியில் வழியும் வேர்வையைத் துடைத்துவிட்டு, இராமையாப் பிள்ளை பேரேட்டைத் திருப்பிக் கூட்ட ஆரம்பித்தார். "வீசும், அரைக்கால், அரையோரைக்கால் ..."

"என்ன அண்ணாச்சி, இன்னங் கடையடைக்கலே? என்னத்தே விளுந்து விளுந்து பாக்கிய?" என்று கொண்டே வந்தார் மாவடியா பிள்ளை. "வாரும் இரியும்" என்று சொல்லி, மறுபடியும் கணக்கில் ஈடுபட்டார் பிள்ளை,

"என்னய்யா, வண்டி போயிருக்குமே! இன்னமா? உமக்கென்ன பயித்தியம் ?"

"தம்பி, நீங்க ஒரு மூணு வீசம் அரை வீசம் கொடுக்கணுமில்லே; நாளாயிட்டுதே! கொஞ்சம் பாருங்க. கடையிலே பெரண்டாத்தானே முடியும்?"

"அதுக்கென்னையா, வார வியாழக்கிழமை பாக்கிறேன். நீங்க வீசம்படி பின்னைக்கி எண்ணை குடுங்க; பின்னைக்கு எண்ணை – புன்னைக்காய் எண்ணெய் எல்லாத்தையும் சேர்த்துக் குடுத்திடுவேன்!"

"பார்த்துச் செய்யுங்க!" என்று சொல்லிக் கொண்டே மேல் துண்டை எடுத்து ஒரு தோளில் போட்டுக் கொண்டு எழுந்தார். கொட்டாவி வந்துவிட்டது. வாய்ப் பக்கம் விரலால் சுடக்கு விட்டுக் கொண்டே, 'மகாதேவ, மகாதேவ' என்று முணு முணுத்த வண்ணம், நெடுங்காலக் களிம்பால் பச்சை ஏறிப்போன புன்னைக்காய் எண்ணெயிருக்கும் செப்புப் பாத்திரத்தண்டை சென்றார். குனியு முன் தலையை விரித்து உதறி, இடது கையால் அள்ளிச் சொருகிக் கொண்டு, கட்டை விரலுக்கும் நடு விரலுக்கும் இடையில் பிடித்து வீசம் படியில் எண்ணெயை எடுத்துக் கொண்டு திரும்பினார்.

"தம்பி!" என்று கொண்டே நீட்டினார்.

மாவடியா பிள்ளை கையில் இருந்த சிறு பித்தளை டம்ளரில் வாங்கிக் கொண்டார்.

பிள்ளையவர்கள் மறுபடியும் ஒழுங்காக மேல்துண்டை மடித்து பெட்டியடியில் போட்டுக் கொண்டு, "மகாதேவா!" என்று வாய்விட்டு ஓலமிட்ட வண்ணம், ஒற்றைக் கையைப் பெட்டியின் மேல் ஊன்றியபடி மெதுவாகச் சம்மணமிட்டு உட்கார்ந்தார்.

மாவடியா பிள்ளை புறப்படுவதாகத் தோன்றவில்லை.

"என்ன அண்ணாச்சி, இன்னந் "..தேரமாகலியா!" (தேரம் – நேரம்) என்று, பெட்டியடிப் பக்கத்தில் இருந்த தட்டில் உள்ள பொரிகடலையை எடுத்துக் கொரிக்க ஆரம்பித்தார்.

"இன்னம் ரெண்டு மூணு புள்ளியைப் பார்த்து விட்டுத் தான், கடையெடுக்கணும். எனக்குச் செல்லும் (செல்லும் . நேரம் செல்லும்). வார வைகாசியிலே ராதாவரத்துப் பிள்ளை என்னமோ காசுக்கடை வைக்ராஹளாமே, ஒங்கிளுக்கென்னய்யா...!" என்று சிரித்தார் பிள்ளை.

"அவாளுக்கென்ன! காசுக்கடையும் வைப்பாஹ, கும்பினிக் கடையும் வைப்பாஹ. கையிலே பசையிருந்தா யார் தான் என்னதான் செய்ய மாட்டாஹ. வார வைகாசிலையா? யார் சொன்னா?" என்று வாயில்

---

## தலைப்பாகையும் போர்வையும்

ஒரு நாள் தலைப்பாகை வாங்குவதற்காகக் கடைக்குச் சென்ற முல்லா, விலை கேட்டு ஒரு தலைப்பாகையை வாங்கிக் கொண்டபின், அங்கிருந்த போர்வை ஒன்று அவர் கவனத்தைக் கவர்ந்ததால், அதையும் வாங்க எண்ணினார்.

தலைப்பாகையின் விலையும், போர்வையின் விலையும் ஒன்றுதான் என அறிந்து கொண்ட முல்லா, "இந்தத் தலைப்பாகைக்குப் பதில் போர்வையை வாங்கிக் கொள்கிறேன்" என்று கடைக்காரரிடம் கூறிவிட்டு, தாம் எடுத்தத் தலைப்பாகையை வைத்துவிட்டுப் போர்வையை வாங்கிக்கொண்டு கிளம்பினார்.

முல்லா, போர்வைக்குரிய பணத்தைக் கொடுக்காமல் போவதைக் கண்ட கடைக்காரர், "ஐயா, போர்வைக்குரிய பணத்தைத் தராமல் போகிறீர்களே" என்று கேட்டார்.

அதைக் கேட்ட முல்லா, "நான் தலைப்பாகைக்குப் பதிலாகப் போர்வையை வாங்கியதால், பணம் ஏன் தர வேண்டும்?" என்று கேட்டார்.

அதற்கு கடைக்காரர், "அப்படியென்றால் தலைப்பாகைக்குரிய பணத்தைக் கொடுங்கள்" என்றார்.

முல்லா, "தலைப்பாகை உம்மிடம் இருப்பதால், உம்மிடம் உள்ள ஒரு பொருளுக்கு நான் ஏன் பணம் தர வேண்டும்?" என்று வினவியபடி வெளியே போனார்.

அவர் பணம் தராமல் வெளியே போவதைக் கண்ட கடைக்காரர் ஒன்றும் புரியாமல் நின்றார்.

உப்புக்கடலை ஒன்றை எடுத்துப் போட்டபடியே கேட்டார்.

"என்னய்யா, ஒரேயடியாக் கையை விரிக்கிய? ஒங்களுக்குத் தெரியாமலா பிள்ளைவாள் வீட்டிலே ஒண்ணு நடக்கும்? யாருக்கிட்ட உங்க மூடடையை அவுக்கிய?" என்று கையில் எடுத்த பென்ஸில் முனை மழுங்கியிருந்தால், நகத்தால் கட்டையை உரித்துக் கொண்டே சொன்னார்.

மாவடியா பிள்ளைஅப்படி இலகுவில் 'மூடடையை அவிழ்த்து' விடுபவரல்லர். "ஊர்க் கதை எல்லாம் நமக்கெதுக்கு? நான் வாரேன். நேரமாகுது!" என்று எண்ணெயை எடுத்துக் கொண்டு புறப்பட்டுவிட்டார்.

"தம்பி! விசாளக்கௌமையை மறக்காமே!" என்றார் பிள்ளை.

"மறப்பனா!" என்று கொண்டே இருட்டில் மறைந்தார் மாவடியா பிள்ளை.

பிள்ளையவர்களுக்கு அப்புறம் கணக்கில் மனம் லயிக்கவில்லை. ராதாபுரத்துப் பிள்ளை ஆரம்பிக்கப் போகும் காசுக்கடையிலும், அதில் மாவடியா பிள்ளைக்குக் கிடைக்கக்கூடிய ஸ்தானத்தையும் பற்றி விஸ்தாரமாக நினைக்க ஆரம்பித்துவிட்டார்.

'மாவடியா பிள்ளைக்கென்ன! கையிலே பணம் புரண்ட வண்ணந்தான். இப்பவே ஒரேயடியாக முழுங்கரானெ, ஆளைக் கையிலே பிடிக்க முடியுமா? ....'

அவர் மனம் காசுக்கடைப் பெட்டியடியில் உட்கார்ந்திருக்கும் கற்பனை மாவடியா பிள்ளையைக் கண்டு பொறாமைப்பட்டது. என்னதான் இருந்தாலும், நாணயமாக ஒரு இடத்தில் இருக்கிறவன் என்று பேர் வாங்கப் போறானா! நாற்பத்தைந்து வருஷங்கள் ஒரே இடத்தில் இருந்து பேர் வாங்கினால் அல்லவா தெரியும்!...'

உடனே மனம் நாற்பத்தைந்து வருஷங்களையும் தாவி ஏதோ அந்தக் காலத்தில் பள்ளிக்கூடத்திற்குப் போக மறுத்ததினால் ஏற்பட்ட இந்த மாறுதலை நினைத்தது.

அந்தக் காலத்தில் அது பிரமாதமாகப் படவில்லை. அப்புறம் பிள்ளையும் குட்டியும் வந்து, அது இது என்று ஆக ஆகச் சந்தர்ப்பம் தவறாக மாறிப் பெரிய தவறாக உருவெடுத்தது. வக்கீல் பிள்ளையும் தான் படித்தவர்தான். இப்பொழுது அவரை, "ஏலே ஆறுமுகம்!" என்று கூப்பிட முடியுமா?

பிள்ளையவர்களுக்கு மனம் கணக்கில் லயிக்கவில்லை. பெட்டியில் மூடிவைத்தார். 'தூத்துக்குடி வண்டி இன்னும் புறப்படவில்லையே' என்ற எண்ணம் திடீரென்று உதித்தது 'சவத்தைக் கட்டி எத்தனை நாள் தான் மாரடிப்பது!' என்று முணுமுணுத்தார். நெற்றியில் குபீர் என்று வியர்வையெழும்பியது.

பெட்டிச் சொருகை அநாவசிய பலத்தை உபயோகித்து வெளியே இழுத்தார். உள்ளேயிருந்த சில்லறையும் ரூபாயும் குலுங்கிச்சிதறின. செம்பு, நிக்கல், வெள்ளி என்று பாராமல் மடமடவென்று எண்ணினார். நாற்பதும் சில்லறையும் இருந்தது. அவசர அவசரமாக எடுத்து மடியில் கொட்டிக் கொண்டு, விளக்கை அணைத்து, மடக்குக் கதவுகளைப் பூட்டினார்.

சாவிக் கொத்து கையில் இருக்கிறது. உணர்வு கூட இல்லாமல் வேகமாக ஸ்டேஷனை நோக்கி நடந்தார். நாற்பத்தைந்து வருஷமாக உழைத்துப் போட்டும் என்ன பலன்? நாக்குக்கு ருசியாய்ச் சாப்பிட முடிந்ததா? என்ன பண்ணி விடுவான்? கொஞ்ச தூரம் சென்ற பிறகு தான் செருப்பை கூடக் கடையிலேயே வைத்துவிட்டு வந்துவிட்டார் என்ற உணர்வு தட்டியது.

நல்ல காலமாக எதிரில் யாரையும் காணோம். 'பார்த்தால் தான் என்ன? கடையைப் பூட்டின பிறகு நேரே வீட்டிற்குத் தான் போக வேண்டுமா? நம்ம நினைப்பு அவனுக்கெப்படித் தெரியும்?'

ஸ்டேசனுக்கு வந்தாய்விட்டது. பெட்ரோமாக்ஸ் விளக்கடியில் தூங்கும் சில்லறைச் சிப்பந்திகள், பக்கத்து வெற்றிலை பாக்குக் கடையில் வாயடிக்கும் போர்ட்டர்கள்! வெளிக் கேட்டில் அவ்வளவு கூட்டம் இல்லை. ரயிலுக்குக் கூட்டம் இருக்காததும் நல்லது தான் என்று நினைத்து உள்ளுக்குள் சந்தோஷப்பட்டுக் கொண்டார் பிள்ளை.

டிக்கட் கவுண்டரில் பத்தே காலணாவை வைத்துவிட்டு, "தூத்துக்குடி!" என்றார் பிள்ளை, அதற்குள் நா வறண்டு விட்டது.

"எங்கே?" என்றார் டிக்கட் குமாஸ்தா.

பிள்ளை திடுக்கிட்டார். "தூத்துக்குடி!" என்றார் மறுபடியும்.

"வாயில் என்ன கொழுக்கட்டையா, தெளிவாகத்தான் சொல்லேன்!" என்று கொண்டே ஒரு டிக்கட்டை 'பஞ்ச்' செய்து கொடுத்தார் குமாஸ்தா.

அப்பாடா!

பிள்ளையவர்கள் நிம்மதியடைந்தவர் போல் மூச்சை உள்ளுக்கு வாங்கி மெல்ல விட்டுக்கொண்டு பிளாட்பாரத்தில் நுழைந்தார். வண்டி நின்று கொண்டிருக்கிறது. புறப்பட இன்னும் பத்து நிமிஷம். ஒரு சோடா விற்பவனும், ஆமவடை – முறுக்கு – போளி – ஐயரும் குரல் வரிசையைப் பிளாட்பாரத்தின் மேலும் கீழுமாகக் காண்பித்து நடந்தனர். லக்கேஜ் தபால் வண்டிப் பக்கத்தில் தான் ஸ்டேஷன் மாஸ்டரும், ஸ்டேஷன் சிப்பந்திகளும்!

தொடரின் பின்புறத்தில். ஒருவரும் இல்லாத தனி

வண்டியில் ஏறி, கூட்ஸ் ஷெட் பக்கம் பார்த்த ஜன்னல் அண்டையில் உட்கார்ந்தார். ஜன்னல் பக்கம் இருந்த நிம்மதி, இவரது மனத்தைத் துருதுரு என்று வாட்டியது. எழுந்து பிளாட்பாரத்தின் பக்கத்திலிருக்கும் ஜன்னல் பக்கம் வந்து உட்கார்ந்து கொண்டு, வண்டி எப்பொழுது புறப்படும் என்பதை ஆவலாக அறிய எஞ்சின் பக்கம் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"பிள்ளைவாள்! ஏது இந்த ராத்திரியில்!" என்றது கம்பீரமான ஒரு குரல். வேறு ஒருவரும் இல்லை – ரயில்வே போலீஸைச் சேர்ந்த அவரது நண்பர் கலியாண சுந்தரம். பிள்ளை திடுக்கிட்டுத் திருப்பினார்.

போலீஸ்காரன்! பிள்ளையவர்கள் நண்பரைப் பார்க்கவில்லை. காக்கி உடையைத்தான் பார்த்தார்!

தன்னையறியாமல் அவரது வாய் "தூத்துக்குடி வரை!" என்றது.

"என்ன அவசரம் ! நான் உங்களை மணியாச்சியில் பார்க்கிறேன்!" என்று சொல்லி, அளவெடுத்து வைக்கும் பெருமிதமான நடையுடன், லக்கேஜ் வான் பக்கம் நிற்கும் ஸ்டேஷன் மாஸ்டரை நாடினார் கலியாண சுந்தரம் பிள்ளை.

மீனாட்சி சுந்தரம் பிள்ளைக்கு நுனிநாக்கு முதல் அடித்தொண்டை வரை ஒரே வறட்சி. கண்கள் சுழன்றன.

"கலர்! சோடா!" என்று நீட்டினான் சோடாக்காரன்.

"ஏ, சோடா! கலர் ஒன்றை உடை!" என்றார் பிள்ளை.

'டஸ்!' என்ற சப்தம். 'ஸார்' என்று நீட்டினான் சோடாக்காரன். வாங்கிக் குடித்தார். "பூப்!" என்று ஏப்பமிட்டுக் கொண்டே, ஓரணாவை அவன் கையில் கொடுத்து விட்டுப் பலகையில் சாய்ந்து கண்ணை மூடினார் பிள்ளை. 'கலியாணி பார்த்து விட்டானே? நாளைக்கு நம் குட்டு வெளிப்பட்டுப் போகுமே!'

துறைமுகத்தில் கலியாண சுந்தரம் பிள்ளை தமக்காகக் காத்துக் கொண்டிருப்பதை மனக்கண்ணால் பார்த்தார்.

ரயில் விஸில் கிரீச்சிட்டது. பிள்ளையவர்கள் அவசர அவசரமாகக் கதவுப்பக்கம் வந்து இறங்கினார்.

பிளாட்பாரத்தில் கால் வைத்ததுதான் தாமதம், வண்டி நகர ஆரம்பித்தது.

" என்ன பிள்ளைவாள், இறங்கிட்டிய!" என்று வேகம் அதிகரித்து ஓடும் ரயில் சாரளத்திலிருந்து ஒரு குரல். கலியாண சுந்தரம் பிள்ளை தான்.

"அவாள் வரலை!" என்று கத்தினார் பிள்ளை.

மெதுவாக, நிதானமாக ஸ்டேஷனை விட்டு வெளியேறி ஸ்டோர் பக்கமாக நடந்தார் பிள்ளை. வழியில் சிறிது தூரம் செல்லுகையில் தான் பாஸ் இல்லாமல் எப்படிக் கப்பலில் செல்வது என்ற "ஞாபகம் வந்தது பிள்ளைக்கு. "புத்தியைச் செருப்பால் தான் அடிக்கணும்!" என்று சொல்லிக் கொண்டார் பிள்ளை. அவருக்குத் தமது ஆபத்தான நிலைமை அப்பொழுது தான் தெளிவாயிற்று. உடல் நடுங்கியது.

"யார் செய்த புண்ணியமோ!" என்று மடியில் இருந்த விபூதியை நெற்றியில் இட்டுக் கொண்டு, "மகாதேவா!" என்றார் வாய்விட்டு.

ஸ்டோருக்கு வந்து விட்டார். சாவாதானமாகக் கதவைத் திறந்து விளக்கை ஏற்றினார். மடியில் இருந்த சில்லறையைப் பெட்டிக்குள் வைத்துவிட்டு, சிட்டையை எடுத்து, "மீனாட்சி பற்று பதினொன்றே காலணா" என்று எழுதினார்.

மறுபடியும் விளக்கு அணைந்தது. காலில் செருப்பை மாட்டிக்கொள்ளும் சப்தம். பூட்டு கிளிக் என்றது.

முதலாளி வீட்டை நோக்கி 'சருக் சருக்'கென்ற செருப்புச் சப்தம்.

பிள்ளை வழியில் துண்டை உதறிப் போட்டுக் கொண்டார். தலையை உதறிச் சொருகிக் கொண்டார்.

முதலாளி காற்றுக்காக வெளியே விசுப் பலகையில் தூங்குகிறார்.

"ஐயா! ஐயா!" என்றார் மீனாட்சி சுந்தரம் பிள்ளை.

"என்னவே, இவ்வளவு நேரம்!" என்று புரண்டு கொண்டே கொட்டாவி விட்டார் முதலாளி ஐயா,

"இல்லை, சோலி இருந்தது. எம்பத்துலே இண்ணக்கி பதினொண்ணே காலணா எளுதிருக்கேன்!" என்றார் பிள்ளை. அப்பொழுதும் அந்த நாவறட்சி போகவில்லை.

"சரி! விடியென வரப்போ, மூக்கென வண்டியைப் போட்டுக்கிட்டு வரச்சொல்லும். சந்தைக்குப் போக வேண்டாம்!" என்றார். சொல்லிவிட்டு, கொடுங்கையைத் தலைக்கு வைத்துக் கொண்டு கண்ணை மூடிக்கொண்டார்.

மீனாட்சி சுந்தரம் பிள்ளை, முதலாளி ஐயாவைச் சற்று நேரம் பார்த்துக் கொண்டே நின்றார். அப்புறம் மெதுவாகத் திரும்பி நடந்தார்.

***– 'சிறந்த சிறுகதைகள்' தொகுப்பிலிருந்து***

**தொகுப்பு : சா.கந்தசாமி**

**வெளியீடு : கலைஞர் பதிப்பகம், சென்னை–17.**

★ ★ ★

# ஒசூரில் ஒரு சாதனை

முதல்வர் பிறந்த நாளையொட்டி பல்லாயிரக் கணக்கான மரக்கன்றுகளை மாவட்டம் முழுமையும் நட்டு சாதனை படைத்ததுடன் தருமபுரி மாவட்டம் ஒசூரில் 28-6-2000 அன்று பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையின் அருகே அமைந்துள்ள யசோதா மகாலில் மாபெரும் இரத்ததான முகாம் நடத்தப்பட்டது. இந்த முகாம் இந்திய செஞ்சிலுவை சங்கத்தின் சீரிய பார்வையில் பல்வேறு அமைப்புகளைச் சார்ந்த மருத்துவர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள், தொண்டு நிறுவனத்தினர் ஆகியோரை தன்னடக்கி செய்தி விளம்பரம் மற்றும் அச்சுத்துறை அமைச்சர் திரு.வ.முல்லைவேந்தன் தலைமையில் காலை 8.00 மணிக்கு தொடங்கப்பட்டது. முன்னதாக அமைச்சரால் இரத்ததானம் செய்யப்பட்டு தொடங்கிவைக்கப்பட்டது.

இந்த முகாமில், ஒரு புதிய சாதனையாக 2,177 நபர்கள் இரத்த தானம் வழங்கினார்கள் என்பது குறிப்பிடத்தகுந்தது.

இந்நிகழ்ச்சியில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஆற்காடு திரு நா.வீராசாமி அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

இரத்ததானம் வழங்கியவர்களுக்கு அரிமா சங்கத்தின் சார்பில் குளுகோஸ், பிஸ்கட், டீ, உணவு முதலியன வழங்கப்பட்டன. அத்தோடு இந்திய செஞ்சிலுவை சங்கமும், தருமபுரி மாவட்ட திராவிட முன்னேற்ற கழகமும் இரத்ததானம் வழங்கியதற்கான சான்றிதழ்களைத் தனித்தனியே வழங்கினர்.



சென்னைக் கருகிலுள்ள திருப்பெரும்புதூர் பகுதியில் 2000 சதுர கிலோ மீட்டர் பரப்பில் 1,000 கோடி டன்னுக்கும் மிகையான களிமண் படிவம் அமைந்துள்ளது. இக்களிமண்ணை அடிப்படையாகக் கொண்டு நூற்றுக்கணக்கான தொழிற்சாலைகள் உண்டாக வாய்ப்புகள் உள்ளன.

# திருப்பெரும்புதூர் களிமண் படிவங்கள்


— முனைவர் இரா. இராமசாமி


## களிமட் படிவம்

திருப்பெரும்புதூர் களிமண் படிவம் 10 கோடி ஆண்டுகளுக்கு முன் தோன்றிய களிமட் பாறையிலிருந்து உண்டானது. இக்களிமட் பாறை சிதிலமடைந்து களிமண் படிவம் தோன்றியுள்ளது. இக்களிமட் பாறையும் களிமண்ணின் எல்லாவிதத் தன்மையையும் பெற்றுள்ளது. ஆனால், பாறையாகவுள்ளது. எனவே இக்களிமட் பாறையையும் களிமண் படிவாகக் கொள்ளலாம். களிமண் படிவத்தை மணலும், மண்ணும், செம்பாறாங்கல்லும், செஞ்சரளைகளும் 1லிருந்து 10 மீட்டர் ஆழம் வரை மூடியுள்ளது. களிமண்படிவம் மேற்கிலிருந்து கிழக்காகச் செல்லச்செல்ல 30 மீட்டரிலிருந்து 100 மீட்டர் ஆழத்திற்கு மேற்பட்ட குறுக்குயரத்தை உடையது. இக்களிமண் படிவத்தில் ஆங்காங்கே இடையிட்ட பருமணல் அல்லது குறுமணல் படலங்களும், ஏடுகளும், அடுக்குகளும், திட்டுகளும் விரவிக்கிடக்கின்றன. இவற்றின் நிறம் மஞ்சள், சாம்பல், கருஞ்சாம்பல், வெள்ளை, இளஞ்சிவப்பு, இளம்பழுப்பு வரை வேறுபடுகின்றது. இப்படிவில் மோன்ட்மோரிலோனைட், பிடிலைட், நான்ரோனைட், கயோலினைட், இல்லைட், காலிசைட், நாக்ரைட், திக்கைட் போன்ற களிக்கனிமங்கள் காணப்படுகின்றன. எனினும் கயோலினைட்டைவிட மோன்ட் மோரிலோனைட் சிறிது மிகையாகவுள்ளது. இக்களிக் கனிமங்களுடன், மாக்னைட்; குவார்ட்சு கால்சைட், இலிமோனைட், தையாஸ்போல் கனிமங்களும் இடத்திற்கு இடம் வேறுபட்ட அளவுகளில் கிடைக்கின்றன.

இக்களிமண்ணில் ஈரத்தன்மையும், சுட்ட எடையிழப்பும் ஏறத்தாழ சம அளவில் (முறையே 7%, 7%) இருப்பதால் மோன்ட் மோரிலோனைட்டுக் கனிமம் 50% குறைவாக இருக்குமென மதிப்பிடப்படுகிறது.

களிமண்ணில் சிலிக்கா அடக்கம் 60% உள்ளது. எனவே இதில் குறைந்தது 10% குவார்ட்சு கனிமம் இருக்கும் எனக் கருதப்படுகிறது. சுண்ண ஆக்சைடு 2%, மாக்னீய ஆக்சைட் 1.5% உள்ள இரும்பு ஆக்சைட் 1%லிருந்து 8% வரை வேறுபடுகிறது. அதனால் அதன் நிறம் வெள்ளையிலிருந்து இளஞ்சிவப்பு நிறம் வரை வேறுபடுகிறது. காரத்தன்மை 2% வரை வேறுபடுகிறது. சாயப்பூச்சின் மூலம் மோன்ட் மோரிலோனைட்டுக் கனிமம் மிகையாகவுள்ளதையறியலாம். மின்னணு உருப்பெருக்கியின் மூலம் தட்டையான வட்டக் களிமங்கள் காணப்படுகின்றனவா, அல்லது ஊசி





சுங்குவார் சத்திரத்திலுள்ள திறந்தவெளி
களிமட் சுரங்கத்தோற்றம்

போன்ற நீண்ட படிகங்கள் மிகையாக உள்ளனவாவென அறியலாம். திருப்பெரும்புதூர் பகுதியில் சுண்ணச் சத்துமிக்க மோன்ட் மோரிலோனைட் மிகையாகக் களிமண்ணில் காணப்படுகிறது. இது நீரை உறிஞ்சி உப்பும் தன்மையாதலால், உலர்ந்த பின் அதன் கன அளவு உப்பிய நிலையிலிருக்கிறது. அதில் நுண்துளைகள் மிகுதியாகக் காணப்படும். நுண்துளைகள் மிக்க களிமண் உலோக அயனிகளையும் அலோக அயனிகளையும் காற்றிலிருந்தும் நீரிலிருந்தும் உறிஞ்சுகிறது. அதனால், $Ca^{+2}$, $Mg^{+2}$, $K^{+}$, $Na^{+}$, $H^{+}$, OH, $NH^{-3}$ 4, $PO^{-3}$ 4, $SO^{-2}$ 4, $Cl^{-}$ போன்ற அயனிகள் கனிமத்தினுள் புகவோ அல்லது வெளியேறவோ செய்கின்றன. மற்றும் ஈயம், கோபால்ட், காட்மியம், துத்தநாகம் போன்ற கனமான தனிமங்களையும் உறிஞ்சுகின்றது. இது சுண்ண பென்டோனைட், சோடிய பென்டோனைட் என இருவகைப்படுகிறது. சுண்ணபென்டோனைட்டை விட சோடிய பென்டோனைட்டு சிறந்த முறையில் உறிஞ்சும் தன்மையது. கால்சியம் பென்டோனைட் நீரை உறிஞ்சி உப்புவதால் சிறந்த அடைப்பானாகப் பயன்படுகிறது. களிமண்ணைச் சுட்டால் $20^{0}$ செ. – $150^{0}$ செ. வெப்பநிலையில் ஈடத்தையிழக்கிறது. $400^{0}$ செ. – $600^{0}$ செ. வெப்பநிலையில் அதன் நீரடக்கத்தை இழக்கிறது. $550^{0}$ செ. – $1050^{0}$ செ. வெப்பநிலையில் அலுமினியச்சிலிக்கா ஆக்சைடுகள் சிதைந்து படிகத்தன்மையற்ற முல்லைட்டு, திரிடைமைட்டு உண்டாகின்றன. 1350 செ. வெப்பநிலையில் முல்லைட் படிகங்கள் உண்டாகின்றன. $1470^{0}$ செ. கிரிஸ்டோபலைட்டு உண்டாகிறது. $1545^{0}$ செ. கிரிஸ்டோபலைட்டும் முல்லைட்டும் உருகுகின்றன. $1745^{0}$ செ. – $1790^{0}$ செ. வெப்பநிலையில் களிமண் உருகுகிறது. $2000^{0}$ செ. வெப்பநிலையில் சிலிக்கா ஆவி வெளியேறுகிறது.

திருப்பெரும்புதூர் களிமண் மிருதுவானது, குறைந்த கடினத் தன்மை (2) கொண்டது. நீரை மிகையாக உறிஞ்சி உப்பும் தன்மையது. நீரில் கலந்து நுண் துகட்களாகப் பிரிய வல்லது. நனைந்த களிமண் பிசு பிசுப்பானது. நன்றாக வளையக்கூடியது வளைந்த நிலையில் நிலைத்து நிற்பது. சுட்டால் உறுதியடையும். இதில் ஏறத்தாழ 50 சதவீதம் மோன்ட் மோரிலோனைட், பிடிலைட், நான்ரோனைட் களிக்கனிமங்களும், சிறிதளவில் கயோலினைட், காலிசைட்டு போன்ற களிக்கனிமங்களும் உள்ளன. மற்றும் குவாட்சு, இலிமோனைட்டு தையார்போர் கனிமங்களும் மாக்னடைட்டு கனிமங்களும் காணப்படும். இக்களிமண் உலர்ந்த நிலையில் ஒரு நிறத்திலும், நனைந்தபின் வேறொரு நிறத்திலும், சுட்டபின் மற்றொரு நிறத்திலும் காணப்படும். இக்களிமண் கரியசாம்பல், சாம்பல், மஞ்சள், சிவப்பு, இளஞ்சிவப்பு, இளம்பழுப்பு நிறத்தில் காணப்படும். களிமண்ணில் அயஆக்சைட் குறிப்பிடத்தக்க அளவிலிருந்தால் மஞ்சள் நிறத்துடன் காணப்படும். அயஆக்சைடு 1% குறைவாக இருந்தால் வெள்ளை நிறத்திலும் 1% – 5% இரும்பு ஆக்சைடு இருந்து மணலுடன் கலந்திருந்தால் சுடும் பொழுது சிவப்பு நிறத்தையடைகிறது. ஆயஆக்சைட் குறைந்து சுண்ண ஆக்சைடு மிகையாக இருந்தால் இளஞ்சிவப்பு நிறத்தில் காணப்படும். அலுமினா அடக்கம் 35% – 40% வரை இருக்கும் பொழுது களிமண் உலைக்களக் களிமண்ணாகக் கருதப்படுகிறது. இதனைக் கொண்டு உலக்களச்செங்கல் தயாரிக்கப்படுகிறது.

களிமண்ணில் மிகச்சிறிய களிமட் துகட்கள் உள்ளன. இவை 4 மைக்ரான் ( 1 மைக்ரான் என்பது மில்லிமீட்டரில் ஆயிரத்தில் ஒரு பங்கு) உருவளவிலிருந்து 0.025 மைக்ரான் அளவு வரை சிறியனவாக இருக்கும். பொதுவாக அவற்றின் பருமன் அல்லது குறுக்குயரம் அதன் நீளத்தில் பத்தில் ஒரு பங்கு அல்லது ஐம்பதில் ஒரு பங்காக இருக்கும். அதனால் அவை தகடுகளாகக் காணப்படும். வட்டமான கட்டுக்களாகவோ, நீண்ட குழாய்களாகவோ, நார்களாகவோ, பட்டையாகவோ, ஊசிகளாகவோ, சில களிக்கனிமங்கள் தென்படும். இவற்றின் உருவளவை மின்னணு உருப்பெருக்கியில் பத்தாயிரம் முதல் ஐம்பதாயிரம் மடங்கு பெரிதாக்கிக் களிமட் கனிமங்களை இனம் கண்டு பிடிப்பார்கள். சில சமயங்களில் X – கதிர்களைப் பயன்படுத்தியும் அகச்சிவப்புக் கதிர்களைப் பாய்ச்சியும் களிமட் கனிமங்களை இனம் கண்டு பிடிப்பார்கள். மற்றும் களிமண்ணைச் சூடேற்றி அதில் ஏற்படும்

மாற்றங்களை உற்றுநோக்கியும் களிமண் கனிமங்களை இனம் கண்டுபிடிப்பர். நீளமான கனிமங்களும் தட்டையான வட்டக் களிக்கனிமங்களும் களி மண்ணில் காணப்படுவதால் அதன் பிணைவுத் திறன் மிகுதியாகிறது.

### வேளாண்மையில் களிமண்

களிமண் பள்ளங்களை நிரப்பி நிலத்தைச் சமன்செய்யப் பயன்படுகிறது. மணற்பாங்கான நிலத்தை நன்செய் நிலமாக்குகிறது. புழுதி என்பது உலர்ந்த களிமண்.

**"தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்**
**வேண்டாது சாலப் படும்"**

என்ற குறளின்படி நிலத்தை மீண்டும் மீண்டும் உழ, மண் உலர்ந்த புழுதியாகிறது. அதன் நீர்ப்பிடிப்புத் திறன் மிகுதியாகிறது. நீர் மண்ணுடன் வினைபுரிந்து சிதிலமடைகிறது. அதனால் புழுதியான களிமண் நீரிலிருந்தும் காற்றிலிருந்தும் இலை மக்குகளிலிருந்து சிதிலமடைந்த கனிமங்களிலிருந்தும் பொட்டாசியம், கால்சியம், மக்னீசியம், சோடியம், நைட்ரேட், சல்பேட், பாஸ்பேட் போன்ற அயனிகளைப் பெற்று பயிர்களுக்கு வழங்குகிறது.

தேவைப்படும். கஞ்சித் தண்ணீரில் சுத்தமான களிமண் 20 கிராமிலிருந்து 50 கிராம் வரை கரைத்து முறையே ஆடுகளையும், மாடுகளையும் குடிக்கச் செய்யலாம். ஆடு, மாடுகளின் வயிற்றுப் பொருமலையும், கழிச்சலையும் களிமண் கட்டுப்படுத்துகிறது. கிருமிகளையும் விஷப் பொருட்களையும் களிமண் உறிஞ்சி வெளியேற்றுகிறது என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். ஆண்டு ஒன்றுக்கு இதனால் பல்லாயிரக்கணக்கான டன் தானியங்கள் மிச்சப்படும். மனிதர்களும் இவ்விதமாக களிமண் கலந்த நீரைப் பருகியும், களிமண் சேறை உடல் முழுமையும் பூசிக் காய்ந்தபின் குளிக்கவும் செய்யலாம். மருந்துகளும் மாத்திரைகளும் களிமண் கலந்து செய்யப்படுகிறது.




ஸ்ரீபெரும்புதூர் குளத்தில்

சுத்தம் செய்த களிமண்ணை நன்றாகப் பொடி செய்து கறிக்கோழிகளுக்கு வைக்கும் தவிட்டில் 2% களிமண் கலந்து நீர்விட்டுப் பிசைந்து வைத்து வந்தால் அது விரைவில் எடைகூடி வளருகிறது. குறைந்த நாட்களில் விற்பனைக்கு வந்துவிடுகிறது. கோழி அதிக எண்ணிக்கையில் முட்டையிடுகிறது, கோழிகளின் நோய் எதிர்ப்புத் திறனும் மிகுதியாகிறது. அவற்றின் வயிற்றுக் கோளாறுகளுக்கும் கழிச்சலுக்கும் மருந்தாகிறது. கோழிகள் உண்ணும் உணவிலுள்ள கிருமிகளையும் விஷத்தையும் உறிஞ்சி மலமாக வெளித்தள்ளுகிறது. 45 நாட்களில் வளரும் கறிக்கோழி 1 கிலோ களிமண்ணை உண்ணும். அதனால் 1,000 கோழிகள் உள்ள பண்ணைக்கு 45 நாட்களுக்கொருமுறை 1டன் களிமண் தேவைப்படும். ஆடுகளும், மாடுகளும், எருமைகளும் களிமண் 2% கரைத்த நீரைக் குடித்தால் நல்ல வளர்ச்சியுடன்அதிக அளவில் பாலைச்சுரக்கும். ஆண்டு ஒன்றுக்கு, ஆடு ஒன்றுக்கு 10 கிலோ களிமண்ணும், மாடு ஒன்றுக்கு 50 கிலோ களிமண்ணும்

### பிற தொழிற் பயன்கள்

நீர் எண்ணெய், பாறையெண்ணெய் (பெட்ரோலியம்) கொழுப்புகள், சாராயம், பெயிண்ட்டு, கரிம வேதியல் பொருட்கள் ஆகியனவற்றைச் சுத்தம் செய்யவும் களிமண் பயன்படுகிறது. பாறை யெண்ணெயிலிருந்து பலவிதமான கரிமவேதியல் பொருட்களைப் பிரிக்கவும் களிமண் பயன்படுகிறது. பாறை எண்ணெய், எண்ணெய், சாராயம் போன்றவற்றிலுள்ள ஈயம், கோபால்ட்டு, காட்மியம், துத்தநாகம் போன்ற உலோக



மதுரமங்கலத்திலுள்ள நாட்டுச் செங்கற்சூலை

அயனிகளை களிமண் உறிஞ்சுகிறது. களிமண்ணிலிருந்து தயாரிக்கும் செயற்கை சியோலைட்டு Cs $^{134}$, Cs $^{137}$, Sr $^{50}$ போன்ற கதிரியக்கக் கழிவுத் தனிமங்களையும் உறிஞ்சுகிறது. தோல் துணி சாயத் தொழிற்சாலைக் கழிவு நீரைச் சுத்தம் செய்யும் பொருளாகவும் பயன்படுகிறது. இத்தொழிற்சாலைகளின் கழிவு நீர்த் தொட்டி / குட்டைகளிலிருந்து கழிவுநீர் கசிந்து நில நீருடன் கலக்காமல் தொட்டிகளின் / குட்டைகளின் உட்புறமாகப் பூசப்படுகிறது. உயர் தொழில்நுட்ப வளர்ச்சியால் களிமண் பூசிய நிலப்பாய்களும், துணிகளும், தாள்களும் விற்பனைக்கு வந்துள்ளன. அவற்றிற்கு பென்டோமாட்டு, கிளேமாக்சு, பென்டோபிக்சு, குண்சீல், பென்டோனைட்டு பாலிஎதிலின் காம்போசிட்டுப் பூச்சுகள் என வழங்கப்படுகின்றன. இவற்றைக் கழிவுநீர்க் குட்டைகளில் பொருத்தி கழிவுநீர் கசியா வண்ணம் செய்யலாம். மற்றும் சதுப்பு நிலங்களில் கட்டிடங்களைக் கட்ட சிறந்த வானக்கால்களை நிறுவலாம். கழிவுநீர் நிலத்தினுள் செல்லாதபடி தடுத்து ஆவியாக்கலாம். அமிலக்கழிவு நீருடன் சுண்ணாம்புக் கரைசலைச் சேர்த்து நீர்த்து ஆவியாக்கி எஞ்சும் கழிவுப் பொருளைக் களிமண்ணுடன் சேர்த்துச் சிறந்த உரப்பொருள் தயாரிக்கலாம். குடிநீரைச் சுத்தம் செய்வதில் களிமண் பெரும்பங்கு வகிக்கிறது. ஏரி குளங்களிலுள்ள களிமண் இயற்கையாகவே நீரைச் சுத்தம் செய்து குடி நீராக்குகிறது. களிமண் கலந்த மண்டித்தண்ணீரையும் இராமநாதபுரம், சிவகங்கை, திருவள்ளூர் மாவட்ட மக்கள் விரும்பிக் குடிக்கின்றனர்.

கல், மணல் நீக்கப்பட்ட களிமண்ணை அரைத்துப் பொடி செய்து அதில் மூன்றில் ஒரு பங்கு பாஸ்பாரிக் அமிலம், கந்தக அமிலம், நைட்டிரிக் அமிலம், அம்மோனியா எரிபொட்டாசு ஆகியவற்றில் ஏதாவது ஒன்றைக் கலந்து 90° வெப்பநிலையில் சுழலும் உருளை உலையிட்டு வறுத்து பின்னர் எஞ்சிநிற்கும் அமிலங்களையும் உப்புக்களையும் நீரில் கழுவி காயவைத்து மீண்டும் அரைத்து முறையே பாஸ்பேட், கல்பேட், நைட்ரேட்,குளோரைட் பொட்டாசிய உரங்களைத் தயாரிக்கின்றனர். இவ்வித இயல்பூட்டப்பட்ட களிமண் சிறந்த உரமாகக் கருதப்படுகிறது.

களிமண் குறைந்த கடினத்தன்மையுடன் (2) மிருதுவாயிருப்பதால் சுண்ணாம்புக் கல்லிலிருந்து தயாரிக்கப்படும் பற்பொடி அல்லது பசையைவிடச் சிறப்பானது மற்றும் இக்களிமண்ணுக்கு இயற்கையாகவே அயனி மாற்றத்தால் பற்களைச் சுத்தம் செய்யுமியல்பு உண்டு. ஆகையால் தக்க வேதியல் பொருட்களுடன் களிமண்ணைக் கலந்து பற்பொடியும் பற்பசையும் தயாரிக்கின்றனர். களிமண்ணுடன் சில பாறையெண்ணெய் வேதியல் பொருட்களைச் சேர்த்து நன்றாக ஒட்டக்கூடிய பசை தயாரிக்கப்படுகிறது. களிமண்ணைக் கொண்டு சிறந்த அடைப்பான்கள் (Sealant) தயாரிக்கப்படுகிறது. பென்டோனைட்டு துறப்பணத் துளைச் சுவர்பூச்சாகவும் பயன்படுகிறது. களிமண்ணைக் கழுவிச் சுத்தம் செய்து அரைத்து பூச்சிக்கொல்லி மருந்துகள், இரப்பர், தாள் பெயிண்டு, பீங்கான் தொழிற்சாலைகளில் நிரப்பிகளாகப் பயன்படுத்துகின்றனர். திருப்பெரும்புதூர்க் களிமண்ணிலுள்ள மோன்மோரிலோனைட்டுத் தவிர ஏனைய கயோலினைட்டுக் கனிமத்தையும் ஏனைய காலிசைட், திக்கைட்டு நான்ரோனைட் போன்ற பிற கனிமங்களையும் உயர் தொழில்நுட்ப மிதவை முறையில் பிரித்தெடுத்து அவற்றின் இயல்புக்கேற்ப சிறந்த பொருட்களை உற்பத்தி செய்யலாம். அலுமினா அடக்கம் 35% – 40% உள்ள களிமண்ணிலிருந்து சுட்ட அலுமினா உலைக்களச் செங்கல் ஆகியவற்றைத் தயாரிக்கலாம். ஆகையால் குறைந்த செலவில் எவ்வாறு களிக்கனிமங்களை உயர்தொழில் நுட்பப் பொருட்களைத் தயாரிப்பது என்பது குறித்து உலகின் பல இடங்களிலும் ஆராய்ச்சி நடைபெறுகிறது. திருப்பெரும்புதூர்க் களிமண் தொழில் நகரமான சென்னைக்கருகில்

2,000 ச.கிலோ மீட்டர் பரப்பில் கிடைப்பதால் குவார்சு, பெல்சுபார், சுண்ணாம்புக் கற்கனிமங்களை நிரப்பிகளாகப் பயன்படுத்தும் தொழிற்சாலைகளில் அக்கனிமங்களுக்கு பதிலாக மலிவுப் பொருளாகப் பயன்படுத்தலாம். இதனால் அக்கனிமங்களைத் தொலைவிலிருந்து எடுத்து வரும் செலவு மீதமாகிறது.

தேவந்தவாக்கம், மேய்யூர், ஒதப்பை, மேல்நல்லாத்தூர், சுங்குவார் சத்திரம், திருப்பெரும்புதூர், பல்லம், வல்லக்கோட்டை, மெப்பேடு, ஆவடி, பட்டாபிராம் போன்ற ஊர்களில் ஓரிரண்டு மீட்டர் ஆழத்திலேயே களிமண் படிவம் கிடைக்கின்றது. செரப்பனங்சேரி, ஓரகடம், எறையூர், பாலநல்லூர், மணவூர், திருவாலங்காடு, திருமுல்லைவாயில், களிமேடு, ஆத்திரம்பாக்கம், சீத்தஞ்சேரி, பெரியபாளையம், வெங்கல்பூச்சி அத்திப்பேடு, காரனோடை கன்னிகைப்பேர் ஆகிய ஊர்களில் சிறிது ஆழத்தில் 6 விருந்து 10 மீட்டர் ஆழத்தில் களிமண் படிவம் அமைந்துள்ளது. இப்பகுதிகளில் பொட்டல் வெளிகளும், வயல்களும் காணப்படுவதால் சுரங்கம் தோண்ட ஏதுவான இடமாகும். சுங்குவார் சத்திரத்திலுள்ள சுங்கக் களிமண் வாலாஜாவிலுள்ள பீங்கான் தொழிற்சாலைக்கு கொண்டு செல்லப்படுகிறது. மணற்பாங்கான நிலத்தில் சிறிது களிமண்ணைச் சேர்த்து (60% மணல் 40% களிமண் ) செங்கல் செய்கின்றனர். களிமண் மிகுந்துள்ள இடத்தில் (களிமண் 60% மணல் 40%) ஓடுகளும், பீங்கான் தளங்களும் செய்கின்றனர். மற்றும் கயோலின் கனிமத்துடன் சிறிதளவு இக்களிமண்ணைச் சேர்த்தால் பீங்கான் களிமண்ணை பிசு பிசுப்புடையதாக்கி நன்றாக வனைக்க முடியும். களிமண்ணின் துகள் உருவளவு களிமண்ணிலுள்ள களிமட் கனிமங்களின் வீதம் வேற்றுக் கனிமங்களின் வீதம் அவற்றின் வேதியல் தன்மை ஆகியவற்றைப் பொருத்து, தாள்கள், இரப்பர் பெயிண்டுகள், உறிஞ்சிகள், செயற்கைச் சியோலைட்டு வெப்பக் கட்டுபாட்டு உருளைக்கூடுகள், சுட்ட களிமண், செங்கல், ஓடு, மருந்து மாத்திரைகள், கால்நடைத்தீவனம், உலைக்களக் களிமண் ஆகியனவற்றை உற்பத்தி செய்ய முடியும். சென்னை மாநகரைச் சுற்றி ஆயிரத்திற்கு மேற்பட்ட செங்கல் சூளைகளில் நூறாயிரம் பேருக்கு மேல் வேலை செய்கின்றனர்.



அரண்வாயில் செங்கற் தொழிற்சாலை

## களிமட் தொழிற்சாலைகள்

திருப்பெரும்புதூர்க் களிமண்ணின் இயல்பையறிந்து அதனைப் பயன்படுத்தும் செங்கற்சூளைகளும், ஓட்டுச்சூளைகளும், பீங்கான் தொழிற்சாலைகளும் உள்ளன. மற்றும் இரும்பு வார்ப்பட அச்சுத் தொழிற்கூடமும், மணலி பெட்ரோலிய சுத்திகரிப்பு ஆலையும், பெயிண்டு தாள்கள், மின்தடைப்பீங்கான் தொழிற்சாலைகளும் உள்ளன. மற்றும் இக்களிமண்ணை நொறுக்கிக் கல் சரளை நீக்கி அரைத்து நீரில் கலக்கி சேற்றை தொடரான படிவுத் தொட்டிகளின் வழியாக இறுத்து பாய்ச்சி சுத்தம் செய்கின்றனர். உயர்தொழில் நுட்பத்தால் காற்று மற்றும் நீர்மிதிவை முறைகளாலும் கலக்கிகளாலும், அமுத்த வடிகட்டி முறைகளாலும் சுத்தமான களிமண்ணைப் பிரித்தெடுக்கின்றனர். மேலும் களிமண்ணிலுள்ள கயோலின் மற்றும் மோன்ட்மோரிலோனைட்டுக் களிமட் கனிமங்களையும் தனித்தனியே பிரித்தெடுக்க உயர் தொழில்நுட்பம் வந்துவிட்டது. நவீன மயமாக்கப்பட்ட களிமண் ஆலைகள் எளிதாகக் களிமட் கனிமங்களைத் தனித்தனியே பிரித்துவிடும். ஆயினும் தமிழகத்தில் அல்லது சென்னைக்கருகில் இத்தகைய ஆலைகள் இன்னும் ஏற்படுத்தப்படவில்லை. களிமண் படிவிலுள்ள கனிக்கனிம வகைகள் பற்றி விரிவான ஆராய்ச்சிகள் இன்னும் மேற்கொள்ளப்படவில்லை. அவ்வாறு ஆராய்ந்தால் ஓரிடத்தில் கிடைக்கும் களிமண் படிவின் தொழிற் தகுதியை வரையறுத்து குறைந்த செலவில் உயர் தொழில்நுட்பக் களிமட் பொருட்களை உற்பத்தி செய்யலாம். ●

# டேனிடா குடிநீர் மற்றும் சுகாதார திட்டம் விழுப்புரம் மாவட்டம்

என் பெயர் விஜயகுமாரி. வயது 25. நான் பெரியதச்சூர் ஊராட்சியில் என் கணவர் இராமசந்திரனுடன் வசித்து வருகிறேன். கைப்பம்பு மெக்கானிக் பயிற்சி பற்றிய விவரத்தை ஊராட்சித் தலைவர் மூலம் கேள்விப்பட்ட பொழுது மிகவும் பயமாகவும், வியப்பாகவும் இருந்தது. இதுபோன்ற கடினமான வேலையை எப்படி செய்யமுடியும்? என்ற கேள்வியே என் பயத்திற்கு காரணம். ஆனால் பயிற்சியில் கலந்து கொண்ட பின்னர் எனக்குள் உற்சாகமும், ஆர்வமும் ஏற்பட்டது. கைப்பம்பு ரிப்பேர் செய்வதில் பயிற்சி பெற்ற பிறகு என் ஊரில் பழுதான கைப்பம்புகளை ரிப்பேர் செய்ய ஆரம்பித்தேன். என்னுடன் சேர்ந்து பயிற்சியில் கலந்து கொண்ட தனசேகரன் என்ற மெக்கானிக்கோடு இணைந்து உள்ளூரிலும், வெளியூர்களிலும் கைப்பம்பு பழுது நீக்கப் பணியில் ஈடுபட்டு வருகிறேன்.

கிராம மக்களுக்கு சுகாதாரமான குடிநீர் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற சேவை மனப்பான்மையோடு இத் தொழிலை ஆரம்பித்த பிறகு இதனால் ஓரளவு மதிப்பூதியம் கிடைத்து வருகிறது. ஒரு கைபம்பிற்கு ரூ.160 மதிப்பூதியமாக கிடைக்கும். நானும், திரு.தனசேகரனும் சேர்ந்து கைப்பம்பு பழுது நீக்கம் செய்யும் தருணங்களில் ரூ.80 வீதம் மதிப்பூதியத்தை பகிர்ந்து கொள்வோம். இது தவிர, கைப்பம்பு அமைந்துள்ள இடத்தைச் சுற்றியுள்ள பயனாளிகள் தங்களால் இயன்ற தொகையை தருகின்றனர். இத்தொகையை வைத்து எனது வீட்டை புதுப்பிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு உழைத்து வருகிறேன். இப்பொழுதெல்லாம் என்னை பார்ப்பவர்கள், "பொண்ணு புதுசு புதுசா என்னென்னவோ பண்ணுது". "தலைவர் வேலை வாங்கிக் கொடுத்திருக்கிறார்'' என பேசிக் கொள்கின்றனர்.



இப்பயிற்சியில் கலந்து கொண்ட பின் நானும் சமூகப் பணி செய்கிறேன். கடினமான தொழில் மூலம் வருமானம் சம்பாதிக்கின்றேன் என்று நினைக்கும் போதே பெருமையாக உள்ளது. கைப்பம்பு பராமரிப்பு தொழிலுக்கு முன்னர் விவசாயத்தில் கூலி வேலைக்கு செல்வேன். அப்போது ரூ.30 மட்டுமே கூலியாக கிடைக்கும். தற்போது கைப்பம்பு பராமரிப்பு பணியில் கிடைக்கும் கணிசமானத் தொகை என்னைப் பொருத்தவரை பெரிய தொகை. மேலும் இத்தொழிலை சிறப்புற செய்து நல்ல பெயர் வாங்க வேண்டும் என்ற ஆசையுடன், நம்பிக்கையை ஆணி வேராய் வைத்து பணி செய்து வருகிறேன்.


கைப்பம்பு பராமரிப்பு தவிர, மின்விசை பம்பு பராமரிப்பிலும் டேனிடா மூலம் பயிற்சி பெற்றுள்ளேன். எங்கள் ஊரில் உள்ள மின்விசை பம்பினை முறையாக வைத்து அனைவருக்கும் சுகாதாரமான குடிநீர் கிடைக்க பணி செய்து வருகிறேன். அதேபோல் டேனிடா திட்டம் மூலம் நடைபெற்ற நான்கு நாள் மின்விசை பம்பு பராமரிப்பு பயிற்சியில் ஆசிரியராக கலந்து கொண்டேன். என்னைப் போல் பெண்கள் பலர் இத்துறையில் வளர்ந்து வருவது எனக்கு மிகவும் பெருமையளிக்கின்றது.

## டேனிடா குடிநீர் மற்றும் சுகாதார திட்டம், மாவட்டம் ஒருங்கிணைப்பகம்

எனது பெயர் உமா ராஜகோபால். 32 வயது நிரம்பிய நான் திருமணமானவள். எனக்கு பள்ளி செல்லும் தினேஷ் குமார், திவாகர் என இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள். நான் கெடார் ஊராட்சியிலுள்ள செல்லக்குப்பம் என்ற குக்கிராமத்தில் வசித்து வருகிறேன்.

நான் டேனிடா திட்டம் நடத்திய ஐந்து நாள் "கை பம்பு மெக்கானிக்" பயிற்சியில் கலந்து கொண்டு பயிற்சி பெற்றேன். பயிற்சியின் போது வேலை கடினமாய் இருந்தாலும் பின்னர் பழக்கத்தில் வேலை சுலபமாகிவிட்டது. பயிற்சி முடிந்து வீடு வந்தவுடன் ஆர்வம் மற்றும் விழிப்புணர்வு மிகுதியாலும், கைப்பம்பு அமைந்துள்ள இடங்களையும், கைப்பம்பினையும் சுத்தம் செய்து முன் கவன பராமரிப்பு செய்தேன். முதலில் என்னைப் பார்த்தவர்கள், "இவ என்ன தான் கைப்பம்பு சீர்செய்யப் போறாளோ தெரியல" என்றெல்லாம் எனது ஆர்வத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் பேசினர். ஆனாலும், நான் தொடர்ந்து எனது பணியை கவனமாக செய்து வந்தேன்.

எனக்கு மேலும் உற்சாகமளிக்கும் வகையில் டேனிடா திட்டம் "கைப் பம்பு மெக்கானிக்குகளுக்கு" பயிற்சி கொடுக்கும் வாய்ப்பினை அளித்தது. இத்தகைய பயிற்சிகளில் மற்ற பெண்களுக்கு கற்றுத் தந்ததைவிட நான் அதிகம் கற்றுக் கொண்டது தான் ஏராளம். கைபம்பு சம்பந்தப்பட்ட சிறு சிறு பிரச்சினைகளை இன்னும் சிறப்பாக தெரிந்துகொள்ள முடிந்தது. திருமணமான நாள் முதல் வீட்டு வேலைகளை மட்டும் செய்து கொண்டு, வெளி உலகம் தெரியாதிருந்த எனக்கு இப்பயிற்சி மூலம் ஒரு புதிய தொழில் திறனை கற்றுக்கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. இப்பொழுது சமுதாயத்திற்கு சுத்தமான குடிநீர் கிடைக்க வழி வகை செய்யும் மெக்கானிக் என்ற பெயருடன் வலம் வருவதை நினைத்து பெருமையாக உள்ளது.



பெண் மெக்கானிக்காகி என்ன சாதித்து விடப் போகிறாள் என்று நினைப்பவர்கள் தான் ஏராளம். இது என்னுடைய அனுபவத்தில் நான் கண்ட உண்மை, ஆனால் திட மனதோடு நான் எனது பணியினை கவனமாகச் செய்ய செய்ய, மக்களுக்குள்ளும் விழிப்புணர்வு வந்துள்ளது என்பதை நான்அனுபவ பூர்வமாக காண்கிறேன். உதாரணமாக, சமீபத்தில், எங்கள் ஊரில் உள்ள கைப்பம்புகளுக்கு முன் கவன பராமரிப்பு செய்து கொண்டிருந்தேன். ஒரு கைப்பம்புக்கு அருகாமையிலுள்ளவர்கள் வந்து "எல்லாரும் சொன்னாங்கம்மா, ரேடியோ கடை வெச்சிருக்கிற தம்பி சம்சாரம் தான் கைப்பம்பு சீர் செய்யுதுன்னு. நேர்ல பாக்கிறப்போதாம்மா தெரியுது உன்னோட திறமை என்று கூறியதோடு மட்டுமின்றி அவர்கள் வீட்டருகிலுள்ள இரண்டு கைப்பம்புகளையும் ரிப்பேர் செய்து தர வேண்டுமென கேட்டுக் கொண்டனர். நான் வீட்டில் இருந்திருந்தால் இந்த பெயர் வந்திருக்காது. அதோடு மட்டுமில்லாது, பெண்களாலும் கடினமான வேலைகளை செய்ய முடியும் என்பதை சமுதாயத்திற்கு படம் பிடித்துக் காட்டியிருக்க முடியாது.

இப்பணியினை நான் சிறப்புற செய்து வருவதற்கு எனது கணவருடைய ஒத்துழைப்பு அதிகம். கைப்பம்பு பராமரிப்பிற்காக செல்லும் வேலைகளில் எவ்வித தடங்கலுமின்றி அனுப்பி வைப்பார். குறிப்பிட்ட நேரத்திற்குள் செல்ல வேண்டும் என்பதற்காகவே என்னை சைக்கிளில் அழைத்துக் கொண்டு வந்து பஸ்ஸில் செல்ல உதவி செய்வார். கைப்பம்பு பராமரிப்பு தொடர்பான எனது அனுபவங்களை பகிர்ந்து கொள்கிற வேளையில், முகம் சுளிக்காமல் உற்சாகத்துடன் கவனிப்பார். மேலும் என் கணவரின் ஒத்துழைப்பும் எனது சுயநம்பிக்கையும் உள்ளபோது கைப்பம்பு பராமரிப்பு பணியை நல்ல முறையில் செயல்படுத்த என்னால் முடியும். ●

# கதவைத் தட்டும் வாய்ப்பு



☐ Dr. P.T. சூர்யகுமார்

## கணிப்பொறிக் கல்வி

கம்ப்யூட்டர் அறிவு என்பது எல்லாத்துறைகளிலும் தேவைப்படும் ஒன்று. இப்போது கம்யூட்டர் யுகம். எனவே தமிழக அரசு, எல்லாத்துறைகளிலும் முன்னேற்றம் காட்டுவதுபோல் இத்துறையிலும் மாணவர்களை சிறப்படையச் செய்யக் கிராமங்களில் உள்ள பள்ளிகளில்கூட கம்ப்யூட்டர் அறிவை வளர்க்க பல வழிகளைத் தீட்டிச் செயல்படுத்தி வருகின்றது.


அடுத்த இரண்டு ஆண்டுகளில் அனைத்து மாணவர்களையும் கணிப்பொறி வல்லுநர்களாக மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதையும், விரைவில் TIDEL PARK (தமிழகத்தின் பெரிய கம்ப்யூட்டர் மையம்) மூலம் விரிவுபடுத்தலும் தமிழக மக்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும் செய்தி.

கம்ப்யூட்டர் துறையை இரண்டாகப் பிரிக்கலாம். (i) Hardware (ii) Software. Hardware என்பது கம்ப்யூட்டரை, வடிவமைத்தல், பராமரித்தல், அதற்குரிய உபகரணங்களைத் தயாரித்தல் ஆகும். Software என்பது கம்ப்யூட்டரைப் பல வழிகளில் நாம் பயன்படுத்தும் முறையைச் சார்ந்தது. இதில் வேலைவாய்ப்பு அதிகம். கடைக்கணக்கு எழுதுவது முதல் வான்வெளி ஆராய்ச்சி, வெளிமண்டலம் செல்லுதல் முதற்கொண்டு செய்து முடித்திடலாம்.

### கம்ப்யூட்டர் படிக்க எத்தகைய ஆற்றல் பெற்றிருக்க வேண்டும் (Traits) :

6 முதல் 60 வயதிற்கும் மேலும் விரும்புவோர் படிக்கலாம்.

1. கற்பனைச் சக்தி (Imagination), வடிவமைத்தல் (formation), சுறுசுறுப்பு வேண்டும் (alertness),
2. ஆராய்ந்து பார்த்தல் (Analytical Mind)
3. எண்ணாற்றல் (Numeracy), அறிவுத்திறன் (Resourcefulness)



4. பொறியியல் வல்லமை (Technology Skill)
5. அயராது உழைத்தல் (Hardwork)
6. தனித்தன்மையுடன் கூடிய பகிர்ந்து வேலைசெய்யும் யுக்தி (to work as one of a team as well independently).
7. சரியான முறையில் மற்றவர்களோடு கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளும் திறமை (ability to communicate with people).

**கணிப்பொறிக்கல்வியின் சிறப்பு :**

★ கணிப்பொறிக் கல்வி மூலம் வர்த்தகம் என்ற நிலை உருவாகியுள்ளதால், உலகிலுள்ள ஒவ்வொருவருக்கும் கணிப்பொறிக்கல்வி அவசியம்.

★ 'உலகின் கணிப்பொறிச் சந்தை' 900 மில்லியன் டாலராக (ரூ.40,000 கோடி உள்ளது). நம் நாட்டின் மக்கள் தொகை தற்போது 100 கோடியை தாண்டிவிட்டது. இதில் 20 கோடி மக்கள் கணிப்பொறித் துறையில் ஈடுபட்டால்கூட, ஆண்டுக்கு குறைந்தபட்சம் ரூ.600 கோடி வருமானம் கிடைக்கும்.


★ மருத்துவர்கள், கட்டடக் கலை நிபுணர்கள், பொறியியல் வல்லுநர்கள், திட்ட நிபுணர்கள், ஓவியர்கள் எனப் பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்களுக்கும் கணிப்பொறியின் உபயோகம் மகத்தானது.


★ தொழில்நுட்பம் நாளுக்குநாள் மாறுவதுபோல், கணிப்பொறியின் வளர்ச்சியும், அதன் தேவையும் மாறுகின்றது. எனவே, நம்முடைய அறிவுத்திறனையும் அதற்கேற்ப வளர்த்துக் கொள்ளவேண்டும்.

★ நம்மிடம் மற்றவர்கள் எதிர்பார்ப்பதைவிட மிக அதிக அளவில் செய்துகாட்டும் போது, வெற்றிக்கனி நம் கையில் விழுகின்றது.

★ CAD, CAM, Multimedia போன்ற பல்வேறு பிரிவுகள் சிறந்தது.

★ பெண்கள் எப்போதும் சுட்டி. அதிலும் அவர்களிடம் அதிகமான Logistic thinking உண்டு. இதனால் கம்ப்யூட்டர் பெண்களின் பங்கு மிக அதிகம்.




★ தகவல் தொழில்நுட்பம் (Information Technology) கணிப்பொறி அறிவியல் தொழில்நுட்பம் (Computer Science and Technology), இணைய வசதிகள் (Internet) அறிவு அதிகமாக வரவேற்கப்படுகின்றது.

★ 6 வயது குழந்தை 60 வயது தாத்தா பாட்டி வரை, கணிப்பொறியைக் கற்றுக்கொள்கிறார்கள்.

**கம்ப்யூட்டரின் பல வேலைவாய்ப்புப் பிரிவுகள் :**

★ தரவுகளைப் பதிவுசெய்தல் (Data entry), பிரசுரங்கள் (Computer Publishing), புரோகிராமிங் (Operating System) இவைகளில் பகுதிநேரத் தொழில்நுட்ப உதவியாளர்களாக இருந்து வருமானம் பெருக்கலாம்.

**e-mail :**

குறைந்த நிமிடத்தில் எந்த தகவலையும் கொடுத்து, அதற்குரிய பதிலையும் பெறும் வாய்ப்பு. இப்போதெல்லாம் சென்னையில் பெட்டிக்கடைகளை விட e-mail கடைகள் அதிகரித்து விட்டன எனலாம்.

**e-commerce :**

வர்த்தக வளர்ச்சிக்குப் பெரும் பங்கு வகிக்கின்றது.

தேவையான அறிவு : பிசினஸ் ஸ்ட்ரேட்டஜி, சேல்ஸ் அண்ட் மார்க்கடிங், பிரைஸிங், ஆர்டரிங் ஆன் லைன், விண்டோஸ் இன்டர்நெட், வெப்டிசைன், போட்டோஷாப், இமேஜ் டைப்ஸ், 3-டி அனிமேஷன், டெக்ஸ்ட் அனிமேஷன், ஷாக்வேவ், காஸ்டிங், டெமோகிராபிக்ஸ், அட்வர்டைசிங், சைபர்லாஸ், இன்டர்நெட், ஜாவா, எச்.டி.எம்.எல்., கோர்பா, சிஜிஐ, ஓஓபிஎஸ் (OOPS), ஏஎஸ்பி (புரோகிராம்ஸ்).

**வெப் அண்ட் நெட்ஒர்க் :**

எஸ்.கியூ.எல் சர்வர், இன்ஸ்டாலிங் அண்ட் கான்பிகரிங் சர்வர், மேனேஜிங் கொரிஸ், இன்டர்நெட் அண்ட் இன்டராநெட், வெப்சைட் செக்யூரிட்டி போன்ற நெட்ஒர்க் பிரசித்திமானவை ஆகும்.

**மெடிக்கல் டிரான்ஸ்கிரிப்ஷன் :**

மருத்துவர் கூறும் ஒலி வடிவில் இருக்கும் (ஆங்கிலத்தில்) மருத்துவக் குறிப்புகளை கேட்டு அதை எழுத்து வடிவில் மாற்றி (ஆங்கிலத்தில்) அமைத்தல் மெடிக்கல் டிரான்ஸ்கிரிப்ஷன் ஆகும்.

**தகுதி :**


ஆங்கில அறிவு தேவை.

- டாக்டர்கள் கூறும் மருத்துவச் சம்பந்தமான விஷயங்களைப் புரிந்துகொள்ளும் மருத்துவத்திறன், அறிவு, மருத்துவ டெர்மினாலஜி தெரிந்துவைத்து இருத்தல்.
- கம்ப்யூட்டரை விரைவில் இயக்கும் திறன்.

**தேவை :**

கம்ப்யூட்டர், இன்டர்நெட், அதிகவேகம்கொண்ட மோடம், டெலிபோன் டேட்டா கம்யூனிகேஷன்.

மாதம் ரூ.8 ஆயிரம் வரை சம்பாதிக்கலாம்.



**இன்டர்நெட் :**

உலகின் ஒரு மூலையில் உள்ளவர்கள் நொடியில் தொடர்புகொண்டு உரிய தகவல்களைப் பெறும் சாதனம் இன்டர்நெட் ஆகும். பலத்தரப்பட்ட வெப் சைட்டுகள் மூலம் அந்தந்தத் துறையின் முழு விவரங்களைப் பெறமுடியும்.

தற்போது இந்தியாவில் 50,000 (ஐம்பது ஆயிரம்) வெப்சைட்டுகளுக்கு மேல் உள்ளன.

- இந்த வெப்சைட்டுகளைச் சரிவர இயக்க, வெப் மாஸ்டர்கள், வெப் அட்மினிஸ்ட்டிரேட்டர்களின் தேவையும் அதிகரித்துவிட்டது.
- ஈ–காமர்ஸ் என்ற மின்வணிகத்தின் வளர்ச்சி, வெப்பேஜ் டிசைனர்களின் தேவையை அதிகப்படுத்தியுள்ளது.

M.W : Master of Website என்ற கோர்ஸ் விரைவில் மிகவும் பிரபலமாகிவிடும். திரைப்படங்களை இயக்கும் டைரக்டர்கள் போல் வெப்சைட் டைரக்டர்கள் தோன்றி விடுவார்கள் எதிர்காலத்தில்.

**மல்டி மீடியா :**

கம்ப்யூட்டரைப் பயன்படுத்தி திரைப்படங்களில் ஸ்பெஷல் எஃபெக்ட்டுகளை உருவாக்கும் வகையில், அனிமேஷன், வீடியோ, கிராபிக், ஒளி, ஒலி வடிவம் ஆகியவற்றை ஒன்றிணைத்துச் செயல்படுத்துவது மல்டிமீடியா.

**கம்ப்யூட்டரில் பயிற்சிகள் :**

1. Word Processing and Office Automation
2. PC Applications
3. Data Entry Operation (தகவல்களை கம்ப்யூட்டரில் பதிவு செய்தல்.)
4. Diploma in Computer Technology
5. B.Sc. (Computer Science)
6. BCA (Computer Applications)
7. B.E. / B.Tech Computer Technology / Computer Science / B.Tech (Information Technology) - 4 years
8. M.Sc. (Software Engineering) - 5 years (பாரதியார் பல்கலைக்கழகம், P.S.G. தொழில்நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர்)
9. MCA (Computer Applications) - 3 years
10. M.Sc. (Computer Science) / M.Sc.(IT) / M.Sc.(Software Enggn.) - 2 years

ஜாவா புரோகிராமிங், வெப்பேஜ் டெவலப்மெண்ட், விஷுவல் பேசிக் (வெளிநாடுகளில் சென்று வேலை

செய்ய விரும்புவோர் மைக்ரோ சாப்ட், சிஸ்கோ, நோவல் போன்ற நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் தேர்வு தேர்ச்சி பெற்று இருக்கவேண்டும். இதிலும் Microsoft Certified System Engineer, Product Specialist, Solution Developer, Certified Novel Engineer, Cisco Certified Network Associate என்ற பயிற்சிகள் மிகச் சிறந்தவை.

பெரும்பாலான தனியார் நிறுவனங்கள் தற்போது அளிக்கும் சான்றிதழ்களும், பட்டயங்களும் பல்கலைக் கழகங்களால் அங்கீகரிக்கப்பட்டவை இல்லை. எனவே அதனை சீரமைக்கும் வகையில் மத்திய அரசு மின்னணுத்துறை O,A,B,C Level பயிற்சிகளை நடத்துகின்றது.

**கம்ப்யூட்டர் கல்வியில் சிறந்த நிறுவனங்கள் யாவை?**

1. இந்தியத் தொழில்நுட்பக் கல்லூரிகள் (Indian Institute of Technology) (6 - IITs) (சென்னை உள்பட)
2. தகவல் தொடர்பு தொழில்நுட்பத்துறை (4 - IIITs)
3. மண்டலப் பொறியியல் கல்லூரி (17 - RECs) (சென்னை உட்பட)
4. i. இந்திய விஞ்ஞானக் கழகம் (Indian Institute of Science, Bangalore)

   ii. பனாரஸ் இந்துப் பல்கலைக்கழகம்/பிர்லா தொழில்நுட்ப நிறுவனம்/டெல்லி இன்ஜினியரிங் கல்லூரி/ரூர்கி பல்கலைக்கழகம்/ஹைதராபாத்தில் உள்ள கணித மேம்பாட்டு மையம்/அலிகாரா முஸ்லீம் பல்கலைக்கழகம்
5. தமிழ்நாட்டில், அண்ணா பல்கலைக்கழகம். மேலும் பலக்கல்லூரிகளிலும் கம்ப்யூட்டர் கல்வி அளிக்கப்படுகிறது.
6. தமிழகத்தில் உள்ள ஏறத்தாழ 367 கலை மற்றும் விஞ்ஞானம் நடத்தும் கல்லூரிகளில் BCA, B.Sc.(Computer Science), Diploma in Computer என +2 மாணவர்கள் கணினிக்கல்வி பெறத் தமிழக அரசு ஏற்பாடு செய்துள்ளது.
7. மேலும் DOEACC, NCST, CSI போன்ற நிறுவனங்களில் அளிக்கப்படும் கல்விகள் சிறப்பு வாய்ந்தவைகளாகக் கருதப்படுகின்றது.

இதுவல்லாது கம்ப்யூட்டர் அறிவினையும், Softwareல் சிறப்பான பயிற்சிகளை NIIT, APTECH, SSI, COMPUTER POINT போன்ற நிறுவனங்களில் படித்தவர்களுக்கு வெளிநாட்டில் வேலைவாய்ப்புகள் அதிகம்.

**NCST (National Centre for Software Technology)**

(National Centre for Software Technology, 6th Floor, Main Tower, Viswesvaraya Centre, Bangalore-1)

மத்திய அரசின் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சகத்தின் மூலம் அகில இந்திய அளவில் நடத்தப்படும் (ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம்) தேர்வினை NCST என்ற மையம், நான்கு பிரிவுகளாகத் தேர்வுகளை நடத்துகின்றது.

இத்தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்குப் பல உயர்தரக் கல்வி நிலையங்களில் மேற்படிப்புக்கு முன்னுரிமை வழங்குவதோடு, பல நிறுவனங்களில் வேலைக்கும் தகுதி பெறுகின்றனர்.

| 4 கட்டத்தேர்வுகள் | கல்வித்தகுதி |
|---|---|
| 'E' லெவல் | இளநிலைப்பட்டம் (அ) டிப்ளமோ (பொறியியல்துறை) |
| 'I' லெவல் | 'E' லெவல் 50% மதிப்பெண்ணுடன் பாஸ் (அ) இளநிலைப் பட்டம் (கம்ப்யூட்டர் சயின்ஸ்) (அ) டிப்ளமோ (கம்ப்யூட்டர்) |
| 'D' லெவல் | 'I' லெவல் 50% மதிப்பெண்ணுடன் பாஸ் |
| 'G' லெவல் | 'D' லெவல் 50% மதிப்பெண்ணுடன் பாஸ் B.E. (கம்ப்யூட்டர் சயின்ஸ்/EEE/EC)<br>B.Tech (I.T)<br>MCA/MSc./M.Sc.(5 years)<br>PGD (IT) |

இந்த நான்கு கட்டத்தேர்வுகளோடு, கீழ்க்காணும் படிப்புகளுக்குப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றது.

1. PG Diploma in Software Technology/ Internet Technology

2. Advanced PGD in Software Technology

**DOEACC** (Department of Electronics, Accredition of Computer Courses) (The DOEACC Society, Electronics Niketan, 6, CGO Complex, Lodhi Road, New Delhi-110 037.)

அகில இந்திய அளவில் வருடத்திற்கு இருமுறை ஜனவரி, ஜூலை மாதங்களில் கம்ப்யூட்டர் பயிற்சி – தேர்வுகளுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. பல்வேறு தனியார் நிறுவனங்களில் படிக்கும் மாணவர்கள், இத்தேர்வினை எழுதினால் மத்திய அரசே சர்டிபிகேட் கொடுக்கின்றது. அங்கீகாரத்திற்குக் கவலை இல்லை. வேலை வாய்ப்பிற்கும் கவலை இல்லை.

நான்கு கட்டத் தேர்வுகள் நடைபெறுகின்றது. அவையாவை என்பதைப் பார்ப்போம் :

| 4 கட்டத் தேர்வுகள் | கல்வித் தகுதி |
|---|---|
| 'O' level | +2 (or) S.S.L.C.(or) ITI |
| 'A' level | 'O' level (or) Dip.in Computer (or) IT + 1 year Exp. |
| 'B' level | 'A' level pass (or) PGDCA (or) Dip.in Computer (IT) + 2 year Exp. |
| 'C' level | 'B' level pass (or) B.E. (or) M.Sc.+ 1 year Exp. (or) MBA/GATE (Computer) |

**C.S.I. (Computer Society of India)**
(Directorate of CSI, CPT Complex, Taramani, Chennai)

இவை தன்னுடைய 62 கிளைகளின் மூலம் ஏறத்தாழ 20 கோர்ஸ்களை நடத்தி, சான்றிதழ்களை வழங்குகின்றது.

- ஒவ்வொரு வருடமும் (இரண்டு முறை) ஜனவரி, ஜூலை மாதங்களில் கோர்ஸ்களுக்கான தேர்வுகள் நடைபெறும்.
- தேர்வுக்கட்டணம் ஒவ்வொரு பாடத்திற்கும் ரூ.350 தான்.
- +2 படித்த மாணவர்கள் இங்கு சேரலாம்.
- ஏறத்தாழ 16 பயிற்சி இங்கு கற்றுத் தரப்படுகின்றது.

**PG DIPLOMA (INFOR.TECH) (1 YEAR)**
**– டானிடெக் நிறுவனம் நடத்துகிறது.**

**தகுதி :** B.Sc. (Computer) / BE / B.Tech.

கம்ப்யூட்டரில் எம்.எஸ். ஆபிஸில் புகழ்பெற்ற பில்கேட்ஸ், பென்டாசாஃப்ட் டெக்னாலஜியின் தலைவர் டாக்டர் வி. சந்திரசேகரன், இன்போசிஸ் நிறுவனத்தின் தலைவர் திரு.நாராயணமூர்த்தி அனைவரும் சாதனைப் படைத்த கம்ப்யூட்டர் இளைஞர்கள்தான்.

இது போன்ற இளைஞர்கள் இன்னும் உருவாகப் போகின்றார்கள். தமிழக இளைஞர்கள் எதிலும் முதன்மை வகிப்பதில் ஆர்வம் உடையவர்கள். இன்று ஏறத்தாழ பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் வெளிநாடுகளில் சென்று (அமெரிக்கா, ஜப்பான், நியுசிலாந்து, கனடா, ஆஸ்திரேலியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில்) பொருள் ஈட்டுகின்றனர்.

இதற்காகவே தமிழக முதல்வர் தமிழகத்தில் சுறுசுறுப்பாக வேலைசெய்யும் இளைய IAS அதிகாரிகளைச் சேர்த்துச் செயலகத்தில் திட்டங்களைத் தீட்டுவதிலும், செயல்படுத்துவதிலும் போர் கால அடிப்படையில் செயல்படுவதுபோல் விரைந்து செயலாற்றுகின்றனர்.

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் எனச் சூளுரைத்து வழிநடத்தும் தமிழக அரசு, எங்கும் கம்ப்யூட்டர், எதிலும் கம்ப்யூட்டர் திறன் எனத் திட்டமிட்டு பட்டிதொட்டிக் கிராமங்கள் முதற்கொண்டு கம்ப்யூட்டர் அறிவு பெறத் திட்டமிட்டு, கல்விச் செயலகம் முனைப்போடு செயல்படுவது குறித்து எல்லோரும் வரவேற்கின்றனர். விரைவில் "தமிழக இளைஞர்கள்", "உலகின் இளைஞர்களாக"த் திகழப் போகின்றனர். 7,77,777 மாணவர்கட்கு விரைவில் வேலைவாய்ப்பு வசதி ஏற்பட உள்ளது.

**தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியைப் பற்றி தமிழக முதல்வர் சட்டசபையில் குறிப்பிட்டதாக வெளிவந்த செய்தி :**

இன்டர்நெட்டின் மூலம் நறுமணத்தை நுகரக்கூடிய வளர்ச்சி பருமானம் (Development) உலக மக்களை ஒரு சிறிய 8" x 8" பெட்டியில் அடக்கிவிட்டது என்பதே உண்மை. தமிழகம் தகவல் தொழில் வளர்ச்சியில் பெரும் ஆக்கப்பூர்வமான ஆர்வம் காட்டுகின்றது என்பதை மாணவர்களும் பெற்றோர்களும் உணர்ந்திடும் வண்ணம் கீழ்க்கண்ட தொகுப்பினை படித்து பயன்பெறலாம்.

- இந்தியாவில், தமிழ்நாட்டில்தான் ஏறத்தாழ 146 பொறியியல் கல்லூரிகளின் மூலம் 13 ஆயிரம் பட்டதாரிகள் தகவல் தொழில்நுட்பம் கல்வி பயின்று வெளியே வருகின்றனர். வரும் இரண்டு ஆண்டுகளில் இது மேலும் அதிகரித்து ஏறத்தாழ 20 ஆயிரம் மாணவர்கள் வெளியே வரப்போகின்றனர். அனைவருக்கும் அருமையான வேலைவாய்ப்பு இந்தியாவிலும், வெளிநாட்டிலும் உள்ளது.

- முக்கியமாக தமிழக மாணவர்களுக்கு அமெரிக்கா, கனடா, சிங்கப்பூர், ஜப்பான் போன்ற நாடுகளில் வரவேற்பு அதிகம் உள்ளது. இதை உறுதிபடுத்தும் வகையில் 98–99 சென்னையிலுள்ள அமெரிக்க தூதரகம், ஏறத்தாழ 21,371 பேர்களுக்கு விசா வழங்கியுள்ளது.

- அக்டோபர், 1998இல் தமிழக அரசு தகவல் தொழில்நுட்பப் பணி முனைப்புக் குழுவினை (IT Task Force) தமிழக முதல்வர் தலைமையில் அமைக்கப்பட்டு I.T. Policy ஒன்றையும் உருவாக்கி, பல வழிகளில் சிறந்து விளங்க முன்னேற்பாடு செய்துள்ளது.


- ஏறத்தாழ 340 கோடி ரூபாயில் தரமணியில், உலகப் புகழ்பெற்ற Indian Institute of Technology –க்கு அருகில் TIDEL PARK மென்பொருள் பூங்காவை உருவாக்கியுள்ளது.

- தமிழகத்தின் 'டிட்கோ' (TIDCO) நிறுவனத்தின் மூலம் Venture Capital Fund என்பதை ஆரம்பித்து, ஏறத்தாழ எட்டு கோடி ரூபாய் அளவிற்கு முதலீடு செய்யும் வகையில் 5 மென்பொருள் தொழில் முனைவோர்க்கு கடன் வழங்கியுள்ளது.

சென்னைக்கு அருகில் சிறுசேரி என்ற இடத்தில் 1000 ஏக்கர் பரப்பளவில் 'Hardware and Software Development Park ' (International Information Technology Park - IITP) ஒன்றை அமைக்க தமிழகத்தின் SIPCOT என்ற நிறுவனம் ஏற்பாடு செய்து வருகின்றது.

- தமிழகத்தில் 1200 உயர்நிலைப்பள்ளிகளில் கம்ப்யூட்டரை விருப்பப்பாடமாக மாணவர்கள் படிக்கும் வண்ணம் தொடங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பள்ளிப்படிப்பு இறுதியிலேயே ஏறத்தாழ 48 ஆயிரம் மாணவர்கள் கம்ப்யூட்டர் பயிற்சித் திறன் பெற்று வரப்போகின்றார்கள்.

- இன்று தமிழ்நாட்டில் ஏறத்தாழ 570 மென்பொருள் நிறுவனங்கள் உள்ளன. நான்கு ஆண்டுகளுக்கு முன் இது சற்றே 36 மென்பொருள் நிறுவனமே இருந்தன என்பதை நினைக்கையில் வளர்ச்சியின் வேகம் தெள்ள தெளிவாக தெரிகின்றது.




- மேலும் போலாரிஸ் மென்பொருள் தொழில்நுட்பப் பூங்கா நாவலூரிலும்; வேர்ல்ட் டெல் (World Tel), 13,000 சமுதாய இணைய மையங்களை தமிழகத்திலும், ஜப்பானின் ஃப்யுஜிகூரா மற்றும் TIDCO, TCIL இணைந்து OPTIC FIBRE TELECOM CABLES என்ற நிறுவனத்தையும்; SIPCOT–ன் பெருந்துறை வளர்ச்சி மையம், ஏறத்தாழ 2,800 ஏக்கர் பரப்பில், 110 கோடி ரூபாய் செலவில் தொடங்கவுள்ளது என்பது, தமிழகம் தகவல் தொழில்நுட்பக் கல்வியில் ஜெட் வேகத்தில் வளர்ந்து வருகின்றது என்பது பெருமைப்படக் கூடிய விஷயம்தான். இது ஓர் தொடக்கம்தான். இதனால் தமிழகம் உலக நாடுகளிடையே சிறப்பிடம் பெற வெகுதூரம் இல்லை என்பதை உணர்ந்து மாணவர்களும், பெற்றோர்களும் அயராது பாடுபடுவது சாலச் சிறந்தது.

## கால்நடை மருத்துவம்

+2 தேர்வில் வெற்றி பெற்றவர்களும், அண்ணா பல்கலைக்கழகம் நடத்திய நுழைவுத் தேர்வில் வெற்றி பெற்றவர்கள், தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகத்திலும், அதன் சார்புடைய கல்லூரிகளில் B.V.Sc./B.F.Sc.யில் சேரலாம்.

**தகுதி :**

| +2வில் | OC | BC | MBC/DNC | SC/ST |
|---|---|---|---|---|
| i. உயிரியல் | 60% | 60% | 55% | பாஸ் |
| ii. இயற்பியல் & வேதியியல் | 60% | 60% | 55% | பாஸ் |
| i&ii தோராயமாக | 70% | 65% | 60% | பாஸ் |

| **என்னென்ன கோர்ஸ்கள் உள்ளன :** | **தகுதிகள்** |
|---|---|
| B.V.Sc. | +2 |
| B.Fisheries Sc. | +2 |
| B.Forest Sc. | +2 |
| M.V.Sc. | B.V.Sc. |
| M.Fisheries Sc. | B.F.Sc. |
| Ph.D. (Veterinary) | M.V.Sc. |
| Ph.D.(Fisheries) | M.F.Sc. |
| PGDBM (Animal & Fisheries Science)) | B.V.Sc. B.F.Sc. |
| | B.Sc.(Agri) |
| | B.Sc.(Hort) |
| | B.Sc.(Forestry) |
| | B.E. |
| | B.L. |
| | M.B.B.S. |
| | B.Sc./B.A. |

**எங்கே படிக்கலாம் ?**

**FOREST COLLEGE AND RESEARCH INSTITUTE, METTUPALAYAM - 641 301, COIMBATORE DIST.**

- Forest Science (B.Ft.Sc.) - 4 years

**FISHERIES COLLEGE AND RESEARCH INSTITUTE, TUTICORIN - 628 008.**

**CENTRAL INSTITUTE OF FISHERIES NAUTICAL AND ENGINEERING TRAINING, S.N.CHETTY ST, ROYAPURAM, CHENNAI - 600 013.**

- Fisheries Science (B.F.Sc.) - 4 years

**CHENNAI VETERINARY COLLEGE, VEPERY, CHENNAI - 600 007.**

**VETERINARY COLLEGE AND RESEARCH INSTITUTE, NAMAKKAL, SALEM - 637 002**


- B.V.Sc., (5 years)



# பி.எஸ்.சி. நர்ஸிங்

3333 பேர்க்கு ஓர் நர்ஸ் என்ற விகிதம் இந்தியாவில் உள்ளது. சில மேலைநாடுகளில் 1000 பேர்க்கு ஒரு நர்ஸ் என்ற விகிதம் உள்ளது. படித்து முடித்தவுடன் சேவைக்குச் சேவை, வேலைக்கு வேலை குறைந்தது ரூ.2,000 மாத வருமானம் கிடைக்க வாய்ப்புள்ளது. வெளிநாடுகளில் B.Sc.(Nursing) படித்து முடித்த நர்சுகளுக்கு நல்ல வரவேற்புள்ளது. சென்னை மருத்துவக்கல்லூரி, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், வேலூர் கிறிஸ்துவ மருத்துவக்கல்லூரி, திருச்சி ஹோலி–கிராஸ் கல்லூரி, திண்டுக்கல் அடுத்த அம்பிலிகையில் கிறிஸ்டியன் பெல்லோஷிப் கம்யுனிட்டி ஹெல்த் சென்டர் போன்றவைகளை தமிழ்நாட்டில் குறிப்பிடலாம். 'நர்ஸிங் கோர்ஸ்' எங்கெங்கு நடத்தப்படுகின்றது என்பதை அட்டவணையில் பார்த்துப் பயன்பெறவும்.

B.Sc. நர்ஸிங் படித்தவர்கள், மேற்கொண்டு M.Sc. நர்ஸிங் சேரலாம். தொடர்ந்து படிக்கவேண்டும். தமிழ்நாட்டில் Ph.D.(நர்ஸிங்) முடித்தவர்கள் மிகக்குறைவு. எனவே விருப்பமுள்ள மாணவர்கள் ஆராய்ச்சிப் படிப்பு வரை கண்டிப்பாக பயில வேண்டும்.







B.Sc., பட்டப்படிப்பு இடம் கிடைக்காதவர்கள், முதலில் டிப்ளமோ படித்து, மீண்டும் பட்டப்படிப்புக்குத் தகுதி பெறலாம்.

மேலும் வெளிமாநிலங்களில் குறிப்பிடத்தக்க கல்லூரிகள் உள்ளன.

1. அகில இந்திய மருத்துவக் கல்லூரியின் நர்ஸிங் கல்லூரி (AIIMS, New Delhi) நியுடெல்லி.
2. நர்ஸிங் கல்லூரி, ஹைதராபாத்
3. நர்ஸிங் கல்லூரி, கோவா
4. லீலாபாய் தாக்கர்சே நர்ஸிங் கல்லூரி, மும்பாய்

# சட்டம்

இந்தியத் திருநாட்டில் சரியான அணுகுமுறையில் சட்டம் தெரியாதவர்கள் 80%க்கும் மேல் இருக்கின்றார்கள். மக்களுக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாக, தங்களுடைய வாழ்க்கையை அர்ப்பணிக்க விரும்பும் இளைஞர்கள் சட்டம் படிக்கலாம். 'சட்டம் என் கையில்' என்று சொல்ல விரும்பும் இளைஞர்களும் சட்டம் படித்து சட்ட மேதையாகலாம். பொதுவாழ்வில் நல்லதொரு மனிதனை உருவாக்க சட்டம் பயன்படுகிறது. தவறு, குற்றம் இவை இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

'தெரியாமல் செய்வது தவறு'
தெரிந்தே செய்வது குற்றம்'

ஆம்! குற்றம் புரிந்தவர்களைத் திருத்தி, அவர்களை நல்வழிப்படுத்தும் பணியினை நீதிபதிகளும், வக்கீல்களும் செய்கிறார்கள்.

பள்ளி உயர்கல்வியில் (+2) தேறி குறைந்தது 45% மதிப்பெண் பெற்ற மாணவர்கள் சட்டம் படிக்கத் தகுதி பெற்றவர்கள். தமிழ்நாட்டில், சென்னை, மதுரை, கோவை, திருச்சி, திருநெல்வேலி ஆகிய 5 இடங்களில் உள்ள அரசுக் கல்லூரிகளில் உள்ள ஐந்தாண்டு சட்டப் படிப்பில் சேர்ந்து கல்வி பயில்வதற்குப் பொதுவான நுழைவுத்தேர்வு நடத்தப்படுகிறது. நுழைவுத் தேர்வில் வெற்றி பெற்றவர்கள் 5 ஆண்டு சட்டப் படிப்பில் சேர தகுதி பெற்றவர்கள் ஆவார்கள். இவர்களுக்கு முதல் மூன்று ஆண்டு முடிவில், B.A. சட்டம் என்ற பட்டமும், தொடர்ந்து ஐந்து ஆண்டு முடிவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு B.L.(Law) பட்டமும் வழங்கப்படுகிறது.

மேலும் கல்லூரியில் ஏதேனும் ஒரு பாடப்பிரிவில் இளநிலை அல்லது முதுநிலை பட்டம் பெற்ற மாணவர்களும், முழுநேர 3 ஆண்டு சட்டப்படிப்பில் (B.L.) (3 years) சேரலாம். தமிழகத்தில் சட்டக் கல்விக்கென டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் உள்ளது. இந்தியாவில் சட்டப் படிப்பை அளிக்கும் மிகச்சிறந்த கல்வி நிலையங்களுள் குறிப்பிடத்தக்க நிறுவனம் 'National Law School', Bangalore ஆகும். இந்நிறுவனத்தில் மூத்த வழக்கறிஞர்கள் மற்றும் ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதிகளால் சட்டக்கல்வி அளிக்கப்படுகிறது. இப்பல்கலைக்கழகத்தில் இந்தியா மற்றும் வெளிநாடுகளைச் சார்ந்த மாணவர்களும் சேரலாம். இங்கு L.L.B.(Bachelor of Law) படிப்பும், M.L.M., J.S.T., M.Phil., L.L.D. போன்ற படிப்புகள் அளிக்கப்படுகின்றன. மருத்துவச் சட்டம் மற்றும் நெறிகள், மனித உரிமைகள் சட்டம் போன்ற முதுநிலை Diploma படிப்புகளும் அளிக்கப்படுகின்றன. இது தவிர எம்.பில்.(M.Phil) பட்ட வகுப்புகளை இக்கல்வி நிறுவனத்தில் அஞ்சல் வழியிலும் படிக்கலாம். L.L.B. பட்டப்படிப்பில் சேர +2 அல்லது அதற்குச் சமமான படிப்பில் குறைந்தது 50% மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். படிப்புக் கட்டணம் ஆண்டிற்கு ரூ.25,000 வரை செலவாகும். சட்டக் கல்லூரியில் மாணவர் சேர்க்கை குறித்த விளம்பரம் தினசரிகளில் வெளிவரும். நுழைவுத் தேர்வுகள் 'மே' மாதம் இறுதியில் நடைபெறலாம்.

சட்டப் படிப்பு படித்தவர்கள் State Service Commission, Civil Service Commission எழுதி Civil Service வேலைகளுக்குத் தகுதி பெறலாம். மேலும், இவர்கள் வங்கிகள், ஆயுட்காப்பீட்டுக் கழகங்கள், Corporate Sector போன்றவைகளில் சட்ட அலுவலர்களாகவும் நியமிக்கப்படுகிறார்கள். சட்டம் பயின்றவர்கள் சொந்தமாகவும் வழக்கறிஞர்கள் தொழில் செய்யலாம்.

சட்டக் கல்வி அளிக்கப்படும் கல்வி நிலையங்கள் பின்வருமாறு :

1. Dr. Ambedkar Government Law College, Chennai - 600 104.
2. Dr. Ambedkar Government Law College, Pondicherry - 605 001.
3. Central Law College, Salem - 636 008.
4. Coimbatore Law College, Coimbatore - 641 018.
5. Government Law College, Tiruchirapalli-620 002.



6. Madurai Law College, Madurai - 625 020.

7. National Law School (Deemed University), Bangalore - 560 072.

8. University of Madras, Chennai-600 005. (M.L. International and Constitutional Law)

**'பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால் கலந்தீமை யாற்றிரிந் தற்று'**

– என்று குறள் கூறும்.

பண்பில்லாதவன் அடைந்துள்ள பெருஞ்செல்வமானது, நல்ல ஆவின்பால் அது வைக்கப்பட்டுள்ள கலத்தின் குற்றத்தால் திரிந்துபட்டதுபோல் இழிந்து கெடும். மனித குலத்துக்கு உரிய பண்பினைச் சீரமைக்க, அவர்களுக்கு நல்லதொரு வழிகாட்டியாக இருக்க சட்டம் படித்தல் அவசியம். எனவே சட்டக் கல்வியை உயர்ந்ததொரு தொழிற்கல்வி எனக் குறிப்பிடலாம்.

சட்டம் என்பது ஒரு நாட்டின் முக்கியப் பணிகளில் ஒன்று. சட்டம் ஒழுங்காக இருந்தால் நாடும் நலமுடன் இருக்கும். எனவே சட்டம் படித்தவர்கள் சிறப்பான இடத்தை வாழ்க்கையில் பெறுகின்றனர் என்றால் மிகையாகாது. எந்த தொழிலையும் தொடங்குவதற்கு முன் சட்ட சிக்கல்கள் வராதவாறு சட்ட நிபுணர்கள் உதவியை நாட வேண்டியுள்ளது. பெரும்பாலும் மாணவர்கள், மருத்துவம், பொறியியல், விவசாயம், கணினி போன்ற துறைகளைத் தேர்ந்தெடுப்பர். கடைசியாக சட்டத்திற்கு விண்ணப்பம் செய்வர். அது இப்போது மாறி, **சட்டம்தான் என்னுடைய முதல் விருப்பம் என மாணவர்களிடையே மாறுதல் ஏற்பட்டுள்ளது.**

சட்டப்படிப்பில் +2 படித்த மாணவர்கள் சேரலாம். BL என்பது 5 ஆண்டுகாலப் படிப்பு ஆகும். மாலை நேரக் கல்லூரிகள் தற்போது இல்லை. இளநிலைப் படிப்பு படித்தவர்கள் 3 ஆண்டு முழுநேர BL படிக்கலாம். இவர்களுக்கு இரண்டாவது ஆண்டு முடிவில் BGL பட்டமும், மூன்றாவது ஆண்டு முடிவில் BL பட்டமும் வழங்கப்படும்.

### எங்கெங்கு 5 வருட BL படிப்பு உள்ளது? (வெளி மாநிலங்களில்)

- நேஷனல் லா ஸ்கூல், பெங்களூர்
- பெங்களூர் பல்கலைக்கழகம், ஜனனி பாரதி
- பாண்டிச்சேரி பல்கலைக்கழகம், பாண்டிச்சேரி
- வெங்கடேஸ்வராப் பல்கலைக்கழகம், திருப்பதி
- உஸ்மானியப் பல்கலைக்கழகம், ஹைதராபாத்.
- ஆந்திரப் பல்கலைக்கழகம், வால்டர்.
- கேரளாப் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்.
- இந்திய சட்டக் கல்லூரி, புதுடெல்லி.
- எம்.எஸ். பல்கலைக்கழகம், பரோடா.
- சிவாஜி பல்கலைக்கழகம், கோல்காபூர்.
- உட்கல் பல்கலைக்கழகம், புவனேஸ்வர்.

### சட்டத்தைப் படிக்க வேண்டுவோரிடம் இருக்க வேண்டிய குணாதிசயங்கள் (Essential attributes) என்ன?

- சட்டத்தைக் காக்கின்றோம் என்ற பொறுப்புணர்வு தேவை.
- சரளமாக ஆங்கிலத்தில் பேசவும், தமிழில் பேசவும் வேண்டும்.
- நீண்ட நேரம் பணி செய்ய வேண்டும்.
- புதிது புதிதாக நடக்கும் அன்றாட நிகழ்ச்சிகளை ஆராய்ந்து ஒழுங்குமுனைப் படுத்தும் திறன் பெற்று இருக்கவேண்டும்.
- நேர்மை, நீதி, மற்றவர்களுக்கு உதவும் மனப் பான்மை அதிகம் தேவை.
- பேச்சில் தெளிவு, உடனுக்குடன் விஷயங்களை உணரும் தன்மை, சரளமாகப் பேசுவதோடு, கருத்துக்களை மற்றவர்கள் ஒத்துக் கொள்ளக்கூடிய பேச்சு சாதுர்யம்.
- தோற்றம், நடை, பெருந்தன்மை, உயரம் போன்றவைகள் சட்டம் படிக்க விரும்புவோர்க்கு அழகு சேர்ப்பன ஆகும்.

### சட்டம் படித்தால் என்ன வேலை கிடைக்கும்?

- சமுதாயத்தில் சிறந்த மதிப்பைப் பெறுவர்.
- நீதிபதியாகப் பணிபுரியலாம்.
- சட்ட நிபுணர்களாகப் பணிபுரியலாம் (Legal Advisor, Advocate)
- பல பெரிய நிறுவனங்களில் சட்ட ஆலோசகர்களாக நியமனம் செய்யப்படுவர்.
- பாதுகாப்புப் படையின் முப்படைப் பிரிவில் சட்டம் படித்தவர்களுக்குத் தனிமரியாதை.
- உலக நிறுவனங்களில் பணிபுரிய வாய்ப்பு உள்ளது.
- எல்லாத்துறையிலும் சட்டவல்லுநர்கள் தேவைப் படுகின்றனர்.

# விவசாயம்




விவசாயம்தான் இந்தியாவின் 70% மேல் மக்களுக்கு முக்கியத் தொழிலாக உள்ளது. விவசாயத்தின் வளர்ச்சி இந்தியாவின் முதுகெலும்பாக உள்ளது. தொழிற்புரட்சியின் காரணமாக சற்று மாறியது. இந்த நூற்றாண்டின் தொலைதொடர் தொழிற்நுட்பத்தால் மேலும் வளர்ந்து விவசாயப் புரட்சி ஏற்பட்டுள்ளது. எங்கெங்கே விவசாயப் படிப்பு உள்ளது என்பதைப் பார்ப்போம் :

**Agricultural College and Research Institute, Coimbatore - 641 003,**

**Agricultural College and Research Institute, Madurai - 625 104,**


**Agricultural College and Research Institute, Killikulam - 628 252, Tuticorin District**

**Anbil Dharmalingam Agricultural College and Research Insitute, Nawalur, Kuttapattu, Trichy-620 009.**

- ☐ B.Sc.(Agri) - 4 years
- ☐ B.E.(Agri) - 5 years

**Agricultural College and Res.Institute Kumulur, Pallapuram Post, Poovalur, Trichy - 627 252**

- ☐ B.Tech (Food Processing Engineering)



**Home Science College and Research Institute, Agricultural College Campus, Madurai-625 104.**

- ☐ B.Sc.(Home Science) - 3 years

**Adhiparasakthi Agricultural College, G.B. Nagar, Kalavai - 632 506, Vellore District.**

- ☐ B.Sc.(Agri) - 4 years

**Pandit Jawaharlal Nehru College of Agriculture Karaikal - 609 605**

- ☐ B.Sc.(Agri) - 4 years

**Horticulture College & Res. Institute, Periyakulam - 625 604**

- ☐ B.Sc.(Horticulture) - 4 years

**Forest College & Res.Institute Mettupalayam - 641 301, Coimbatore District**

- ☐ B.Sc.(Forestry) - 4 years

**Gandhigram Rural Institute Gandhigram, Dindigul**

- ☐ Diploma (Agri) - 2 years

★ ★ ★

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 5368926/5368927/5364906 **தொலையச்சு : 5368926**




தேனி மாவட்டம்



நாமக்கல் மாவட்டம் - பரமத்தி



திருவள்ளூர் மாவட்டம் - ஆயப்பாக்கம்



மதுரை மாவட்டம் - திருப்பரங்குன்றம்



திருச்சி மாவட்டம்



சாத்தான்குளம்



திண்டுக்கல் நகராட்சி




மதுரை மாவட்டம் - திருமங்கலம்



புதுக்கோட்டை மாவட்டம்



குன்னூர் நகராட்சி



விருதுநகர் மாவட்டம்

கடந்த ஆண்டில்
**ரூ.140 கோடி**
செலவில்
**2004 கி.மீ.**
கான்கிரீட் தெருக்கள்
அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டில்
**ரூ. 250 கோடி**
மதிப்பீட்டில்
**3000 கி.மீ.**
கான்கிரீட் தெருக்கள்
அமைக்கப்படவுள்ளது.

பதிவு எண்.M.8676
Licence No. TN/MS(c)/PP-23

